# இனிமேல் சம்பவிக்கப் போகிறது என்ன



PASTOR. S.ROMILTON



# இனிமேல் சம்பவிக்கப் போகிறது என்ன ?

Pastor. S. Romilton

# அட்டவணை


05-11 | 2019 பாராளுமன்றத் தேர்தல்

CHAPTER-1
12-17 | இனிமேல் சம்பவிக்கப் போகிறது என்ன?

CHAPTER-2
18-35 | நேபுகாத்நேச்சார் கண்ட சிலை

CHAPTER-3
36-51 | பொற்சிலை

CHAPTER-4
52-79 | நேபுகாத்நேச்சார் கண்ட விருட்சமும் இந்தியத் திருச்சபையும்

CHAPTER-5
80-91 | மெனே மெனே தெக்கேல் உப்பார்சின்

CHAPTER-6
92-107 | தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது

CHAPTER-7
108-118 | தேவனின் கரங்களில் இந்துத்துவா என்னும் கருவி

CHAPTER-8
119-125 | நாங்கள் என்ன செய்ய வேண்டும் ?

CHAPTER-9
126-131 | India: Post - Christian and Pre - Kingdom

# 2019 பாராளுமன்றத் தேர்தல்

நாட்டிற்கும் இந்திய சபைக்கும் மிக முக்கியமான, இன்றியமையாததான தேர்தல் முடிவுகள் !....

தேர்தலுக்கு ஒன்றரை வருடங்களுக்கு முன்பிருந்தே ஆங்காங்கே ஜெபங்கள் !



- சபைகளில் ஜெபங்கள் !
- 12 மணி நேர உபவாச ஜெபங்கள் !
- 24 மணி நேர ஜெபங்கள் !
- 72 மணி நேர ஜெபங்கள் !
- 21 நாள் ஜெபங்கள் !
- 40 நாள் ஜெபங்கள் !
- 52 நாள் ஜெபங்கள் !
- திறப்பின் வாசல் ஜெபங்கள் !
- தீர்க்கதரிசன ஜெபங்கள் !
- சங்கிலித்தொடர் ஜெபங்கள் !

## ஜெபம்! ஜெபம் !! ஜெபம் !!!

இந்தத் தேர்தலுக்காக ஜெபித்தது போல இத்தனை வருட சபை வரலாற்றில் இந்தியத் திருச்சபை, முக்கியமாக தென்னிந்திய சபைகள், வேறு எந்தத் தேர்தலுக்கும் இப்படி ஊக்கமாகவும் பாரத்தோடும் ஜெபித்திருக்கும் என்பது சந்தேகமே !

2014 தேர்தலின் போதே ஒருவர் சொன்னார்..
" முழங்கால் போட்டால் போதும் பிரதர்.. எல்லாம் மாறும் பாருங்க !"

உண்மை தான் !

ஆனால் இத்தனை இரவு பகல் ஜெபங்களுக்கும் உபவாசங்களுக்கும் பிறகும், முழுநிச்சயமாய் நம்பியிருந்த முடிவுகள் வராமல், நம்மில் அநேகர் விரும்பாத, எதிர்பார்த்திராத ஒன்று நடந்திருக்கிறது என்றால், உண்மையாய் ஜெபித்தவர்கள், ஜெபத்தில் போராடியவர்கள், ஆண்டவரை முழுவதுமாய் நம்பியிருந்தவர்கள் மனதில் சில நியாயமான, துக்கம் நிறைந்த கேள்விகள்  எழும்புவது இயல்பு..

( யாரோ சிலர் தீர்க்கதரிசனம் என்று சொல்லியதை அப்படியே நம்பிக் கொண்டிருந்தவர்களை விட்டுவிடுவோம் !)

அநேக தேவபிள்ளைகளின்
நியாயமான கேள்விகள்
இவைகள் தான் !



# இவ்வளவு ஜெபங்களுக்குப் பிறகும் ஆண்டவர் ஏன் இதை அனுமதித்தார் ?

▸ ஜெபித்தவர்களில் உண்மையாய் கண்ணீரோடு போராடியவர்கள் எத்தனை எத்தனை பேர் இருந்திருப்பார்கள் ! அவர்களது ஜெபங்களையெல்லாம் தேவன் ஒதுக்கி வைத்து விட்டாரோ ?

▸ " ஆண்டவரே, இன்னும் கொஞ்சக்காலம் விடுதலையாய் ஊழியம் செய்ய நாட்கள் கூட்டிக் கொடுக்கப்படுமானால் உமக்காக ஏதாவது செய்யலாமே ?" என்று ஏங்கியவர்கள் எத்தனையோ பேர் நம்மில் உண்டே ?

▸ “சரி.. கர்த்தர் நம்ம ஜெபத்தைத் தான் கேட்கல.. நம்மை விட எத்தனையோ பரிசுத்தவான்களும் ஆண்டவருடைய இருதயத்துக்கு ஏற்றவர்களும் நமது சபைகளில் உண்டே ? அவர்களுடைய ஜெபத்தைக் கூடவா ஆண்டவர் கேட்கவில்லை ?”

▸ தீர்க்கதரிசனம் என்ற பெயரில் ஆர்வக் கோளாறினி-மித்தமும், தங்களை மற்றவர்களை விட உயர்வாய்க் காட்டிக் கொள்ளவும், உணர்ச்சிவசப்பட்டும் எதை எதையோ பேசி உளறிக் கொட்டி, இன்று தாங்களும் அசிங்கப்பட்டு, தங்கள் ஆண்டவருடைய பெயருக்கும் நிந்தையை உண்டுபண்ணக் காரணமாய் இருந்ததினிமித்தம், உண்மையான ஆவிக்குரியவர்களும் வெட்கப்பட்டு, இன்று புறஜாதிகளுக்கு முன் தலைகுனிந்து நிற்க வேண்டிய அவசியம் என்ன ?

நம்முடைய தேவன் இரக்கங்களின் தேவன் அல்லவா ? தமது ஜனத்தின் ஜெபத்துக்கு பதில் கொடுப்பவர் அல்லவா ?

▸ " என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன் " என்று அவர் சொல்லவில்லையா ?

▸ ஜெபத்துக்கு பதில் தரும் வாக்குத்தத்தங்கள் தான் எத்தனை எத்தனை !

▸ ஆண்டவர் தாம் தெரிந்து கொண்டவர்களின் ஜெபத்தைத் தள்ளிவிடுவாரோ ?
இனி ஒரு போதும் தயை செய்யாதிருப்பாரோ ?
ஆண்டவருடைய கிருபை அற்றுப்போயிற்றோ ?
வாக்குத்தத்தமானது ஒழிந்து போயிற்றோ ?
தேவன் இரக்கம் செய்ய மறந்தாரோ ?

**கோபத்தினாலே தமது உருக்கமான இரக்கங்களை அடைத்துக் கொண்டாரோ ?**
**(சங் 77: 7-9)** என்று..

இரவு பகலாய் தங்கள் இருதயத்தோடு சம்பாஷித்துக் கொண்டு புலம்பித் திரிகிற ஒரு மீதியான ஜனம் இன்றும் இருக்கத்தான் செய்கிறது !

தேர்தல் முடிவுகளுக்குப்பின் தோற்றுப் போன கட்சிகள் தோல்விக்கான விடை தேடுவது போல.. விளையாட்டில் தோற்றுவிட்ட அணி, தங்கள் தோல்விக்கான காரணங்களை ஆராய்வது போல..நமது சபைகளுக்கும் ஒரு ஆவிக்குரிய போஸ்ட்மார்ட்டம் இன்று அவசியத்திலும் அவசியம் !"

**எவன் ஞானமுள்ளவனோ அவன் இவைகளைக் கவனிக்கக்கடவன்.."** (சங் 107: 43)

சாதாரணமாக யோசிக்கக் கூடிய
கர்த்தருடைய பிள்ளைகளுக்கும் கூட இதில்
இரண்டு காரியங்கள் தெளிவாக வெளிப்படும்..

## ஒன்று...

இத்தனை ஜெபங்களுக்குப் பிறகும் நாம் எதிர்பார்த்த முடிவு வரவில்லை எனும்போது, இவைகளுக்கு மேலாக தேவனுடைய தெளிவான திட்டம் ஒன்று நிச்சயமாய் இதில் இருக்கிறது !

## இரண்டாவது...

தேர்தல் முடிவுகளுக்கு முன்னாலேயே எதைக் குறித்தும் கவலையே அற்று குதியாட்டம் போட்ட சபைகள், எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் கும்மாளம் போட்ட கூத்தாடிகள், கோமாளிகள், குரங்காட்டிகள், வித்தை காட்டிக் கொண்டிருக்கும் இந்த நாட்களிலே, தேர்தல் முடிவுகளும் இவர்களுக்கு சாதகமாக அமைந்து, இன்னும் கேட்பார் கேள்வியின்றி கூத்தாட்டம் குத்தாட்டம் போட இவர்களுக்கு திறந்த வாசல் கிடைக்குமானால், சபையின் நிலை, ' குரங்கு கை பூமாலை ' தான் என்று நமக்கே தெரிகிற போது, சகலமும் அறிந்த சர்வ ஞானி தமது சபையின் எதிர்காலத்தை அறியாரோ ?

## மூன்றாவது...

நமது இரட்சகரின் வருகைக்கு முன்பாக ஒரு பெரிய அசைவைக் காண, தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்ட இரட்சண்யமான அந்த வரலாறு காணா எழுப்புதல் ஒன்றைத் தங்கள் கண்ணாரக் காண கடைசிக்கால சிமியோன்கள் பலர் வாஞ்சையாய் ஏக்கமாய் காத்திருக்கவே செய்கின்றனரே !

▸ **ஆனால்**.." வெளிச்சம் உண்டாகக்கடவது " என்று சொல்லி, வெளிச்சத்தை மட்டுமல்ல, அதைத் தொடர்ந்து மிக அழகான ஒரு உலகை தேவன் படைத்தது, வேதத்தின் முதல் எழுப்புதல்..

ஆனால் அதற்கு முன்னால் பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய், ஆழத்தின் மேல் இருளுமாய் இருந்தது உண்மையல்லவோ ?

▸ எரிந்து பிரகாசிக்கிற விளக்காய் காட்டுத் தீர்க்கன் யோவான் ஸ்நானகன், கிறிஸ்துவுக்கு வழியை ஆயத்தப்படுத்தி, உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிக்கிற ஒளியாய், அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கு முன்னே, மல்கியாவுக்கும் மத்தேயுவுக்கும் இடையேயான 400 வருட காலங்கள் வரலாற்றிலே இருண்டு கிடக்கவில்லையோ ?

▸ இன்னும் ஒரு தரம் அவர் வானத்தையும் பூமியையும் அசையப்பண்ணி, முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும் பிந்தின ஆலயத்தின் மகிமையை மிகப் பெரிதாய் இருக்கும் என்று சொல்லப்பட்ட போது..

அதற்கு முன்னால்...

எருசலேம் நேபுகாத்நேச்சாரால் முற்றுகையிடப்பட்டு, அதின் தேவாலயம் இடிக்கப்பட்டு, அலங்கங்களும் வாசல்களும் சுட்டெரிக்கப்பட்டு, அதிலிருந்த பரிசுத்த பாத்திரங்கள் பாபிலோனுக்குக் கொண்டு போகப்பட்டு, ராஜ குலத்தாரிலும் துரைமக்களிலும் விசேஷித்தவர்கள் பிடிக்கப்பட்டு, மூக்கிலே துறடு போடப்பட்டு, கைகளும் கால்களும் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு,



பாலைவனத்திலே இழுத்துச் செல்லப்பட்டு,பாபிலோனிலே அவர்கள் 70 வருடகாலம் சிறையிருப்பிலே இருக்கப்பட ஒரு உபத்திரவக்கால சமயம் அவர்கள் மேல் அனுமதிக்கப்பட வேண்டியது தேவனுக்கு அவசியமாய் இருக்கவில்லையோ ?

- வரலாற்றில் எங்கெங்கெல்லாம் எழுப்புதல் வெடித்துச் சிதறியதோ, அங்கெல்லாம், அதற்கு முன்னால் ஒரு இருண்டகாலமும் உபத்திரவ காலமும் இருக்கவே செய்தது போல, வரும் காலத்தில் நாம் எதிர்பார்த்திருக்கும் இந்தப் பிந்திய ஆலயத்தின் மகிமைக்கு முன்பாக அந்த 70 வருட சிறையிருப்பைப் போலவே, இந்திய சபைகளின் மேல் ஒரு ஏழு காலங்கள் ஒன்று கடந்து போக தேவன் அனுமதிக்கப் போகிறாரோ ?"

**நான் தீர்க்கதரிசியுமல்ல..**
**தீர்க்கதரிசிக்குப் புத்திரனுமல்ல.." (ஆமோஸ் 7:14)**

ஆனாலும் தேவன் இந்தத் தேர்தல் முடிவு மூலம் செய்திருக்கும் மிகப்பெரிய காரியத்தையும், தேசத்தில் நடந்து வரும் அரசியல் அசைவுகளையும், காய் நகர்த்தல்களையும் மிக உன்னிப்பாகக் கவனிக்கும் போது சில காரியங்கள் இலை மறைவு காய்மறைவாக புலப்படவே செய்கிறது !

# இனிமேல் சம்பவிக்கப் போகிறது என்ன

(தானியேல்.2:29)

## Chapter - 1

இனிமேல் சம்பவிக்கப் போகிறது என்ன என்ற கேள்வியை நமக்கு நாமே கேட்க நமது மூளை மழுங்கியிருக்குமானால், அல்லது "இதையெல்லாம் யோசிக்கிறதுக்கு யாருக்கு நேரம் இருக்கிறது ?" என்று எந்தக் கவலையும் இன்றி எப்போதும் போல இந்தக் கிறிஸ்தவ சமுதாயம் தன்னையும் தன் குடும்பத்தையும் மாத்திரமே பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருக்குமானால், இந்தக் கேள்வியை இரவில் தன் படுக்கையில் தனக்குள்ளே கேட்டு தீவிர யோசனையில் இருந்த புறஜாதி மன்னன் நேபுகாத்நேச்சாரிடம் போய் கேட்டு கற்க வேண்டும்..

நாம் முன்னுரையில் பார்த்தது போல,முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும் நமது காலத்தின் பிந்திய ஆலயத்தின் பெரிதான மகிமையை நம் கண்கள் காணச்செய்ய வேண்டுமானால், அதற்கு முன்பாக தேவன் சில காரியங்களை தேசத்தில் செய்யவும் அனுமதிக்கவும் முடிவு செய்து விட்டாரோ ?

வேதம் அப்படித்தான் சொல்கிறது..
70 வருட சிறையிருப்பின் முதல் சில ஆண்டுகளின் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள தானியேல் முதல் 6 அதிகாரங்களை, நமது தேசத்தின் இந்த நாட்களோடு ஒப்பிட்டுப் பார்க்கவும், அப்படிப்பட்ட காரியங்களை தேவன் நமது சபைகளுக்கு வைத்திருப்பாரானால், இதன் மூலம் அறிந்து கொள்ள வேண்டியவைகளை அறிந்து கொண்டு, நமது காரியங்களை சீக்கிரமே ஒழுங்குபடுத்தி சபையை அந்த நாட்களுக்கு மிகத்துரிதமாக ஆயத்தப்-படுத்தவும் தேவன் நமக்கு உதவி செய்வாராக !

## [தானியேல் 1: 1-8]

**1:1- நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு வந்து அதை முற்றிக்கை போட்டான்..**
இன்றைக்கு தேசமும் சபைகளும் சத்துருவால் முற்றிக்கை போடப்பட்டிருக்கிறதோ ?

**1:2- "ஆண்டவர் யோயாக்கீமையும், தேவனுடைய ஆலயத்தின் பாத்திரங்களில் சிலவற்றையும் அவன் கையில் ஒப்புக்கொடுத்தார்.."**

**ஆண்டவர் இன்றைய நமது நவீன நேபுகாத்நேச்சார் கையிலே தமது பரிசுத்த சபைகள் நிறைந்த ஆவிக்குரிய நமது தலைநகரையும் , நமது சமாதான நகரங்களையும், கிறிஸ்தவ நகரங்களையும் ஒப்புக்கொடுக்கப் போகிறாரோ ?**

▸ அவன் வந்து நமது நகரங்களை வளைந்து கொள்ளப் போகிறானோ ?

▸ தேவனுடைய பரிசுத்த ஆலயமாகிய சபை கட்டிடங்கள் மட்டுமல்ல, நமது ஐக்கியங்களும் ஆராதனைகளும் தரைமட்டமாக்கப்படப் போகிறதோ ?

▸ நமது ஆலயத்தின் பரிசுத்த பாத்திரங்களாகிய தேவனுடைய பிள்ளைகள் பிடிபட்டு, அவனுடைய தேவனுடைய கோவிலுக்குள் கொண்டு செல்லப்பட்டு, (Ghar wapsi ???), அவனது தேவனுடைய பண்டக சாலைகளுக்குள் சிறை வைக்கப்படுவார்களோ ?

▸ 1:3- நமது மக்களாகிய யூத ராஜனின் குலத்தவர்களும், ஆவிக்குரிய மிகச்சிறந்த மேன்மக்களும், யாதொரு மாசில்லாத பரிசுத்தவான்களும், உள்ளான உள்ளத்தில் அழகுள்ளவர்களும், சகல ஆவிக்குரிய ஞானத்திலும் தேறினவர்களும், அறிவில் சிறந்த நம்மவர்களும்,

கல்வியில் நிபுணரும், கர்த்தராகிய ராஜனின் அரண்மனையிலே அவரை சேவித்துக் கொண்டிருந்த திறமையுள்ள நமது ஊழியர்களும் வாலிபர்களும் கைது செய்யப்பட்டு, இன்றைய புறஜாதிகளை சேவிக்க வேண்டிய காலங்கள் நம் மேல் கடந்து போக தேவன் அனுமதிக்கப் போகிறாரோ ?

- அந்த 70 நாட்களில் தீர்க்கதரிசியாகிய எரேமியா பிடிக்கப்பட்டு ஆலயத்தின் முகப்பிலுள்ள சதுசதுப்பான காவல் கிடங்கில் அடைக்கப்பட்டது போல, இன்றைய நமது உண்மையான பல தீர்க்கதரிசிகளும், "என் தலை தண்ணீரும் என் கண்கள் கண்ணீர் ஊற்றுமாய் இருக்குமானால் நலமாயிருக்கும்.." என்று இரவும் பகலும் புலம்பி அழும் தேவ பிள்ளைகளும் சிறைப்படப் போகிறார்களோ ?

அப்படியிருக்கும் பட்சத்தில்..

**தானியேலுக்கும் அவனது நண்பர்களுக்கும் ஒரே நாளிலே சகலமும் மாறிப் போனது போல...**

**அதாவது.. இடம் மாறிப்போனது...**

- சூழ்நிலைகள் மாறிப்போயின...
- மொழி மாறிப் போனது...
- உணவுப்பழக்கம் மாறிப்போனது...
- சூழ்ந்திருக்கும் மக்கள் கூட்டம் மாறிப்போனது...
- மதமும் ஆராதனை முறைகளும் மாறிப்போனது...
- ஆடைகள் சிறையிருப்பின் ஆடையாய் மாறிப்போனது..

ஏன்... அவர்கள் பெயர்களும் கூட மாற்றப்பட்டன... எல்லாமே வலுக்கட்டாயமாய் ! வரப்போகும் நாட்களிலும் எல்லாமே மாறப்போகிறது கூடவே, கட்டாய மாற்றங்கள் நிகழப்போவது இப்போதே கண்கூடாகத் தெரிகிறது !

# இதோ...

## இப்போதே கூக்குரல் கேட்கிறது..

# ஒரே நாடு

தேர்தல் !
மொழி !
மதம் !
கட்சி !
தலைவர் !
தளபதி !
இன மக்கள் !



## UNIFORM CIVIL CODE ?

தானியேலின் சிறையிருப்பின் ஆரம்ப நாட்களைப் போலவே இப்போதும் சகலமும் கட்டாயமாய்த் திணிக்கப்படப் போகிறதோ ?

இது சாத்தியமாகிறதோ இல்லையோ, இதை சாத்தியமாக்க ஒரு ஆட்டம் ஆடிப்பார்க்கத்தான் போகிறார்கள் ! பொறுத்திருந்து பார்க்க அதிக நாட்கள் இல்லை !

**1:8 - ஆனால் தானியேலும் நண்பர்களும், தங்களை சுற்றி என்ன தான் மாறினாலும் தாங்கள் மாறப்போவதில்லை, தாங்கள் தீட்டுப்படப்போவதில்லை என்றும், முழு தேசமும் தாழ விழுந்து பணிந்தாலும், எங்கள் தேவன் எங்களை விடுவிக்காமலே போனாலும் கூட நாங்கள் மண்டியிடப்போவதில்லை என்றும்...**

**மாற்றப்படவே முடியாத தன் மரண சாசனத்துக்கு கையெழுத்து வைக்கப்பட்டு, அன்றிரவே தான் சிங்கங்களுக்கு இரையாகிப்போனாலும் தன் தேவனையோ, அவரை ஆராதித்துத் தொழுது கொள்வதையோ, அவரையே நோக்கி ஜெபிக்கும் பழக்கத்தையோ எந்த சூழ்நிலையிலும் தான் மாற்றிக் கொள்ளப்போவதே இல்லை என்று தீர்மானம் எடுத்த தானியேல் போல நமது வாலிபச்செல்வங்களும் இளைஞர் சமுதாயமும் தீர்மானம் பண்ணி,வரப்போகும் நிர்ப்பந்தமான நாட்களில் உறுதியாய் நிற்குமோ ?**

இது மாத்திரமல்ல...

**அன்று தானியேலும் நண்பர்களும் கட்டாயமாய் சிறைப்பிடிக்கப்பட்டது போல இன்றைய நமது கிறிஸ்தவ வாலிப சமுதாயமும் வஞ்சனையினால் சிறை பிடிக்கப்பட்டு, அன்று அவர்களுக்கு முன்பாக வைக்கப்பட்ட ராஜ போஜனம் போல நமது சபையின் வாலிபர்களுக்கும் சிறுவர்களுக்கும் பிள்ளைகளுக்கும்**

முன்பாக இன்று பிசாசு படைக்கும் உலக மாயைகளான மொபைலும், இன்ட்டர்நெட்டும், Face bookம், Twitterம், Pub jiயும், Tik Tokம், அழகுகளும் ஆபாசங்களும் Fashion களும் இச்சைகளும் தான் எத்தனை எத்தனை ?

“நாங்கள் வலுக்கட்டாயமாய் சிறைப்பட்டுப் போனாலும், அப்படிப்பட்ட நிலையிலும், நாங்கள் எது ஒன்றினாலும் தீட்டுப்பட மாட்டோம்" என்ற தானியேலின் தீர்மானம் அல்லவோ அவர்களை தேவனுக்கென்று தனித்-தன்மையானவர்களாய் உயர்த்தியது ?

உலகத்தின் இந்த இச்சைகளுக்கு முன் மண்டியிடாதவர்கள் அல்லவோ வரப்போகும் உபத்திரவத்தின் போது தீர்க்கமாய், தீர்மானமாய், தீனமாய், தீயாய் நிற்க முடியும் !

தேவன் நமது இன்றைய நவீன கிறிஸ்தவ சமுதாயத்தை வரப்போகும் மிகப்பெரிய குருதிப் பிரளயத்துக்கு எச்சரிப்புப் பெற்று தன்னைக் காத்துக் கொள்ளக் கிருபை தருவாராக !



# நேபுகாத்நேச்சார் கண்ட சிலை

**Chapter - 2**

**"மறைபொருட்களை வெளிப்படுத்துகிற... தேவன் கடைசி நாட்களில் சம்பவிப்பதை தெரிவித்திருக்கிறார் (தானி 2: 28)**

தானி 2: 28 - 45

**தானியேல் இரண்டாம் அதிகாரம்**

நேபுகாத்நேச்சாருக்கு சொப்பனத்தில் காட்டப்பட்ட சிலை, உலகத்தின் சாம்ராஜ்யங்களைக் குறிப்பதாக இருந்தாலும், அந்த சிலையின் தலை முதல் பாதம் வரை காணப்படும் ஒவ்வொரு பகுதியும், உலோகத்தின் தரமும், உலகளாவிய கிறிஸ்தவ திருச்சபையின் அவ்வப்போதிருந்த காலத்துக்கும் தரத்துக்கும் மட்டுமல்ல..

நமது இந்திய சபையின் 2000 வருட சரித்திரத்துக்கும், அதின் தரத்துக்கும் கூட ஒத்ததாய் இருக்கக்கூடுமோ என்பதே இன்றைய கேள்வி !

மாத்திரமல்ல அது இன்றைய சராசரி விசுவாசியின் ஆவிக்குரிய நிலையும் கூட...

காரணம்.. அந்தச் சிலையானது கடைசி நாட்களுக்கு அடையாளம் என்று தீர்க்கதரிசியாகிய தானியேலே சொன்னார் அல்லவோ ?

இங்கு இறையியலைப் பேசவோ, நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்துக்குப் புதிய விளக்கம் கொடுக்கும் வேதபாடம் எடுக்கவோ நாம் விழையவில்லை..

மாறாக, தேவனுக்கும் அவரது ஜனத்துக்கும் விரோதமான புறஜாதி சாம்ராஜ்யங்களின் குறைவான தரத்தைப் போலவே, சபை வரலாற்றில் நடந்திருக்கும், மற்றும் நடக்கும் சம்பவங்களும் தேவ சபையின் தரம் தேய்ந்து கொண்டே வருவதைக் காண்பிக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, நமது உள்நாட்டு எழுப்புதலில் இந்தியத் திருச்சபையின் பங்கு குறைந்துவிடக் கூடாது என்பதை அறிவுறுத்தவே விழைகிறேன்.

கைகளால் பெயர்க்கப்படாத கல்லாம் இயேசு, சபையின் காலத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, ஆயிரம் வருட அரசாட்சி ஆரம்பிக்கும் போது, விண்ணவரின் சபையும் அதில் அங்கமாய் மாறிவிட வேண்டும் என்பதே என் ஆதங்கம் !



## முதலாவது..
## சிலையின் தலை..

### பசும்பொன்னான தலை

**இது, முதல் மூன்று நூற்றாண்டுத் திருச்சபையோ ?**
கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் தோன்றிய ஆதித்திருச்சபையின் எழுப்புதல், சபையின் பொற்கால எழுப்புதலாய், இன்றும் நமக்கு சவால் விட்டு நிற்கிறதே ! நிழல் பட்டு எழும்புவோரும், கச்சைகளும் கைக்குட்டைகளும் போடப்படும்போது சுகமடைவாரும் எங்கே ?

**பொன்னான பவுல்களும் வைராக்கிய வைரங்களான பேதுருக்களும் யோவான்களும் எங்கே ?**

**பரிசுத்தத்துக்கு அடையாளமான பொன்னான அந்த ஆதித்திருச்சபை, பரிசுத்தத்திலும் பொன்னாய் ஜொலிக்கவில்லையோ ?**

மட்டுமல்ல.. ஆதி சபையின் விசுவாசம் சோதிக்கப்பட்டு, விடுதலை பெறச் சம்மதியாமல் வாதிக்கப்பட்ட அவர்கள், நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவல்களையும் அனுபவித்து, கல்லெறியுண்டு, வாளால் அறுப்புண்டு, பரீட்சை பார்க்கப்பட்டு, பட்டயத்தினாலே வெட்டப்பட்டு, கொலோசியம் என்ற கொலைக்களத்திலே வனவிலங்குகளினாலே பீறப்பட்டு, நீரோவின் மாளிகை வளாகத்திலே மாலை நேர வெளிச்சத்துக்காகக் கம்பத்திலே கட்டப்பட்டு அக்கினி ஜுவாலைகளால் தகனிக்கப்பட்டு, கொதிக்கிற எண்ணெய்க் கொப்பரைகளிலே பொரிக்கப்பட்டு, மதம் பிடித்த காளை மற்றும் குதிரை வால்களில் கட்டப்பட்டு வீதியெங்கும் இரத்தம் சொட்டச்சொட்ட இழுத்துச் செல்லப்பட்டு, தலைகீழாக சிலுவைகளில் அறையப்பட்டு, உயிரோடு தோலுரிக்கப்பட்டு இன்னும் என்னென்னவோ விதமான மரணங்களால் மரிக்கவில்லையோ ?

**அவர்கள் செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக் கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தவர்களாய், வனாந்திரங்களிலேயும், குகைகளிலேயும், பூமியின் வெடிப்புக்களிலேயும், ரோமாபுரியின் கேட்டகோம்ஸ் என்ற நிலத்தடி கல்லறை-களுக்குள்ளேயும் சிதறுண்டு அலைந்து,**

அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படுகிறது போல பலவிதமான சோதனைகளினாலே அவர்களது விசுவாசம் சோதிக்கப்பட்டு, பொன்னாக விளங்கிய (எபி 11:35-38 / 1 பேதுரு 1: 7) முதல் மூன்று நூற்றாண்டுக் கிறிஸ்தவ திருச்சபைகளும் வரலாற்றிலே பசும்பொன் தலை போல விளங்கவில்லையோ ?

## 2:39 - வெள்ளி மார்பும் புயங்களும் :

நாலாம் நூற்றாண்டுக்குப்பின் வந்த ரோம சபைகளில் கிறிஸ்தவமும் விசுவாசமும் தக்கவைத்துக் கொள்ள முயற்சி செய்யப்பட்டாலும், கிறிஸ்தவம் பாரம்பரியங்களுக்குள்ளும், சடங்காச்சாரங்களுக்குள்ளும், மன்னர்கள் மற்றும் போப்பாண்டவர்கள் கைகளிலும் சிக்கி, சபையின் தரமானது தங்கத்தை விட தரம் குறைந்த வெள்ளியின் தரம் கொண்ட சபையாய் அது மாறிவிடவில்லையோ ?



**மட்டுமல்ல..**
**அந்தக் காலங்களில் ஆங்காங்கே அவர்களது பெயர்ப் பிரஸ்தாபத்துக்கென்று எழுப்பப்பட்ட வானத்தைத் தொடும்  ஊசிக்கோபுரங்கள் கொண்ட கதீட்ரல்களும், மாமடங்களும், பசிலிக்காக்களும், மார்பிலும் தோளிலும் புயங்களிலும் பெலன் கொண்ட மனிதனின் மார்தட்டும் பெருமையையும், புஜபலம் கொண்ட அவனது மாம்ச பெலனுக்கும் அடையாளமான சின்னங்களாய்ப் பார்க்கப்பட்டு, பொன்னான சபையின் நிலையிலிருந்து இறங்கி, அன்றைய ரோம சபை, நேபுகாத்நேச்சாரின் சிலையின் வெள்ளி மார்புக்கும் புயங்களுக்கும் ஒப்பாகிப் போகவில்லையோ ?**

## 2:32,39 - வெண்கலமான வயிறும் தொடையும்

பழைய ஏற்பாட்டில் ரெகொபெயாமின் நாட்களிலே எகிப்தின் ராஜா எருசலேமுக்கு வந்து, சாலமோன் செய்வித்திருந்த பொன் பரிசைகளை எடுத்துக்கொண்டு போய்விட, ரெகொபெயாமோ, பொன்னுக்குப் பதிலாக வெண்கலப் பரிசைகளை செய்வித்தான் என்கிறது வரலாறு ! (1 ராஜா 14:26,27)



அன்றும் இன்றும் இதே நிலை தான் ! சத்துரு, பசும்பொன்னான ஆவிக்குரிய அனுபவங்களையும், காலங்களையும், மனிதர்களையும் சபையின் சரித்திர கால ஓட்டத்தில் கொள்ளையாடிக் கொண்டு போய்விட, பின் வந்தவர்களோ பொன்னைப் போலக் காணப்படும் வெண்கலம் போன்ற செயல்களாலே, தாங்கள் இழந்தவைகளை சமன் செய்யப் பார்த்தாலும், பொன் போல மின்னும் வெண்கலம் சுத்தப் பசும்பொன்னாகி விடுமோ ?

**சபை வரலாற்றிலும் நிகழ்ந்தது இதுவல்லவோ தானே ?**

**15ம் நூற்றாண்டில் எழுந்த மார்ட்டின் லூத்தரின் காலம் சபை சரித்திரத்தில் மிகப்பெரிய சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தது மறுக்கப்படாத ஆச்சரியமான உண்மையே ஆனாலும், அது ரோம சபையின் பாரம்பரியங்களின் பிடியிலிருந்து, விசுவாசத்தினால் மாத்திரமே நீதிமான் பிழைப்பான் என்ற வேத சத்தியத்துக்கும், பூர்வ பாதைக்கும் சபையைத் திரும்பவும் திருப்ப நடந்த சமர் யுத்தமும், பெருமுயற்சியும், மிகப்பெரிய சீர்திருத்த வெற்றியுமேயானாலும், அது, ஆதி சபையின் பொன்னான காலத்துக்கு நிகரென்று சொல்ல முடியுமோ ?**

வெண்கலத்தைக் கொண்டு பொன்னைப் போல பரிசைகளைச் செய்தாலும், சீர்திருத்த சபை, வெண்கல வைராக்கியத்தோடும், சக்தியோடும், பெலனோடும் வீறுகொண்டு எழும்பி நின்றாலும், அது, வெண்கலத்தாலான வயிறும் தொடையும் கொண்ட சபையின் இடைப்பட்ட காலத்தின், சரீரத்தின் மத்திய அங்கமான வெண்கலமே அன்றி, அதுவும், பொன்னான தலையாக இயலவில்லையே ?

## 2:33,40 - இரும்பைப் போன்ற உரமான கால்கள் :



பொன்னாய்த் துவங்கி, வெள்ளியாய் ஆகி, வெண்கலமாய் மாறியிருந்த இடைக்கால சபையை, அதற்குப்பின் தூணாய்த் தாங்கி நின்றவை, இரும்பைப் போல உரம்கொண்ட கால்களான 17ம், 18ம் நூற்றாண்டு எழுப்புதல்களே !



▶ தனது ஒரு கரத்தால் அமெரிக்காவையும் மறு கரத்தால் ஐரோப்பாவையும் தேவனது சிங்காசனத்துக்கு முன்பாகத் தூக்கி நின்றார் டி.எல்.மூடி என்கிறது வரலாறு !

▶ ஆப்பிரிக்காவிலிருந்து நீக்ரோக்களை இறக்குமதி செய்து விற்கும் அடிமை வியாபாரம் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்த போது, அதை உடைத்தெறிந்தவர் ஜாண் நியூட்டன் !

▶ தான் பிரசங்கித்துக் கடந்து சென்ற கிராமங்களில், தான் மரித்து நூறு ஆண்டுகளுக்குப் பிறகும் கூட ஒரு ஒயின் ஷாப்பையும் காணக்கூடாத அளவு அப்படி என்ன ஒரு பிரசங்கம் செய்திருப்பார் என்று விக்கித்துப் போகச் செய்யும் ஜாண் வெஸ்லியின் மெத்தடிஸ்ட் எழுப்புதல் தீ விட்டுச்சென்ற சுவடுகள் ஐரோப்பிய மற்றும் மேற்கத்திய நாடுகளில் மட்டுமல்ல, நமது வடஇந்தியாவின் மலைகளின் குக்கிராமங்களில் கூட இன்றும் காண முடியும் !

▶ ஜாண் ஒயிட் ஃபீல்டின் நாட்கள் சபை சரித்திரத்தின் அழியாப் பதிவுகள் !

▶ மற்றவர்கள் தங்கள் பிரசங்கங்களால் மட்டுமே சபையை உயிர்ப்பித்துக் கொண்டிருந்த போது, சார்ல்ஸ் ஃபின்னியின் ஒரு பார்வை பட்டாலே மக்களுக்குள் பாவ உணர்வு தான் !

- இந்த மனிதன், ஒரு தொழிற்சாலைக்குள் போனால் எழுப்புதல் !

- இரயிலில் பயணித்தால் பயணிகளுக்குள் பாவ உணர்வின் எழுப்புதல் !

● ஒரு கிராமத்தை நோக்கித் திரும்பிப் பார்த்தாலே கிராம மக்கள் மனம் உடைந்து பாவ உணர்வால் கதறி அழும் ஓர் எழுப்புதல் !

▶ ஜென்ரல் வில்லியம் பூத்தின் இரட்சண்ய சேனை 70 ஆண்டுகளில் 90 நாடுகளில் வீறுநடை போட்ட கிறிஸ்துவின் சேனை.. பூத்தின் கண்களில் மட்டுமல்ல, செய்தியிலும் சேனையிலும் அனல் பறந்த நாட்கள் அவை !

▶ அதன் பின் வந்த ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த் செத்தவர்களை அனாயாசமாக உயிரோடு எழுப்பிக் கொண்டிருந்தார் - மரித்த தன் மனைவி பாலி உட்பட....

▶ பிரசங்கிகளின் வேந்தனாம் C.H.ஸ்பர்ஜன் தன் புத்தகங்களால் மரித்தும் இன்னும் பேசுகிறாரே !

▶ வேல்ஸ் நாட்டில் ஈவன் ராபர்ட்ஸ் என்ற 23 வயதுப் பையன் அசைத்த அசைவை இந்தியா மட்டும் உணர முடிந்ததே !

▶ பின்னும் நான் என்ன சொல்லுவேன் ?
எத்தனை மிஷினரிகள் ! ஆப்பிரிக்காவின் டேவிட் லிவிங்ஸ் டனிலிருந்து, கிரிக்கெட் வீரராயிருந்து சகலமும் துறந்து மிஷினரியான சி.டி.ஸ்டட்டிலிருந்து, இந்தியாவின் மிஷினரித் தந்தையான வில்லியம் கேரியிலிருந்து, சீன மிஷினரி எழுப்புதலின் ஹட்ஸன் டெய்லரிலிருந்து, நியூ ஜெர்சியில் நரமாமிசப் பட்சிணிகளுக்கு இரவு உணவாய்ப் போன ஜாண் ஹார்ப்பரிலிருந்து, முக்தி ஆசிரம பண்டித ரமாபாயிலிருந்து, இரத்தம் தோய்ந்த பாதங்களின் இமயமலை அப்போஸ்தலனனான சாது சுந்தர்சிங்கிலிருந்து எத்தனை எத்தனையோ பேரைக் குறித்து விபரம் சொல்ல வேண்டுமானால் காலம் போதாது ! (எபி 11:32)

சபையின் தூண்களைப் போன்ற கால்கள் கொண்ட, அந்தக் காலக்கட்டத்தில் எழும்பிய இந்த எழுப்புதல் வீரர்கள், "இரும்பு எப்படி எல்லாவற்றையும் நொறுக்கி சின்னாபின்னமாக்குகிறதோ, அப்படியே இவர்கள் யாவரும், நொறுக்கிப் போடுகிற இரும்பைப் போல அவர்கள் வாழ்ந்த காலகட்டத்தின் சத்துருவின் இருளின் ஆதிக்கத்தை நொறுக்கித் தகர்த்து அவனது கோட்டை கொத்தளங்களை சிதைத்துச் சின்னாபின்னமாக்கிப் போட்டனர் ! (தானி 2:33)

ஆனாலும் இவர்கள் எல்லாருமே நேபுகாத்நேச்சாரின் சிலையில் காணப்பட்ட இரும்புக் கால்கள் சித்தரிக்கும் கடைசிக்காலத்துக்கு முந்திய கால சபையைத் தாங்கி நின்ற இரும்பைப் போன்ற உரம் கொண்ட கால்கள் தானோ ??

## 2:34,41
## பாதி இரும்பும் பாதி களிமண்ணுமான பாதங்கள்

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வந்தது கரிஸ்மேட்டிக் மூவ்மென்ட். அதின் மிச்சமும் சொச்சமும் தான் நாம் இன்று கண்டு வரும் ஆவிக்குரிய கலப்படக் கலர்ப்படங்கள் !

நேபுகாத்நேச்சார் கண்ட சிலையின் இரும்பும் களிமண்ணும் கலந்த கலவையின் ஒழுக்கரை உலோகமான (Rot iron ??) பாதங்களைப் போன்ற சபையே இன்றைய கடைசிக்கால கலப்படக் கூட்டணி லவோதேக்கிய சபையோ ?

ஒழுக்கரையில் கனம் உண்டு - விழுந்தாலோ உடைந்து நொறுங்கும் ! பார்வைக்கு உலோகம் தான் - உள்ளே வெறும் கூடு !

## இன்றைய சபையின் ஒரு பக்கம் உறுதி ! மறு பக்கம் - மண் தானே !

" நாம் கிறிஸ்தவம் என்ற மாப்பிள்ளைக்கு, வளமை, செழுமை, கொழுமை, இளமை என்ற பெண் பார்த்து, சபை என்ற மணவாட்டியை, பேர், புகழ், பெருமை, உல்லாசம் என்ற மணவாளனோடு முடிச்சுப் போட்டு மணமுடித்துவிட தீவிர முயற்சியில் இறங்கியிருக்கிறோம் ! ஆனால் அது பரலோகத்தில் நிச்சயிக்கப்படாத, புவியிலே கூடிவர வாய்ப்பில்லாத ஒன்று !" என்றார் Rev.லியோனார்ட் ரேவன்ஹில்.. எவ்வளவு உண்மை !

உலகம் என்ற களிமண்ணோடு, உரம் கொண்ட இரும்பான சபை, செழிப்பு உபதேசம் என்ற ஆசீர்வாத நீர் ஊற்றப்பட்டு, சகலமும் இலவசமாய் கலந்து, பிசைந்து, இசைந்து, இன்று சரித்திர சபையைத் தாங்கி நிற்கும் வலுவற்ற ஒழுக்கரைப் பாதங்களாய் நிற்கிறதோ ?

பாதி களிமண்ணே ஆனாலும், இன்னொரு பாதியில் இன்னும் உறுதி இல்லாமலில்லை.. உலகத்தால் தங்களைக் கறைப்படுத்திக் கொள்ளாத உறுதியான ஒரு மீதியான சிறு கூட்டம் ஒன்று இன்னும் நம் ஆண்டவருக்காகப் பாதுகாக்கப்பட்டு வைத்திருக்கப்பட்டுத் தான் உள்ளது !

உலகளாவிய கிறிஸ்துவின் சபை, பசும்பொன்னிலிருந்து வெள்ளியாகிப் போய், வெள்ளி வெண்கலமாய் மாறி, வெண்கலம் இரும்பாகி, இரும்பு இன்று ஒழுக்கமற்ற ஒழுக்கரையாய் உருக்குலைந்து நிற்கிறதோ ?

நேபுகாத்நேச்சாரின் சிலை, உலகளாவிய சபைக்கு மாத்திரமல்ல, 2000 வருட பழைமையான நமது இந்திய சபைக்கும் அடையாளமோ ?

- முதல் நூற்றாண்டில் இந்தியாவில் தோமாவின் பொற்காலம் !

- அதன் பின் வெள்ளியாய் வந்த இருண்ட காலங்கள் !

- பின்னால் வெண்கலமாய் வந்த பிரான்சிஸ் சேவியர் மற்றும் ஜோசப் பெஸ்கி போன்ற பிரஞ்சு, போர்ச்சுக்கீசிய கத்தோலிக்க மிஷினரிகள் மற்றும் சீகன்பால்க் போன்ற டச்சு மிஷினரிகள் !

- இந்தக் கடைசிக்காலத்துக்கு முந்தின காலத்தில் இந்திய சபை வரலாற்றில் இரும்பாய் நின்ற ரேனியஸ் ஐயர், கால்டுவெல் ஐயர், ராக்லாண்டு ஐயர், ரிங்கல் தொபே, ஐடா ஸ்கடர், சாரா டக்கர் போன்ற ஆங்கிலேய மிஷினரிகள் !



▸ எழுபதுகளுக்குப் பிறகு இந்தக் கடைசி நாட்களில் தேவன் நம்மிடையே உறுதியாய் எழுப்பிய நமது உள்நாட்டு எழுப்புதல் வீரர்களான சகோ D.G.S.தினகரன், எமில் ஜெபசிங், R.ஸ்டான்லி, பேட்ரிக் ஜோஷ்வா, சாம் கமலேசன், அகஸ்டின் ஜெபக்குமார் மற்றும் மூத்த போதகர்கள் - இவர்கள் மூலம் அலையலையாய் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்ற நமது வாலிப மிஷினரிகள் !

ஆனாலும் இன்றைய இந்தியத் திருச்சபையின் நிலை, நேபுகாத்நேச்சாரின் சிலையின் பாதங்களுக்கு ஒப்பாகவே உள்ளது போன்ற தோற்றமன்றி வேறென்ன எனக் கேட்கத் தோன்றும் நிலையோ ??

மாத்திரமல்ல, இந்த சிலையின் நிலையும், உலோகத்தின் குறைவு படும் தரமும் இன்றைக்கு இருக்கும் ஒரு சராசரி விசுவாசியின் ஆவிக்குரிய நிலைக்கு நம்மை ஒப்பிட வைக்கிறது.

### 2:31- பெரிய சிலை - பெரிய இரட்சிப்பு / பெரிய ஆவிக்குரிய வாழ்க்கை மிகுந்த பிரகாசமுள்ள சிலை:-

மிகுந்த பிரகாசமுள்ள வாழ்க்கை உமக்கு எதிரே நின்றது :- நமக்கு எதிரே பெரிய இரட்சிப்பு, பெரிய ஆவிக்குரிய வாழ்வு / பெரிய பிரகாசமுள்ள எதிர்காலம்

## இன்றைய சராசரி விசுவாசிகளின் தேய்ந்து வரும் ஆவிக்குரிய நிலை

### பசும்பொன் தலை

- விசுவாசியின் இரட்சிக்கப்பட்ட ஆரம்ப நாட்கள்
- மின்னும் பரிசுத்தம் / மின்னும் மகிழ்ச்சி
- மின்னும் ஜெபம் / மின்னும் வேத வாசிப்பு
- மின்னும் ஐக்கியம் • மின்னும் ஊழியம்

(ஆரம்பத்தில் மிகுந்த சந்தோஷத்துடன் காணப்படும் அவனது ஆவிக்குரிய வாழ்க்கை நாளாக நாளாக மங்கத் தொடங்குகிறது.)

## வெள்ளியான மார்பும் புயமும்

- பொன்னின் தரம் குறைந்து வெள்ளியின் நிலை
- ஆதி அன்பு சற்று குறைகிறது..
- ஆரம்ப மகிழ்ச்சி, ஜெபம், ஐக்கியம், ஊழியம் இவற்றில் மங்கல்..
- சகலத்திலும் கர்த்தரையே சார்ந்திருப்பதை விட்டு, பெருமையுடன் சுயபெலத்தில் சார்வது..

## வெண்கல வயிறும் தொடையும்

வயிறு - வயிற்றுப் பசி
தொடை - மாம்சப் பசி
ஆவியில் ஆரம்பித்த விசுவாசி மாம்சத்துக்கு மாற ஆரம்பிக்கிறார். வயிற்றுக்காக உழைப்பு, நேரம் செலவிடுதல்..
ஆரம்பத்திலிருந்த பிரதிஷ்டைகள் கழல ஆரம்பிக்க, உபவாசங்கள் விடைபெற்று, மாம்ச ஆசை இச்சைகள் குடிபுக ஆரம்பிக்கின்றன.

## பொன்னுக்குப் பதிலாக வெண்கலம் -

ஆராதனைககுப் பதிலாக கூச்சல்..
ஆரோக்கிய உபதேசத்துக்குப் பிதில் கட்டுக்கதைகள்..

## இரும்புக் கால்கள்

- இருதயம் இறுகி இரும்பான நிலை..
- எவ்வளவு கேட்டாலும், படித்தாலும் இளகாத, இறுகிப்போன இருதயம்

## இரும்பும் களிமண்ணுமான பாதங்கள்

- அவிசுவாசிகளோடு இசைந்து உலகத்தோடு இணைந்து போகுதல்..
- எண்ணங்கள், பேச்சு, நடைஉடை, நேரப்போக்கு, சகலத்திலும் உலகத்தோடு உலகமாகி பேர்க்கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்தல்..
- உள்ளான மனிதனில் பெலனின்றி வெற்று வாழ்க்கை வாழ்தல்..

இன்றைய காட்சிகளான இவைகளை நாம் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, மேலிருந்து கைகளால் பெயர்க்கப்படாத கல் போன்ற, தேவன் மாத்திரமே செய்யப்போகும் மாபெரும் செயல் ஒன்று, இது வரை இருந்தவைகள் எல்லாவற்றுக்கும் முடிவாய், தாம் ஒருவரே மேன்மையாய், மகத்துவமாய், மாட்சிமையாய் உயர்ந்து நிற்கும்படி, எந்த மனுஷனாலுமல்ல, எந்த மனுஷன் மூலமாயுமல்ல... இயேசு கிறிஸ்து ஒருவரே செய்யப் போகும் வரலாறு காணா எழுப்புதல் ஒன்றை உலகம் பார்க்குமோ ?



அது, உலக சிருஷ்டிப்பின் ஆரம்ப காலத்தில், ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் ஆழத்தின் மேல் இருளுமாய் இருந்த நிலையிலிருந்து, தேவன் தாம் ஒருவராகவே தமது வார்த்தையால் உலகத்தைப் படைத்தது போல, உலகத்தின் இந்த முடிவு காலத்திலும் மனித ஆவிக்குரிய வாழ்விலும் ஒழுக்க நெறியிலும் ஒழுங்கின்மையையும், மனித மனங்களில் வெறுமையையும், உலகத்தில் ஆழமாய் ஊடுருவிச் சென்றுள்ள இருளையும் அவர் ஒருவராகவே நின்று நீக்கி, தாமே எல்லாவற்றிலும் எல்லாமாய் உயர்ந்து நிற்பாரோ ?



சிருஷ்டிப்பின் ஆரம்பத்தில் நடந்த, வரலாற்றின் முதல் எழுப்புதலைத் தாமே நடத்தியது போல, உலக முடிவிலும் வரலாறு காணா எழுப்புதல் ஒன்றை எழுப்புதலின் நாயகனாம் அவரே முன் நின்று நடத்துவாரோ ?

அன்று ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்த ஆவியானவர் இன்றும் ஜனத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருக்கிறாரே!



# 2000 வருட உலகளாவிய திருச்சபையின் சீர்குலைந்த நிலை

## பசும்பொன் தலை
**(முதல் மூன்று நூற்றாண்டு ஆதி சபை)**

- சபையின் பொற்காலம்
- ஆதித்திருச்சபையின் எழுப்புதலின் பொன்னான பேதுருக்கள், பவுல்கள்..
- அக்கினிப் பரீட்சைக்கு நின்ற பசும்பொன்னான சபை
- பொன்னான இரத்தசாட்சிகள்

## வெள்ளி மார்பு
**(4ம் நூற்றாண்டுக்குப் பின் வந்த ரோம சபை)**

- பரிசுத்த சபை சடங்காச்சார சபையான நிலை..
- தேவன் விலக்கப்பட்டு மனிதன் தேவனான நிலை..
- மாம்ச புயபலம் மற்றும் மனித பெருமையின் அடையாளங்கள்
- பொன்னான சபையின் தரம் வெள்ளியான நிலை..

## வெண்கலத் தொடை
**(16ம் நூற்றாண்டின் லூத்தர் கால சீர்திருத்த சபை)**

- பொன்னுக்குப் பதிலாக வெண்கலம்
- லூத்தர் கால சீர்திருத்தம் வெண்கல பெலன் கொண்ட சீர்திருத்தமேயானாலும், பொன்னான தலையான ஆதி சபையை ஒப்பிடும் போது அது வெண்கலம் தான் அல்லவோ ?

## இரும்புக் கால்கள்
**(18, 19ம் நூற்றாண்டின் எழுப்புதல் கண்ட சபை)**

- சபையைத் தூணாய் நிறுத்தி வைத்திருந்த எழுப்புதலின் இரும்புக் கால்கள்
- டி.எல். மூடியின் சுவிசேஷ எழுப்புதல்
- சார்ல்ஸ் ஃபின்னியின் எழுப்புதல் அக்கினி
- ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்தின் விசுவாச அற்புதங்களின் எழுப்புதல்
- வில்லியம் பூத் மற்றும் ஈவன் ராபர்ட்ஸின் அபிஷேக எழுப்புதல்

## இரும்பும் களிமண்ணுமான பாதங்கள்
**(20, 21ம் நூற்றாண்டின் லவோதேக்கிய சபை)**

- இன்றைய சபையின் ஒரு பக்க உறுதி, சபை பெருக்கம்
- மறுபக்க களிமண் உலகத்தோடு ஒன்றிவிட்ட சமரச சபை, உலகளாவிய சபையின் தரம் இவ்விதமாய், பசும்பொன்னிலிருந்து களிமண்ணான நிலை !



## 2000 வருட பழைமையான இந்தியத் திருச்சபையின் நிலை

**பசும்பொன்**
தோமாவின் முதல்
நூற்றாண்டுப் பொற்காலம்

**வெள்ளி**
சபையின் இருண்ட
காலங்கள்.

**வெண்கலம்**
பிரஞ்சு, போர்ச்சுக்கீசிய
கத்தோலிக்க மிஷினரிகளின்
காலம்.

**இரும்பு**
ஜெர்மானிய, ஐரோப்பிய
மிஷினரிகளின் காலம்.

**இரும்பும் களிமண்ணும்**
சுதேச சுவிசேஷ வீரர்கள்,
எழுப்புதல் வீரர்கள் மற்றும்
உள்நாட்டு மிஷினரிகளின்
காலம்.

# இன்றைய சராசரி விசுவாசிகளின் தேய்ந்து வரும் ஆவிக்குரிய நிலை



## பசும்பொன் தலை

- விசுவாசியின் இரட்சிக்கப்பட்ட ஆரம்ப நாட்கள்
- மின்னும் பரிசுத்தம் / மின்னும் மகிழ்ச்சி
- மின்னும் ஜெபம் / மின்னும் வேத வாசிப்பு
- மின்னும் ஐக்கியம்
- மின்னும் ஊழியம்

## வெள்ளியான மார்பும் புயமும்

- பொன்னின் தரம் குறைந்து வெள்ளியின் நிலை
- ஆதி அன்பு சற்று குறைகிறது..
- ஆரம்ப மகிழ்ச்சி, ஜெபம், ஐக்கியம், ஊழியம் இவற்றில் மங்கல்..
- சகலத்திலும் கர்த்தரையே சார்ந்திருப்பதை விட்டு, பெருமையுடன் சுயபெலத்தில் சார்வது..

## வெண்கல வயிறும் தொடையும்

- வயிற்றுக்காகவும் உலகத்துக்காகவும் வாழ ஆரம்பிப்பது..
- மாம்ச இச்சைகளின் மறுபிரவேசம்
- ஆவியில் ஆரம்பித்து மாம்சத்துக்கு மாறுதல்..
- பொன்னுக்கு பதிலாக வெண்கலம்..
- ஆரோக்கிய உபதேசத்துக்கு பதிலாகக் கட்டுக்கதைகள்..
- ஆவிக்குரிய ஆராதனைக்கு பதிலாக கூச்சல்..

## இரும்புக் கால்கள்

- இருதயம் இறுகி இரும்பான நிலை..
- எவ்வளவு கேட்டாலும், படித்தாலும் இளகாத, இறுகிப்போன இருதயம்

## இரும்பும் களிமண்ணுமான பாதங்கள்

- அவிசுவாசிகளோடு இசைந்து உலகத்தோடு இணைந்து போகுதல்..
- எண்ணங்கள், பேச்சு, நடைஉடை, நேரப்போக்கு, சகலத்திலும் உலகத்தோடு உலகமான பேர்க்கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்தல்..
- உள்ளான மனிதனில் பெலனின்றி வெற்று வாழ்க்கை வாழ்தல்..

# பொற்சிலை

## Chapter - 3

முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும் என்று சொன்ன ஆண்டவர், பிந்தின ஆலயத்தின் மகிமையை வெளிப்படுத்தும் முன்பாக, முந்தின ஆலயத்துக்கும் பிந்தின ஆலயத்துக்கும் நடுவே உள்ள இடைப்பட்ட காலத்தையும், அந்த இடைப்பட்ட காலத்தில் அவர்கள் கடந்து சென்ற சிறையிருப்பையும், அந்த சிறையிருப்பில் அவர்கள் நசுக்கப்பட்ட நாட்களில் அவர்கள் புலம்பின புலம்பலையும், **வேதத்தில் புலம்பலின் புத்தகம்** என்று பெயரிட்டு எழுதி வைத்தார்..

அவர்களது அந்த சிறையிருப்பின் வருடங்களான தானியேல் முதல் ஆறு அதிகாரங்களின் நாட்களுக்கும் சம்பவங்களுக்கும், இன்று பிந்திய ஆலயத்தின் மகிமையாம் எழுப்புதலைக் காணத் துடிக்கும் நம்மை,நம் தேசத்தில், தேவன் நடத்திச் செல்லப்போகும் வலி நிறைந்த வரப்போகும் நாட்களுக்கும் உள்ள ஒப்புமையே **"இனிமேல் சம்பவிக்கப் போகிறது என்ன ?** என்ற இந்தப் புத்தகம்...

இது வரை கண்ட முதல் மூன்று அத்தியாயங்களில் தானியேலின் முதல் இரண்டு அதிகாரங்களின் சம்பவங்களையும் அதோடு நெருங்கி சம்பந்தப்பட்ட நமது இன்றைய நாட்களையும் பார்த்தோம்.

### இப்போது தானியேல் 3ம் அதிகாரம்...

**3:1** நேபுகாத்நேச்சார்...அறுபது முழ உயரமும் ஆறுமுழ அகலமுமான ஒரு சிலையைப் பண்ணுவித்து..தூரா என்னும் சம பூமியிலே நிறுத்தினான்..

**நமது நவீன நேபுகாத்நேச்சாரும் இன்றைய பிரதமருமான இவரது முந்தின 5 ஆண்டு கால ஆட்சியில் நமது நாட்டில் நிறுத்தப்பட்ட பிரம்மாண்டமான சிலைகளின் அட்டவணை இதோ !**

- 24 பிப்ரவரி 2017 சிவராத்திரி அன்று ஆதி யோகி என்ற சிவனுக்கு நமது கோவையிலே ஈஷா யோக மையத்தில் 112 அடி உயரத்தில் இவர் திறந்து வைத்த கரும் கற்சிலை !

- Statue of Unity என்று பெயரிடப்பட்டு, Statue of Liberty என்னும் "அமெரிக்க சுதந்திர தேவியின் சிலை என்ன..உலகத்திலேயே எங்கள் சிலை தான் எல்லாவற்றையும் விட உயரமாக்கும்" என்று 152 அடி உயரத்தில் சுதந்திர தேவியின் சிலையை விட இரண்டு மடங்கு உயரத்தில் சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு வானுயர சிலை வைத்தாலும், நிறுத்தப்பட்டது என்னவோ, என் வல்லமைக்கும், என் பராக்கிரமத்துக்கும், என் பெயரை நிலைநாட்டவும், என் குஜராத்தின் நர்மதை ஆற்றங்கரையிலே நான் வைத்த உலகமகா உயரச்சிலை அல்லவோ ? என்பதே சிலை செதுக்கப்பட்ட நோக்கம் என்பதைப் பாமரனும் அறிவானே !

## 2018 என்ற வருடமே சிலைகளின் வருடம் என்றல்லவா சொல்லிச் சொல்லி மாய்ந்து போகிறார்கள் !

- பூகம்பத்திலும் காட்டு வெள்ளத்திலும் அடிக்கப்பட்டு ஒன்றுமில்லாமல் போன கேதார்நாத் கோவிலைத் திரும்பக் கட்டுவித்து, 2019 தேர்தல் முடிவுகளுக்கு முன் முழு நாளும் குகைக்குள், இன்றைய பிரதமர் தானே தியானம் செய்து விட்டு வந்து, இன்று அதினாலே மோடி குகை என்று பயபக்தியோடு அழைக்கப்படும் அந்தக் குகைக்கு பக்தர்கள் ஆன்லைனில் முன்பதிவு செய்யப்படும் அளவுக்கு இன்று அது மிகப்பிரபலம் !

- இடிக்கப்பட்ட பாபர் மசூதி, ராமர் கோவிலாக கட்டப்படப்போகும் நாட்களுக்கு முத்தாய்ப்பாக, இன்று உத்திரப் பிரதேசத்தின் முதல்வர் யோகி ஆதித்யநாத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் அயோத்தியின் சரயு நதிக்கரையில் 121 அடி உயரத்தில் உருவாகி வரும் ராமர் சிலை !





- மகாராஷ்ட்ராவில் 118 அடி உயரத்தில் எழும்பிக் கொண்டிருக்கும் சத்ரபதி சிவாஜியின் பிரம்மாண்ட சிலை !

- இவர்களது ராஜ குருக்கள் வாஜ்பாய் மற்றும் அத்வானியின் முந்திய ஆட்சி காலத்தின் ஞாபகச் சின்னமாகவும், இன்று சுற்றுலாப் பயணிகளின் புண்ணியத் தலமாகவும் மாறியிருக்கும் டெல்லியின் மிகப்பிரபலமான "Akshar Dhaam" கோவில்..

- Art of Living மகாரிஷி ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ரவி ஷங்கருக்கு டெல்லியின் யமுனை நதிக்கரையிலே அவரது ஆசிரமத்துக்காகவும்

கோவில் நிர்மாணத்துக்காகவும் மிகக்குறைந்த விலையில் ஒதுக்கப்பட்டுள்ள பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் !

இப்படி, இமயம் முதல் குமரி வரை வானை முட்டும் சிலைகளும் விக்கிரகங்களும் நேபுகாத்நேச்சாரின் நாட்களைப் போலவே நிறுத்தப்படப்போகும் நாட்கள் இவை !

24.2.2017 மாலை பிரதமரால் கோவையில் சிவனுக்கு சிலை திறக்கப்பட்டு அதின் பிரதிஷ்டையின் அன்று நாம் பதிவிட்ட அந்தப் பதிவை இங்கு இணைப்பது ஏற்றதாய்ப் பட்டதால் மீண்டும் தருகிறோம்..



- ஆதி யோகி எனப்படும் சிவனுக்கு என் தமிழகத்தின் கோவையில் 112 அடி உயர சிலை. இன்று மாலை 6 மணிக்கு திறப்புவிழா. பாரதப் பிரதமர் அவர்கள் தலைமையில்..



## என் சகோதர ஜனமே..

இந்தக் காட்சி வேதத்துக்கு நேராக மட்டுமல்ல, தமிழகத்தின் பாரம்பரிய கிறிஸ்தவ வரலாற்றுக்கும் நம்மை இட்டுச் செல்லாதோ ?

ஆரோனின் பொற் கன்றுக்குட்டிக்கு முன் மண்டியிடாமல் கர்த்தருடைய பட்சத்தில் நின்று ஜெபத்தில் வைராக்கியம் காட்டும் லேவி புத்திரர் நம்மிடையே இன்று இல்லையோ ?

நேபுகாத்நேச்சாரின் பொற்சிலைக்கு முன் தாழ விழுந்து பணிந்து கொள்ளாமல் ராஜாவின் கட்டளையைத் தள்ளி, தங்கள் சரீரங்களையும் ஒப்புக் கொடுக்கத் துணியும் வாலிபர்கள் எங்கே ?

எலியா காலத்து பாகால்களுக்கு முடங்காதிருக்கிற 7000 பேர் மட்டுமல்ல, கர்த்தரே தேவன் என்று நிரூபித்து நிற்கும் எலியாக்கள் எழும்ப மாட்டார்களோ?

இரவோடு இரவாக பாகாலின் பலிபீடத்தைத் தகர்த்து விக்கிரகத் தோப்பை வெட்டி அழித்த கிதியோன்களின் சேனை எங்கே ?

எபேசுவின் தியானாளே தேவி என்ற கூக்குரல்களுக்கு மத்தியில் அத்தேனேயின் விக்கிரகங்களைக் கண்டு ஆவியில் மிகுந்த வைராக்கியம் கொண்டு வெகுண்டெழுந்த பவுல்கள் எழும்பி வர மாட்டார்களோ?

தேவனுடைய பெட்டிக்கு முன்பாக தாகோன் விழுந்து உடைந்து சுக்குநூறானதே ?" நான் விக்கிரகங்களின் பேரும் தேசத்தில் இராதபடி அழிப்பேன்..

## அவைகள் இனி நினைக்கப்படுவதில்லை..

( சகரியா 13:2)"என்ற வார்த்தைக்கு முன் புதிய விக்கிரகங்கள் தேசத்தில் எழும்புவது எப்படி ?

அதுவும், இந்தியாவின் எழுப்புதலின் எப்பிசென்ட்டர் (மையப்புள்ளி) என்று சொல்லப்படும் தமிழ்நாட்டிலோ ?

ஜீவனுள்ள தேவனுக்காகப் புலம்பி அழும் தலைமுறை தமிழகத்தில் மறைந்து போனதோ ?

இருதயத்தைக் கிழித்து ஜெபிக்கும் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்காக மாத்திரம் அழ ஆரம்பித்து விட்டார்களோ ?

மிஷினரிகளுக்கு சாட்சியாய், எண்ணில்லா தேவாலயங்கள் வானுயர்ந்து நிற்கும் மண்ணில், தேவர் தேவிகளின் கற்சிலை எழும்பியதென்ன ?

காடுகளை அழித்து சிலை எழுப்பினோம் என்று காடுகளுக்காக கவலைப்படும் ஒரு கூட்டம், நாட்டு ஜனங்களை 'யோகா' என்ற பேரலை, சுனாமியாய் வந்து நரகக் கடலுக்குள் இழுத்துச் சொல்லுவதைப் பற்றி கவலைப்படாதோ ?

என் ஜனமே,காரியத்தின் கடைத்தொகை இது தான்.. நீயும் நானும் ஜெபிக்க வேண்டியபடி ஜெபித்திருந்தால்...

திறப்பில் நிற்க வேண்டியபடி அவருக்கு முன்பாக நின்றிருந்தால்... காட்ட வேண்டியபடி வைராக்கியம் காட்டியிருந்தால்...

இன்று இந்த அவலமும் இருந்திராது.. திறப்பு விழாவும் நடந்திராது !! - உங்களில் ஒருவன்

**3:2-** ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தேசாதிபதிகளையும், அதிகாரிகளையும், தலைவரையும், நியாயாதிபதிகளையும் பொக்கிஷக்காரரரையும், நீதிசாஸ்திரிகளையும், விசாரிப்புக்காரரையும், நாடுகளிலுள்ள உத்தியோகஸ்தர் யாவரையும்.. தான் நிறுத்தின சிலையின் பிரதிஷ்டைக்கு வந்து சேரும்படி அழைத்தனுப்பினான்..

▶ நாட்டின் சிறியோர் முதல் பெரியோர் வரை, மாநில முதலமைச்சர்கள் முதல் கடைநிலை அரசாங்க ஊழியர்கள் வரை, கவர்மன்ட் ஸ்கூல் மாணவர்கள் முதல் கார்ப்பரேட் வரை அனைவருக்கும் விக்கிரக ஆராதனை முதல் யோகா வரை, கடைப்பிடிக்கவும், வணங்கவும், பங்கு கொள்ளவும் “வந்து சேருங்கள்" என்ற கட்டளையுடன் எல்லாமே உத்தரவாய்ப் பிறப்பிக்கப்படும் ! இனிமேல் இங்கு சகலமும் கட்டாயமே !

---

**3:6- "எவனாகிலும்" தாழ விழுந்து அதைப் பணிந்து கொள்ளாமல் போனால், அவன் அந்நேரமே எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே போடப்படுவான்..**

▶ விக்கிரக ஆராதனை மட்டுமல்லாது, அரசாங்கம் உத்தரவிடும் கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் போகிற-வர்களுக்கு தண்டனை உறுதி ! (இப்போதே "ஜெய் ஸ்ரீ ராம்" சொல்லு சொல்லுன்ல அடிக்கிறானுங்க !)

**3:7 - ஆதலால் சகல ஜனங்களும்... தாழ விழுந்து நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொண்டார்கள்.**

▸ காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை இந்தியாவின் ஒவ்வொரு மாநிலமும், ஜனமும் ஜாதியும், வெவ்வேறு மொழி பேசும் மக்களும் நமது மோடி மஸ்தானின் விண்முட்டும் சிலைகளுக்கு முன் விழுந்து பணிந்து நமஸ்கரித்து ஆராதிப்பது மட்டுமல்ல, அவரது ஒவ்வொரு கட்டளைக்கும் கீழ்ப்படிந்து அடங்குவார்கள் !

---

**3:12 - சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்னும் யூதரான மனுஷர் இருக்கிறார்களே.. அவர்கள் ராஜாவாகிய உம்மை மதிக்கவில்லை..**

**உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்யாமலும், நீர் நிறுத்தின சிலையைப் பணிந்து கொள்ளாமலும் இருக்கிறார்கள்..**

▸ வாஸ்தவத்தில், சிலையை வணங்க வைத்து, ஏற்கனவே விக்கிரகங்களால் நிறைந்து கிடக்கும் தேசத்தில் விக்கிரக ஆராதனையை இன்னும் பெருக்குவது நோக்கமல்ல..

ஆனால் இந்த விக்கிரகங்களுக்கு முன் கட்டாயமாய்ப் பணிய வைப்பதின் மூலம், "என் அரசாங்கம், என் திட்டங்கள், என் தேசம், என் கட்சி, என் இஷ்டம், என் ஆணை " என்று தேசம் முழுவதும் தன்னை மட்டுமே அங்கீகரித்து, தன்னை மதித்து மரியாதை செய்து, தனக்கு முன் மண்டியிட வேண்டும் என்பதே நமது நவீன நேபுகாத்நேச்சாரின் நோக்கங்களிலெல்லாம் மகா நோக்கமான உள்நோக்கம் !



## 3:15 - நான் பண்ணிவைத்த சிலையைப் பணிந்து கொள்ள ஆயத்தமாயிருந்தால் நல்லது.. பணிந்து கொள்ளாதிருந்தீர்களேயாகில்..

பிரதமராகிய என் சட்டதிட்டங்களை சபைகள் ஏற்க வேண்டும்.. நான் சொல்வதற்கு அடிபணிய ஆயத்தமாயிருக்க வேண்டும்.. அல்லது அதற்கான விளைவுகளை கிறிஸ்தவர்களும் சபையும் சிறுபான்மையினரும் சந்தித்தாக வேண்டும் !

## 3:15 - அக்கினிச் சூளையின் நடுவிலே போடப்படுவீர்கள்..

சபையின் மேல் பலவகையான கட்டுப்பாடுகளும் தண்டனைகளும் ஆயத்தப்படுத்தப் பட்டுவிட்டன.. ஆஸ்பத்திரிகளும் பள்ளிகளும் அரசுடைமையாக்கப்பட்டு, சபை கட்டிடங்களும் உடைமைகளும் ஜப்தி செய்யப்படும். சமூக சேவை தொண்டு நிறுவனங்கள் மூடப்பட்டு மிகப்பெரிய ஊழியங்கள், ஊழியர்கள் மேல் பொய்க்குற்றச்சாட்டுகள் வழக்குகள் போடப்பட்டு கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும் !



## 3:15 - "உங்ளை என் கைக்குத் தப்புவிக்கப் போகிற தேவன் யார் ?"

நான்...," என் அரசாங்கம், என் திட்டங்கள், என் தொலைநோக்கு, என் இஷ்டம், என் தத்துவம், என் மதம்..சகல அதிகாரமும் "என் கையில்..""இதோ ! ஹிந்துஸ்தான் முழுவதும் என் ராஜ்யம்.. சுப்ரீம் கோர்ட் முதல், மாவட்ட கோர்ட் வரை நான் நியமித்துள்ள என் ஆட்கள் - ஒவ்வொரு துறையிலும் மேலிருந்து கீழ் வரை என்னால் அமர்த்தப்பட்ட, என் தாளத்துக்குத் தப்பாமல் ஆடும் என் அடிவருடிகள் !

நாடு முழுவதும் உடைக்க முடியாத அசுரபலம் கொண்ட என்னுடைய நெட்வொர்க் ! காணாததற்கு ஆங்காங்கே பூஜைகள், ஹோமங்கள்..

எங்கள் சாமியார்களாலும் விக்கிரக ஆராதனையினாலும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள மரணாயுதங்கள் கொண்ட அசுத்த ஆவிகளின் சேனைகள் !





# தப்பித்து எங்கே ஓடுவாய் ?

உங்களை என் கைக்குத் தப்புவிக்கப்போவது யார் "?

உலகத்தின் போலீஸ் என்று அழைக்கப்படும்
ஏகாதிபத்திய அமெரிக்காவை அழைப்பாயோ ?

இங்கிலாந்து உன் உதவிக்கு வருமோ ?

கிறிஸ்தவ நாடுகளை ஒன்று சேர்த்து
கொடி பிடிப்பாயோ ?

ஐக்கிய நாடுகள் சபை மூலம் எனக்கு
நெருக்கடி கொடுக்கலாம் என்று திட்டமிடுகிறாயோ ?

அல்லது நீங்கள் மதம் பரப்பும் உங்கள்
இயேசுநாதர் உனக்கு அற்புதம் செய்ய வருவாரோ ?

என் கைக்கு உங்களைத் தப்புவிக்கப்
போகிற தேவன் யார் ?

**3:16 "நேபுகாத்நேச்சாரே !**
**"உன்னை நாங்கள் பெயர் விட்டே கூப்பிடுவோம் !**

ஆட்சியாளர்களையும் அதிகாரிகளையும் பிரதானிகளையும் மதிப்பதும், கனம் பண்ணுவதும், அவர்களுக்காக ஜெபிப்பதும் எங்களுக்கு அவசியமானாலும், அவர்கள் எங்கள் ஜீவனுள்ள தேவனையே நிந்திக்கும் போது, அவரை கனவீனப்படுத்தும் போது, " அந்த நரிக்குப் போய்ச் சொல்லுங்கள் " என்று ஏரோதைக் குறித்துச் சொன்னாரே இயேசு... அப்படிச் சொன்னாலும் தப்பில்லை ! மன்னனே ஆனாலும் அவனும் மண்ணான மனிதன் தானே !

---

**3:16 - " உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை..”**

"உங்களைப் போன்றவர்களின் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் எங்களுக்கில்லை.." என்று எப்படிப்பட்ட சூளையின் சூழ்நிலையிலும் தைரியமாய் நிற்போம் !”

பொந்தியு பிலாத்துவின் முன்னின்று நல்ல அறிக்கையை சாட்சியாக விளங்கப் பண்ணின நம்முடைய ஆண்டவர் கிறிஸ்து இயேசுவையும், தன் சகோதரன் பிலிப்புவின் மனைவியை வைத்துக் கொண்ட ஏரோதை, 'அது நியாயமல்ல' என்று தலையே போனாலும் பரவாயில்லை என்று பயமே இல்லாமல் இடித்துச் சொன்ன யோவான் ஸ்நானகனையும்,தேசாதிபதியாகிய பேலிக்ஸுக்கு முன்னால் நீதியையும் இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்து அவனது முகத்துக்கு அஞ்சாமல் நேருக்கு நேர் சொல்லி அவனைக் கலங்கப் பண்ணின பவுலையும்,

“தேவனுக்கு செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்கு செவிகொடுக்கிறது நியாயமாய் இருக்குமோ என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள்" என்று ஆலோசனை சங்கத்தாரைத் திருப்பிக் கேட்ட, படிப்பே அறியாத பேதைமையுள்ள பேதுருவையும் யோவானையும், அவர்களது தைரியத்தையும் மறவாமல் நினைத்துக் கொள்வோம் !ஒருவரும் எதிர்பேசவும் எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் தருவேன் என்றாரே !

---

## 3:17 - "நாங்கள் ஆராதிக்கிற தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவர்..”

நாங்கள் எங்கள் மேல் நம்பிக்கையாய் இராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன் மேல் நம்பிக்கையாய் இருக்கத்தக்கதாக.. நிச்சயமான மரணத்திலிருந்து அவர் எங்களைத் தப்புவித்தார்.. இப்பொழுதும் தப்புவிக்கிறார்.. இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்.." (2 கொரி 1:9,10) என்று தைரியமாய்ச் சொல்வோம்.. அவரே உமது கைக்கும் தண்டனைக்கும் எங்களைத் தப்புவிக்க வல்லவர்!

---

## 3:17 - "தப்புவிக்காமல் போனாலும்..”

“வேறு சிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு விடுதலை பெறச் சம்மதியாமல் வாதிக்கப்பட்டார்கள்.. வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அனுபவித்தார்கள்..” "கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சை பார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள். செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக் கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தார்கள்.." (எபி 11:35-37)"...

என்ற எங்கள் முற்பிதாக்கள் கடந்து சென்ற பாதையையும், எங்கள் கிறிஸ்தவ வரலாற்றில் இரத்தசாட்சியாய் மரித்து எங்களுக்கு நற்சாட்சி வைத்துச் சென்றுள்ள எங்களவர்களையும் நாங்கள் எங்களுக்கு முன்னாக முன்னிறுத்தி..”

"அப்படியே அவர் எங்களைத் தப்புவியாமல், நாங்கள் உன் கையில் ஒப்புக்கொடுக்கப்பட்டு,நாங்கள் கோதுமை மணிகளாய் மடிவது எங்கள் தேவனது சித்தமேயானாலும், அவரது பரிபூரண சித்தத்துக்குக் கீழ்ப்படிந்து அவருக்கு மாத்திரமே  அடிபணிவோமே தவிர, நாங்கள் உம்மையோ உமது சிலைகளையோ வணங்குவதுமில்லை பணிவதுமில்லை.." என்பது உமக்குத் தெரிந்திருக்கக்கடவது !

---

**3:17 - "ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது..”**
மூன்று நண்பர்களும், ராஜாவின் அதிகாரிகள், தேசாதிபதிகள், பொக்கிஷக்காரர் மற்றும் நீதிபதிகள், உத்தியோகிஸ்தர் யாவருக்கும் முன்பாக சாம்ராஜ்யத்தின் அதிபதியையே பார்த்துப் பெயர்சொல்லி, சவால் விட்டு கூப்பிடும் வார்த்தை இது !

நாள் வரும்..! "தெரிஞ்சுக்கோ நரேந்திரா !- என்று தைரியமாய்ச் சொல்வோம்..அப்போஸ்தலர் 4:30 ல் தங்கள் தைரியத்துக்காக ஜெபித்த அப்போஸ்தலரின் ஜெபமே நமது ஜெபமாகட்டும் !

---

**3:19 - ஏழு மடங்கு அதிகம் சூடாக்கப்பட்ட சூளை..**
வரும் நாட்களில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள், கலகங்கள், சோதனைகள், நெருக்கங்கள், எல்லாவிதத்திலும் கட்டவிழ்த்து விடப்பட்டு, ஏழு ,எழுபது மடங்கு அதிகமானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**3:23 - "அந்த மூன்று புருஷரும் கட்டுண்டவர்களாய் எரிகிற சூளையின் நடுவே விழுந்தார்கள்.."**

நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே.. இதோ நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்.. பத்து நாள் உபத்திரவப்படுவீர்கள்.. ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு..(வெளி 2:10)

**3 : 24,25 - "மூன்று புருஷர்களையல்லவா அக்கினியிலே போடுவித்தோம்?**

நாலு பேர் விடுதலையாய் உலாவுகிறார்களே !"அக்கினிச் சூளை ஏழேழு மடங்கு சூடாக்கப்பட்டாலும், அதையும் ஏர்கண்டிஷனாக்கி விடும் ஒரு நல்ல ஆண்டவர் நமக்கு உண்டு. எந்த சூழ்நிலையிலும், காவலிலும் கட்டுகளிலும் சோதனையிலும் சிறையிலும் நம்மை விட்டு விலகாமல் நம்மோடேயே அவர் இருப்பார் !

**3:25- "நாலாம் ஆளின் சாயல் தேவ புத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது..**

"மற்ற நேரங்களில் நமது காவலுக்குத் தமது தூதரை அனுப்புகிறவர், "ஆபத்தில் நானே அவனோடிருந்து அவனைத் தப்புவிப்பேன்" என்று சொல்லி, அப்படிப்பட்ட காலங்களில் வேறு யாரையும் அனுப்பாமல், தாமே இறங்கி வருவார் - நம்மோடு நிற்க !

**3:26 "நீங்கள் வெளியே வாருங்கள் !**

"சோதிக்கப்பட ஒரு வேளை.. சோதனையிலிருந்து வெளிவர ஒரு வேளை.. அவர் என்னை சோதித்த "பின்" பொன்னாக விளங்குவேன்.

**3:27 -"அவர்கள் மேல் அக்கினி பெலஞ்செய்யாமலும்.." சோதனை நம் மேல் பெலன் கொள்ளாது..**

**"அவர்களுடைய தலை மயிர் கருகாமலும்..**

"உங்கள் தலைமயிரில் ஒன்றும் விழாது.. அவைகள் ஒவ்வொன்றும் எண்ணப்பட்டிருக்கிறது..-

**"சால்வைகள் சேதப்படாமலும்..**

"நம்மேலுள்ள அபிஷேகம் எந்த நிலையிலும் பாதிக்கப்படாது !- "அக்கினியின் மணம் அவர்கள் மேல் வீசாமலும்.." " இவர்கள்

மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள் " என்று ஒரு நாள் நம்மைக் குறித்து சொல்லப்படப் போகிறதாயிருந்தாலும், சோதயையின் எந்த சுவடும் நம்மேல் தெரியாவண்ணம் நம்மைக் காப்பார்.

▸ **3:28 - "அவர்கள் அவரையே நம்பி.. ராஜாவின் கட்டளையைத் தள்ளி..**

**"அவரை மட்டுமே நம்புவோம்.. தேசத்தின் கட்டளைகளில் தேவனுக்கு உகந்தவைகளுக்கு மட்டுமே கீழ்ப்படிவோம்.. மற்றபடி பிரதமரின் கட்டளையோ சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவேயானாலும், அதையும் தள்ளிவிடத் தயங்காதிருப்போம் !-**

▸ "தங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுத்தினாலே.. "நமது ஆவி, ஆத்துமா, சரீரத்தை ஜீவபலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுப்பதோடு, சரீத்தை அழிக்க வல்லவர்களுக்கு எந்த விதத்திலும் பயப்படாமல், ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்தில் தள்ள வல்லமையுள்ள ஒருவருக்கு மாத்திரமே பயந்து, தேவசித்தம் அதுவாகவே இருக்குமானால், நமது சரீரங்களை எவ்விதக் கொடூர சித்ரவதைகளுக்குக் கூட பயப்படாமல் மனப்பூர்வமாய் ஒப்புக் கொடுக்கக் கர்த்தர் கிருபை தருவாராக !-

**"இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லை..**

▸ "சோதிக்கிறவர்களும் உபத்திரவப்படுத்துகிறவர்களும், கொடூர ஆட்சியாளர்களுமே கூட தங்கள் வாயால் இப்படி சொல்ல வைப்பார். ஏனெனில் முழங்கால் யாவும் நமது ஜீவனுள்ள தேவனுக்கு முன்பாக முடங்கியே ஆக வேண்டும் !

நாவுகள் யாவும் இயேசுவே ஆண்டவர் என்று அறிக்கையிட்டே ஆக வேண்டும் ! காரணம், அதுவே அவரது மாறா வாக்கு ! ஆமென்

# நேபுகாத்நேச்சார் கண்ட விருட்சமும் இந்தியத் திருச்சபையும்

**Chapter - 4**

கடந்த 3 அத்தியாயங்களிலும், தானியேல் புத்தகத்தின் முதல் 3 அதிகாரங்களின் நாட்களுக்கும் சம்பவங்களுக்கும், இந்தியாவின் இன்றைய அரசியல் சூழ்நிலைக்கும், வரப்போகும் மிகக்குறுகிய காலத்துக்குள் நமது இந்திய சபைகளுக்கு சம்பவிக்கப் போகும் பல காரியங்களையும் குறித்துப் பார்த்து வருகிறோம்..

இந்த 4ம் பகுதியில், நேபுகாத்நேச்சாருக்கு சொப்பனத்தில் காட்டப்பட்ட பெரிய விருட்சத்தின் காரியத்தை இந்திய சபையோடு இணைத்து, விருட்சத்துக்கும் சபைக்கும் உள்ள ஒப்புமைகளையும் அதின் மூலம் தேவன் நமக்குத் தரும் எச்சரிப்புக்களையும் காண்போம்..

நேபுகாத்நேச்சார் என்ற மகா விருட்சம் இன்றைய இந்திய சபைக்கு அடையாளமோ ?

### தானியேல் 4ம் அதிகாரம்

**4:4 நேபுகாத்நேச்சாராகிய நான் என் வீட்டில் சவுக்கியமுள்ளவனாயிருந்து என் அரமனையிலே வாழ்ந்து கொண்டிருந்தேன்...**

இன்று வரை இந்தியத் திருச்சபையானது, இந்த ராஜாவைப் போல தேசத்திலே, சகல சௌக்கிய, சௌபாக்கியங்களோடும், விடுதலையோடும், சந்தோஷத்தோடும் எந்தக் குறைவுமின்றி, சகல சலக்கரணையோடு வாழ்ந்து வருகிறது...

மொர்தெகாய் எஸ்தருக்குச் சொன்ன வார்த்தையும் அதுவே.. “நீ ராஜாவின் அரமனையில் இருக்கிறதினால்... உனக்கு ராஜமேன்மை கிடைத்திருப்பதால்..."

இன்று வரை தேவன் நமது தேசத்திலே நம் சபைகளை ராஜாவைப் போலவும், ராஜ ஸ்திரீயைப் போலவும் ஆவிக்குரிய, உலகப்பிரகாரமான சகல ராஜமேன்மையோடேயே, எந்தக் குறைவுமின்றி வைத்து வந்திருக்கிறார்..

**4:10 - " நான் படுத்திருந்த போது.."**



சபை இன்று தனது படுக்கையில்
சௌக்கியமாய் படுத்து இளைப்பாறுகிறதோ ?
அப்படி ஒரு சாங்கோபாங்கமோ ?
தேவன் அதை ஒரு பயங்கரமான சொப்பனத்தாலும், சாட்டையடியாலும் எழுப்புகிறாரோ ?
அதைத் திகிலடையச் செய்ய நினைக்கிறாரோ ?
தேவன் தமது தரிசனங்களைக் கொண்டும், எழுதப்பட்ட, மற்றும் காணச்செய்யப் போகிற காரியங்களைக் கொண்டும், அதைக் கலங்கச் செய்து, விழிப்படையச் செய்ய தீர்மானித்தாரோ ?

**4:10 - "இதோ ! தேசத்தின் மத்தியிலே மிகவும் உயரமான ஒரு விருட்சத்தைக் கண்டேன்.."**

நமது இந்தியத் திருச்சபை 2000 ஆண்டுகள் பழைமையான மிகப்பெரிய விருட்சம் போன்ற பலமுள்ள திருச்சபை அல்லவோ ? அது தேசத்தின் மத்தியிலே வளர்ந்து உயர்ந்து மிகப்பெரிதாய் நிற்கவில்லையோ ?

**4:11 - " அந்த விருட்சம் வளர்ந்து, பலத்து தேசத்தின் எல்லைபரியந்தம் காணப்படத்தக்கதாக அதின் உயரம் வானபரியந்தம் எட்டினது.."**

இன்று இந்தியத் திருச்சபை, கீழே தெற்கிலே பலமாய் வேரூன்றி, மேலே வடக்கு வரை வளர்ந்து, உயர்ந்து, வடகிழக்கிலிருந்து மேற்கு வரை கிளைவிட்டு, ஆவிக்குரிய ஆசீர்வாதத்திலும், விசுவாசத்திலும், ஊழியங்களிலும், கல்வியிலும், செல்வத்திலும் வெகுவாய் ஸ்திரப்பட்டு, பெலப்பட்டு, தேசத்தின் நாலாபக்க எல்லைபரியந்தம் காணப்படத்தக்கதாய் பரந்து விரிந்து உயர்ந்து நிற்கவில்லையோ ?

## 4:12 - "அதின் இலைகள் நேர்த்தியும்.."

ஆவிக்குரிய வகையில் சபையாகிய இந்த விருட்சத்தின் இலைகளாகிய வெளிப்புறத்தில்
**பசுமை உண்டு.. வசனம் உண்டு..**
**செழிப்பு உண்டு.. நேர்த்தி உண்டு..**
அந்த இலைகளில் தேசத்தின் ஜனங்களின் சரீர நோய்களுக்கு மட்டுமல்ல, அவர்களின் சகலவித மனவியாகுலங்களுக்கும் மன அமைதி தரும் மருந்து உண்டு, சுகம் உண்டு..

அதே நேரம், வெளித்தோற்றமான இலைகளின் நேர்த்தியைப் போன்றே, நமது சபைகளில் நேர்த்தியான வெளித்தோற்றம் கொண்ட பிரம்மாண்டமான கோவில் கட்டிடங்களும், கதீட்ரல்களும், பசிலிக்காக்களும், பள்ளிக்கூடங்களும், ஆராதனைக் கூடங்களும், கிறிஸ்தவ ஸ்தாபன நிறுவன வளாகங்களும், காலேஜ்களும், எண்ணடங்கா கிறிஸ்தவ மருத்துவமனைகளும் விருட்சத்தின் நேர்த்தியான இலைகளைப் போன்று, வெளிப்புறமான காட்சியிலும், தேசத்தின் நோய் நீக்கும், அறியாமை இருள் நீக்கும் அவிழ்தமாய் இன்றும் உண்டே !

## 4:12 - " அதின் கனி மிகுதியாயிருந்தது.."

நமது சபைகளின் வெளிப்புற அசையா சொத்துகள் மட்டுமல்ல, நமது ஆவிக்குரிய சொத்துக்களான கனிகளுக்கும் குறைவுண்டோ ?

உள்ளூர் சபைகள், பலவிதமான ஊழியங்கள், மிஷினரி இயக்கங்கள், பெரிய, சிறிய ஸ்தாபனங்கள் மற்றும் ஊழியங்கள் மூலம் இந்த மகா பெரிய விருட்சமாகிய இந்திய சபையில் இன்று ஆத்துமாக்களாகிய கனிகள் மிகவும் மிகுதியாய்க் காணப்படவில்லையோ ?

## 4:12 - " எல்லா ஜீவன்களுக்கும் அதில் ஆகாரம் உண்டாயிருந்தது.."

நமது இந்திய சபை சுய நிறைவு கொண்ட Self sufficient சர்ச். நமது சபையின் தேவைகளுக்கும் சபையாரின் தேவைகளுக்கும், சுவிசேஷம் அறிவிக்கப்படாத இடங்களுக்குச் செல்லும் மிஷினரிகளின் தேவைகளுக்கும், இன்னும் பல அநேக ஊழியங்களைத் தாங்குவதற்கும், வேண்டிய நிறைவான கல்வி அறிவையும், இறையியல் அறிவையும், விசுவாச பெலத்தையும், பொருளாதாரப் பெருக்கத்தையும், இந்த சபையாகிய விருட்சத்தின் விசுவாசக் குடும்பத்திற்கு தேவன் நிறைவாகவே தந்து, "எல்லா ஜீவன்களுக்கும் ஊழியங்களுக்கும் தேவைகளுக்கும் வேண்டிய ஆவிக்குரிய, சரீர ஆகாரத்தை தேவன் இதற்கு அதிகமாகவே கொடுத்து வைத்திருக்கிறார்.."

## இந்தியத் திருச்சபையில் வசனங்களுக்கும் வளங்களுக்கும் குறைவுண்டோ ?

வெளிநாட்டை நோக்கிக் கையேந்தி நிற்க வேண்டிய அவசியம் இந்திய சபைக்கு இன்று இல்லவே இல்லை.. நமது உள்நாட்டு விசுவாசக் குடும்பங்களும், வெளிநாடு வாழ் இந்திய விசுவாசிகளும் தாராளமாய் போதும்..

சகல ஜீவன்களுக்கும் வேண்டிய நிறைவான ஆகாரம் இந்த விருட்சத்திடம் உண்டு..

## 4:12 - " வெளியின் மிருகங்கள் அதின் நிழலுக்கு ஒதுங்கினது.."

இன்று நமது சபைகளின் நிழல் தேடி, அமைதி தேடி, சமாதானம் தேடி, இளைப்பாறுதல் தேடி, சரீர சுகமும் விடுதலையும் தேடி வரும் புறஜாதி ஜனம் தான் எத்தனை எத்தனை !

எல்லாரும் கைவிடும்போது, கடைசியாய் அடைக்கலம் தேடி, நிழல் தேடி வரும் இடம், நம்மிடம் உள்ள கல்வாரியின் நிழல் தானே !

மாத்திரமல்ல, இந்த விருட்சத்தின் கிளைகளாம் நம்மிடமுள்ள அனாதை ஆசிரமங்கள், மருத்துவமனைகள், கல்விக்கூடங்கள், சமூகசேவை நிறுவனங்களை நோக்கி, அதின் நிழல் தேடி ஓடி வந்து, இதின் நிழலில் ஒதுங்கும் புறஜாதி ஜனம் தான் எத்தனை கோடி கோடி !

இந்தியத் திருச்சபையாகிய இந்த விருட்சத்தின் கிளைகளின் நிழலில், இந்த சமாதான தாபரங்களில் இளைப்பாறும் அந்நிய ஜாதி ஜனம் !

**4:12 - " அதின் கொப்புகளில் ஆகாயத்துப் பட்சிகள் தாபரித்து சகல பிராணிகளும் அதினால் போஷிக்கப்பட்டன.."**

" அது வளரும் போது சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும்.." என்று மத்தேயு 13:32ல் இதைத் தானே இயேசு உவமையாகச் சொன்னார் ?

நமது சபைகளுக்கும் ஊழியங்களுக்கும் தான் எத்தனை எத்தனை கிளைகள் ! இந்தக் கிளைகளின் நிழலில் தங்கும் வழிப்போக்கர்களும் இதின் கனிகளால் போஷிக்கப்படும் புறஜாதியினரும், நமது கல்விப்பணியால் பயன்பெறுபவர்களும், மருத்துவமனைகளில் நல்ல மருத்துவம் பெற்று ஆரோக்கியமடைந்து சுகத்தோடு போவாரும் தான் எத்தனை எத்தனை !

**4:13 - " நான் இவைகளைக் காணும் போதே.."**

இத்தனை பெரிய 2000 வருட பழைமையான, இலைகள் நேர்த்தியான, கனி நிறைந்த, வளர்ந்து பலத்த சபையாகிய இந்த விருட்சம் சகல வசதிகளோடு சுகமாய் வாழ்ந்து கொண்டிருக்கும் போது..."

இந்திய சபைகளின் மேல் வந்த தேவ தீர்மானம் ???

**4:13,14 - "காவாளனாகிய பரிசுத்தவான் ஒருவன் வானத்திலிருந்து இறங்கக் கண்டேன்.."**

தூதன் இறங்கி வந்தது - சபையின் மேல் உன்னதமான தேவன் நிறைவேற்றப்போகும் தேவ தீர்மானத்தைத் தெரிவிக்கும்படிக்கும் அதை நிறைவேற்றும்படியுமாகவோ ?

**4:14 - " அவன் உரத்த சத்தமிட்டு.."**

இன்று நமது சபைகளின் மேல் வரப்போகும் தேவ தீர்மானத்தின் உரத்த சத்தம் தேசமெங்கும் கேட்கப்படுகிறதோ ?

தேவன், உரத்த சத்தமாய் தமது தூதர்களாகிய ஊழியர்கள் மூலம், சபை பீடங்களிலும், மேடைகளிலும், வீட்டுக்கூட்டங்களிலும், வாட்ஸப் குழுக்கள் மற்றும் மீடியாக்கள் மூலமாகவும் தமது சத்தத்தை உரக்க உரக்க உரக்க தொனிக்கப் பண்ணிக்கொண்டிருக்கிறார்..

## 4:14 - " இந்த விருட்சத்தை வெட்டி.."

2000 வருட பழைமையான, இந்த மிகவும் உயரமான வளர்ந்து பலத்து தேசத்தின் எல்லைபரியந்தம் காணப்படும் நமது இந்திய சபையாகிய விருட்சம் வெட்டப்படப் போகின்றதோ ?

கோடரியானது இதின் வேரருகே வைக்கப்பட்டாயிற்றோ ? " இந்த வருஷமும் இருக்கட்டும்.." என்று ஒவ்வொரு வருடமும் சொல்லிச் சொல்லி அதற்காக அதிகப்படுத்திக் கொடுக்கப்பட்ட காலங்கள் முடிவுக்கு வந்து விட்டனவோ ? கடைசியாக தேவனே இதை வெட்டிப்போடத் தீர்மானித்து விட்டாரோ ?

## 4:14 - " இதின் கொப்புகளைத் தறித்துப் போடுங்கள்..."

சபையின் கிளைகளும், அதின் கொப்புகளுமாகிய கிட்டத்தட்ட 22,000 NGOக்கள் ஏற்கனவே அரசாங்கத்தால் மூடப்பட்டுவிட்டன என்பதை அறிவீர்களோ ? இதில் Compassion International மற்றும் பல மிகப்பெரிய NGOக்களும் அடக்கம் !

வேலூர் CMC மருத்துவமனை போன்ற பிரபலமான மருத்துவமனைகளை மூடவோ, அரசாங்கம் அதை அரசுடைமை ஆக்கிக்கொள்ளவோ போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கிறது.இது போன்ற பல NGOக்களும் மருத்துவமனைகளும் ஸ்தாபனங்களும் சபைகளும் மூடப்படலாம்..அல்லது அரசுடைமை ஆக்கப்படலாம். இதோ விருட்சமாகிய சபையின் கொப்புகள் தறிக்கப்படப் போகின்றனவோ ?

## 4:14 - " இதின் இலைகளை உதிர்த்து..."

விருட்சத்தின் நேர்த்தியான இலைகளைப் போன்ற வெளிப்பிரகாரமான நமது சபைகளின் ஆராதனை ஸ்தலங்களும், கட்டிடங்களும் ஸ்தாபனங்களும் ஜப்தி செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்படுமோ ?

அவைகள் இடிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்படுமோ ?

கூடவே, இன்று இந்த விருட்சத்தின் இலைகளைப் போன்று, ஊழியங்களில் காட்சிப்பொருட்களாய்க் காணப்படும் எல்லா Show-off களும் ஒன்றுமில்லாமல் போகும். எல்லா ஆட்டபாட்டங்களும் கூத்தாட்டங்களும் கோமாளித்தனங்களும், கலர் காட்சிகளும், புகைமூட்டங்களும், இசை மாலைகளும் காணாமலே போய்விடும் !

**" இவைகளைத் தறித்துப் போடுங்கள்.." என்பார் !**

## 4:14 - " இதின் கனிகளை சிதறடியுங்கள்.."

“ உங்கள் கனிகள் நிலைத்திருக்கும்படி உங்களை ஏற்படுத்தினேன்." என்றார் இயேசு.

இதுவரை ஊழியத்தில் நமக்குக் கிடைத்த ஆத்துமாக்களாகிய கனிகள் சிதறடிக்கப்பட்டுப் போகும் காலம் வருகிறதோ ?

ஏற்கனவே சத்துரு வேறு வகைகளில் செய்து கொண்டு வரும் இந்தக் காரியத்தை, அரசாங்கம் தன் முழு பெலத்தோடு செய்யப் போகிறதோ ?

விசுவாசத்தில் பெலன் குறைந்தவர்களும், தங்களுக்குள் வேர் கொண்டு ஸ்திரப்படாதவர்களும், மாம்சீகக் கிறிஸ்தவர்களுமாகிய கனிகள் சிதறடிக்கப்படும் காலமாகிய உபத்திரக்காலம் ஒன்று வரக் காத்துக்கொண்டிருக்கிறதோ ?

**4:14 - " இதின் கீழுள்ள மிருகங்களும், இதின் கொப்புகளிலுள்ள பட்சிகளும் போய்விடட்டும்.."**
நமது ஊழியங்கள் மூலம் நம்மிடம் அடைக்கலமாய் வந்தவர்களும், நமது நிழலுக்கு ஒதுங்கினவர்களும், சபை மூலம், ஸ்தாபனங்கள் மூலம் பயன்பெற்ற பயனாளிகளும், உபத்திரவத்தின் உக்கிரம் தாங்காமல் உயிர்தப்ப ஓடிப்போய் விடுவார்களோ ?

**தேவன் இந்த மகா பெரிய விருட்சத்தை வெட்டித் துண்டாடிப்போடத் தீர்மானித்த காரணம் என்ன ?**

விருட்சமாகிய மகா சபையில் வளர்ச்சிக்குக் குறைவோ ?

**அதிலே பசுமை இல்லையோ ?**
**அதிலே கனிகள் இல்லையோ ?**
**அதிலே ஆகாரம் இல்லையோ ?**
**அதிலே நிழல் இல்லையோ ?**
**அதிலே பெலன் இல்லையோ ?**



- கனியற்ற மரத்தைப் பார்த்தல்லவோ சபித்தார் ?
இதிலே, ஒரு விருட்சத்தில் காணப்பட வேண்டிய சகலமும் குறையற இருந்தும், அதை வெட்டிப்போட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதென்ன ?

- தேவன் சபையை சத்துருவின் கைகளில் ஒப்புக்கொடுக்க வேண்டிய அவசியம் என்ன ?

- தேவன் நேபுகாத்நேச்சாராகிய அந்த விருட்சத்தை வெட்டி வீழ்த்த வேண்டிய காரணம் என்ன ?

காரணம்... அந்த விருட்சம், தன்னிலே தானே
கண்ட செழுமை.. கொழுமை.. வளமை..
பெருமை என்ற தனக்குள் தான் கொண்டமமதையே !

# நியாயாதிபதிகள் 9:9-11

▸ " தேவர்களும் மனுஷர்களும் புகழுகிற என்னிலுள்ள என் கொழுமையை விட்டு விட்டுப் போவேனோ "
என்றதாம் ஒலிவமரம்..

▸ " என் மதுரத்தையும் என் நற்கனியையும் விட்டு விட்டுப் போவேனோ " என்றதாம் அத்திமரம்...

▸ " தேவர்களையும் மனுஷரையும் மகிழப்பண்ணும் ரசத்தை விட்டு விட்டுப் போவேனோ.." என்றதாம் திராட்சச்செடி...

▸ இன்று சபையில் இல்லாத பெருமை என்ன உண்டு ?
தங்கள் வரங்கள், தாலந்துகள் குறித்த பெருமை !
பட்டங்கள் படிப்பு என்ற பெருமை !

▸ ஊர்ப்பெருமை.. வம்சாவளிப்பெருமை.. ஜாதிப்பெருமை !
மேல்நாட்டு உத்தியோகப் பெருமை !
அரசாங்க வேலைப் பெருமை !

லவோதேக்கிய சபையாகிய இந்த விருட்சத்தின் குறையே, அது தான், ஐசுவரிய சம்பன்னன் என்றும், தனக்கு ஒரு குறையும் இல்லை என்ற அதின் நினைப்பும் செயலுமான குறையே !

விருட்சத்தின் வெளிப்புறம் இலைதழைகளோடும், கொப்பு கனிகளோடும், அளவில்லா ஆகாரத்தோடும், கவிந்த நிழலோடும், அபரிமிதமாய்க் காட்சியளித்துக் கொண்டிருந்தாலும், இந்த விருட்சத்தை வெகுகாலமாய் உள்ளூர கரையான் புற்று அரித்துத் தின்று கொண்டிருக்கிறதை நாம் காணவில்லையோ ?

சபையாகிய விருட்சத்தை, பரிசுத்தக் குலைச்சல்கள், காமவிகார அசுத்தங்கள், மற்றும் வாலிபர்களுக்குள்ளும் ஊழியர்களுக்குள்ளும் இன்று பாவமற்றது போல பரவலாய்க் காணப்படும், ஆண்டவர் வெறுக்கும் ஆத்துமப் பிணைப்புகள், இதயப்பிணைப்புகள், அன்பின் பிணைப்புகள் என்ற கரையான்கள் உள்ளூர தின்று புரையோடப்பண்ணி, அதின் ஆவிக்குரிய அபிஷேக பெலனையெல்லாம் உறிஞ்சிச் சக்கையாக்கி, அதை வெறும் கூடாக்கி வைத்திருப்பது கண்கூடு அல்லவோ ?

**தானியேல் 4:15 - ஆனாலும் இதின் வேர்களாகிய அடிமரம் பூமியில் இருக்கட்டும்.**

என்ன தான் இந்திய சபையாகிய இந்த விருட்சத்துக்குத் தனது பழமையும் பாரம்பரியமுமான 2000 வருட அனுபவங்களைக் குறித்தும், தனது நேர்த்தியான இலைகளாகிய பார்வைக்கு வெளிப்பிரகாரமான சகல விஸ்தீரணங்களைக் குறித்தும், கனிகளாம் ஆத்துமாக்களின் பெருக்கத்தைக் குறித்தும், இறையியல் வசன ஆகார ஆசீர்வாதங்களைக் குறித்தும் மேட்டிமையும் பெருமையும், இச்சையும் நாளடைவில் வந்து விட்டாலும், அதின் வேராகிய அடிமரமாம் ஆதி விசுவாசமும், அதைத் தங்கள்

கண்ணீரால், வியர்வையால், இரத்தத்தால், தியாகத்தால் நீர்ப்பாய்ச்சி, வசனமாம் உரம் போட்டு, ஆழமாய் வேரூன்றி வளரச் செய்த அப்போஸ்தலன் தோமாவிலிருந்து, தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், மற்றும் போதகர்கள் பட்ட பாடுகள், தியாகங்கள் மற்றும் அவர்களது அன்பின் பிரயாசங்களை மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவர் அல்லவே !

நிச்சயமாகவே இதன் அஸ்திபார உபதேசமும், ஆணிவேராகிய பரிசுத்தமும், அடிமரமாகிய விசுவாசமும் இந்திய மண்ணில் மிக மிக ஆழமாகவும் பலமாகவும் உண்டு. அது அழிந்து போவதுமில்லை. பட்டுப் போவதுமில்லை.. தேவன் அதை அழிய விடவும் மாட்டார்..

**4:15 - "இரும்பும் வெண்லமுமான விலங்கு இடப்பட்டு, வெளியின் பசும்புல்லிலே தங்கி, ஆகாயத்துப் பனியிலே நனைவதாக.."**

இன்றைய நமது சபையானது கம்யூனிச ரஷ்யா, சீனா, பல்கேரியா, ருமேனியா, க்யூபா மற்றும் நாஜி ஜெர்மனி நாடுகளில் ஒரு காலத்தில் சிறைப்பட்டுப் போய் சித்ரவதை அனுபவித்த சபைகளையும், போதகர்களையும், விசுவாசிகளையும் போல, இரும்பும் வெண்கலமுமான விலங்கிடப்பட்டு..

இது வரை தேவ பாதுகாப்பின் செட்டைகளுக்குள், சிலுவையின் நிழலில், இருந்த சபை, திறந்த வெளியிலே, பாதுகாப்பு வேலி பிடுங்கப்பட்டு, அந்நியரின் கைகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, நிராதரவாய், நிர்க்கதியாய் ஒப்புக்கொடுக்கப்படுமோ ?

கான்ஸன்ட்ரேஷன் கேம்ப் என்ற கடுமையான லேபர் கேம்ப்பிலே இரவு பகலாய் கடுமையாய் வேலை வாங்கப்பட, ஆகாயத்துப்பனிக்கும், குளிருக்கும், கொதிக்கும் வெயிலுக்கும் சபையின் நமது ஆண்களும் பெண்களும் ஒப்புக்கொடுக்கப்படப் போகிறார்களோ ?

## 4:15 - " மிருகங்களோடே பூமியின் பூண்டிலே அவனுக்குப் பங்கு இருக்கக்கடவது.."

" துன்மார்க்கரோடே அவருக்குப் பிரேதக் குழியை நியமித்தார்கள் " என்று இயேசுவைக் குறித்துச் சொல்லப்பட்டு, அவரே இருபக்கமும் கள்ளர்களோடே அறையப்பட்டிருப்பாரானால்..

அப்போஸ்தலனாகிய பேதுருவும் பவுலும் வேறு ஒருவனால் அரைகட்டப்பட்டு, அவர்களுக்கு இஷ்டமில்லாத இடத்துக்குக் கொண்டு போகப்பட்டார்களானால், தன் மேட்டிமையாலும், பெருமையாலும், பரிசுத்தக் குலைச்சலாலும்,  ஆகாரமோகம் மற்றும் அளவுக்கு மிஞ்சிய ஓய்வு, தூக்கம், உலக ஐக்கியம் என்ற சாங்கோபாங்கத்தினிமித்தம் புறஜாதிகள் கையில் ஒப்புக்கொடுக்கப்படப் போகும் சபை, பூமியின் மிருகங்களைப் போன்ற வாழ்க்கை வாழும் மனிதர்களோடு சிறைகளிலே அடைபட்டு, கட்டப்பட்டு அவர்களோடே இவர்களுக்குப் பங்கு இருக்கும்படியாய் அப்படி ஒரு நிலைக்குள்ளாவார்களோ ?

கல்லான இருதயத்தை எடுத்துப் போட்டு மாம்சமான இருதயம் பெற்ற விசுவாச குடும்பங்கள், வரப்போகும் நாட்களில் மனுஷ இருதயமின்றி, மிருக இருதயம் போன்ற இருதயமாய் மாறிப்போவார்களோ ?

மாடுகளைப் போல புல் மேய பலவந்தம் பண்ணப்படுவார்களோ ?

இளைய குமாரன் பன்றி தின்கிற தவிட்டினால் கூட தன் வயிற்றை நிரப்ப ஆசையாய் இருந்தானே ! அப்படி ஒரு நிலை வருமோ ?



**4:16 - " இப்படியிருக்கிற அவன் மேல் 7 காலங்கள் கடந்து போக வேண்டும்.."**




இந்திய சபையின் மேல் கடந்து போகப் போகும் 7 வருட காலமோ ?

யோசேப்பின் காலத்தைப் போன்ற மெலிந்த பசுக்களின் வருடமோ (சபை இளைத்து மெலிந்து துரும்பாகிப் போகுமோ ?)

அந்திக் கிறிஸ்துவின் காலத்திற்கு முன்னோட்டமான 7 வருட உபத்திரவ காலமோ ?

**4:17, 25 - " உன்னதமானவர் மாத்திரமே ராஜ்யபாரம் பண்ணி ஆளுகை செய்கிறார் என்று நீர் அறிந்து கொள்ளுமட்டும்..."**

கர்த்தர் ஒருவர் மாத்திரமே சபையின் தலையும் அஸ்திபாரமுமானவர் என்றும், அவர் ஒருவரே மகிமைக்கும் வல்லமைக்கும் அதிகாரத்துக்கும் பாத்திரர் என்றும், சபையின் பெலத்தினாலும் பராக்கிரமத்தினாலும், வரங்களினாலும், தாலந்துகளினாலும், கல்வி அறிவினாலும் அனுபவத்தினாலும், பணபலத்தினாலும், புயபலத்தினாலும் அல்ல - தேவ கிருபையினாலும், அவரது ஆவியினாலும் மட்டுமே ஆகும் என்று நரஜீவன்களாகிய இன்றைய சபை அறியுமட்டும், உணருமட்டும், கற்றுக் கொள்ளுமட்டும், மனதார ஒத்துக்கொள்ளுமட்டும், அதற்கு புத்தி வருமட்டும், அதின் மேல் 7 காலங்கள் கடந்து போயாக வேண்டும் என்று கர்த்தர் அதை விட்டுவிடப் போகிறாரோ ?



**4:17, 24**
**“ உன்னதமானவருடைய தீர்மானத்தினாலும், காவலாளர் தீர்ப்பினாலும், பரிசுத்தவான்களின் மொழியினாலும், இந்த விசாரணை தீர்மானிக்கப்பட்டது.."**

# சபையே, இது உன் மேல் இன்று வந்த தேவ

“நான் நிர்ணயித்திருக்கிறபடியே நடக்கும்..
தேசமனைத்தின் மேலும் நிர்ணயிக்கப்பட்ட
யோசனை இதுவே !

சகல (கிறிஸ்தவ சபை) ஜாதிகளின் மீது
நீட்டப்பட்ட கையும் இதுவே !

சேனைகளின் கர்த்தர் இப்படி
நிர்ணயித்திருப்பாரானால், யார் அதை
வியர்த்தமாக்குவான் ?

நீட்டப்பட்ட அவரது கையை யார் திருப்புவான் ?

(ஏசா 14: 24,26,7) என்று மீண்டும் தேவனால்
சொல்லப்படுகிறதோ ?

**4: 26 - " விருட்சத்தின் வேர்களாகிய அடிமரம் தரையில் இருக்கட்டும் என்று சொல்லப்பட்டது என்னவென்றால், நீர் பரம அதிகாரத்தை அறிந்தபின், ராஜ்யம் உமக்கு நிலைநிற்கும்..**

" சபை, பரம அதிகாரத்தை அறிந்தபின், தன் அஸ்திபார உபதேசங்களுக்குத் திரும்பியபின், உடைந்து நொறுங்கி, கதறி கர்த்தரிடம் திரும்பிய பிறகு தான், அது தன் முந்தின சீருக்குத் திரும்பும் நிலை வருமோ ?..

# தீர்மானமோ ?

**4:27 - " ஆகையால் ராஜாவே, நான் சொல்லும் ஆலோசனையை நீர் அங்கீகரித்துக் கொண்டு, நீதியைச் செய்து, உமது பாவங்களையும், சிறுமையானவர்களுக்கு இரங்கி, உமது அக்கிரமங்களை அகற்றிவிடும்..**

அப்பொழுது உம்முடைய வாழ்வு நீடித்திருக்கலாம்.."

ஆகையால் சபையே, உன் காரியங்கள் தேவனுக்கு முன்பாக செம்மையாய் இராதபடியினால், உன் துர்க்குணத்தை விட்டு நீ மனம் திரும்பி, அவரது சத்தத்துக்கு செவிகொடாமல் போனதை ஒத்துக்கொண்டு, தேவனுடைய ஆலோசனையை நீ அங்கீகரித்து, நீதியைச் செய்து உனது பாவங்களையும் அக்கிரமங்களையும் உனக்கு முன்னின்று அகற்றிவிடு !
(அப் 8:21,22/ எரே 3:13 / தானி 4:27)

நவம்பர் 2016 ல் Demonitization என்ற பணமதிப்பிழப்பு அமுலுக்கு வந்தவுடனே, நாம் எழுதி வெளியிட்டதை இங்கே இணைப்பது ஏற்றதாயிருக்கும் என்பதால் இத்துடன் இணைக்கிறோம்..



## உன் வீட்டுக் காரியத்தை ஒழுங்குபடுத்து.. நீ பிழைக்க மாட்டாய்.. மரித்துப்போவாய் !

**[ஏசா 38:1]**

## இந்திய சபைக்கு இன்னொரு எச்சரிப்பு

### 1. எதிர்பாரா அதிரடி முடிவு இப்போது இந்தியாவில் அறிவிக்கப்பட்டது ஒரு அதிரடி முடிவு..

நம் மரணமோ, கிறிஸ்துவின் வருகையோ,அந்திக் கிறிஸ்துவின் வருகையோ,666 சிப் பதிக்கப்படுவதோ எப்போதும் நடக்கலாம் என்பது தெரிந்ததே..

நமது பிரதமரின் இந்த அதிரடி முடிவுக்காவது 4 மணி நேரம் அவகாசம் கொடுக்கப்பட்டது..

ஆனால் ஆண்டவர் நமக்கு பல ஆயிரம் ஆண்டுகள் அவகாசம் தந்து விட்டார். "இனி காலம் செல்லாது. எதுவும் எப்போதும் நடக்கலாம்.

சபையே, விசுவாசியே, உன் ஆவிக்குரிய காரியங்களை உடனே ஒழுங்கு படுத்திக்கொள்.அல்லது நீ பிழைக்கமாட்டாய். ஆவிக்குரியதாக நீ நினைத்துக் கொண்டிருக்கும் அனைத்தும் மரித்துப் போகும்..
Set your everything in order.. Right now !

## 2. ஒரே ராத்திரியில் ஒன்றுமில்லாமல் போன நோட்டுகள்.

நேற்றைய மதிப்புள்ள நோட்டுகள் இன்று குப்பையிலே.. சாக்கடையிலே.. கங்கையிலே..

விசுவாசியே, இன்று நீ மேன்மையாக நினைத்துக் கொள்ளும் உன் வீடு வாசல்,உயர்ந்த பதவி,உன் பிள்ளைகளின் படிப்பு,வெளி நாட்டு வேலை,கை நிறைய பணம், தங்க நகைகள் யாவும் மண் என்றும் "சீ" என்று தெருவில் எறிந்து விடும் நாட்கள் உன் மேல் சடுதியாய் வரும். அதற்கு முன் இப்போதே பவுலைப் போல், அவைகள் யாவையும் குப்பை என்று உன் எண்ணத்தில் இருந்து எறிந்துவிடு!

## 3. பரலோகத்தில் பொக்கிஷம் சேர்த்து வை!

ATM களும் வங்கிகளும் திடீரென்று மூடப்பட்டு விட்டது போலவே, இன்று நீ செய்ய வாய்ப்பிருக்கும் அநேக நற்செயல்களும் ஊழியங்களும் செய்ய முடியாமல் கதவுகள் சடுதியாக மூடப்பட்டுவிடும் நாட்கள் வந்துவிட்டது.

" சகலமும் பரிபூரணமாய் இருக்கையில் நீ மனமகிழ்ச்சியோடும் களிப்போடும் உன் தேவனாகிய கர்த்தரை சேவியாமல் போனதினிமித்தம், சகலமும் குறைவுபட்டு பட்டினியோடும் தாகத்தோடும் நிர்வாணத்தோடும் கர்த்தர் உனக்கு விரோதமாய் அனுப்புமள சத்துருக்களைச் சேவிப்பாய்.." (உபா 28:47) ஆகவே..

▸ ஜெபித்து ஜெபித்து, எவ்வளவு ஜெபத்தை பரலோக பொக்கிஷத்தில் பொக்கிஷ வைப்பாக வைக்க முடியுமோ,சேர்த்து வைத்துவிடு !

▸ வேதத்தை எவ்வளவு படிக்க முடியுமோ படித்து உன் இருதயத்தை வசனத்தால் நிறைத்துவிடு !
எவ்வளவு நேரம் தேவனோடு தனிமையில் செலவிட முடியுமோ அவ்வளவு நேரமும் பரலோகத்தில் உனது இன்வெஸ்ட்மென்ட்.. மறவாதே !

▸ கர்த்தருக்காக எவ்வளவு ஊழியம் செய்ய முடியுமோ செய்து முடித்துவிடு!

▸ கர்த்தருக்காக எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவும் கொடுத்துவிடு! "ஐசுவரியத்தை சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறவர் அவரே" (உபா 8:18) என்பது உனக்கு நினைவிருக்கட்டும்!

## 4. போலிகளைக் கண்டு ஏமாறாதே!

இது கள்ள நோட்டுகளை ஒழிக்கும் திட்டம்..
ஆடுகளுக்கும் ஆட்டுத்தோல் போர்த்த ஓநாய்களுக்கும்..
ஊழியம் செய்தவனுக்கும் ஊழியம் செய்யாதவனுக்கும்..
உண்மைத் தீர்க்கனுக்கும் கள்ளத் தீர்க்கரிசிக்கும்..
உண்மைப் போதகனுக்கும் கள்ளப் போதகனுக்கும்..

உண்மையாய் ஊழியம் செய்தவனுக்கும்,
பெயருக்காகவும் புகழுக்காகவும், பணத்துக்காகவும்,
பெண்ணுக்காகவும் ஆடு மேய்த்தவனுக்கும்..

கதிருக்கும் பதருக்கும்.. ஆவியின் அக்கினிக்கும் அந்நிய அக்கினிக்கும்..வெள்ளாடுகளுக்கும் செம்மறியாடுகளுக்கும்.. புத்தியுள்ள கன்னியருக்கும் புத்தி இல்லாதவர்களுக்கும்.. கன்மலையில் வீடு கட்டினவனுக்கும் மணல் மேல் கட்டினவனுக்கும்..

அசலுக்கும் போலிக்கும்.. உள்ள வித்தியாசத்தை தேவன் தோலுரித்துக் காட்டப் போகும் நாட்கள் வந்துவிட்டது. " போலிகளை அடையாளம் கண்டு விரட்டி அடியுங்கள் !"

## 5. சிறியவையே சிறந்தது 500 /1000 அல்ல..

100,50,10 இன்று மதிப்புள்ளவை! பெரிய பெரிய சபை கட்டிடங்களையும், ஜெப கோபுரங்களையும் தோட்டங்களையும் கூட்டங்களையும், டிவி சேனல்களையும் பிரபலங்களையும் கண்டு ஏமாந்து போகாதே!

பணக்காரன் அல்ல ஏழை லாசருவே பரலோகம் போய் சேர்ந்தான்! எருசலேம் அரண்மனை அல்ல பெத்லகேமின் மாட்டுக் கொட்டகை! ஐசுவரியவான்களின் காணிக்கை அல்ல..ஏழை விதவையின் இரண்டு செப்புக்காசு !

பெயர் அறியாத அநேக ஏழை எளிய விசுவாசிகளின் கண்ணீர் ஜெபங்களும், எளிய காணிக்கைகளும், பாரத்தோடு செய்யும் தனி ஆள் மற்றும் கைப்பிரதி ஊழியங்களும். நடையாய் நடந்து காடுகளிலும் மலைகளிலும் செய்யும் மிஷினரி ஊழியங்களும் பரலோகக் கணக்கில் இடைவிடாமல் பதிவாகிக் கொண்டே இருக்கிறது!

## 6. கணக்குக் கேட்கப்படும் நாட்கள் வந்துவிட்டன !

இன்று எல்லா வருமானங்களின் மூலகாரணங்களும் தோண்டித்துருவி ஆராயப்படுகிறது.. ஆதாரம் கேட்கப்படுகிறது. இதோ விசாரிப்பின் நாட்கள் ! நாம் செய்த பாவங்கள் மட்டுமல்ல.. செய்யாமல் விட்டுவிட்ட நல்லகாரியங்கள்.. தூங்கிக் கழித்த மணிநேரங்கள்..

ஜெபத்தை அலட்சியம் செய்த தருணங்கள்.. டிவியிலும் இன்ட்டெர்நெட்டிலும் நண்பர்களோடும் வீணாக செலவிட்ட நேரங்கள்..

ஆத்தும பாரமற்று அலைந்து வீணடித்த நாட்கள்..
செவியிருந்தும் செவியை அடைத்துக் கொண்ட நாட்கள்..
இவை யாவற்றுக்கும் கணக்குக் கேட்கும் நாள் வந்து
விட்டது! செய்த ஊழியங்கள் என்ன நோக்கத்துக்காக
செய்யப்பட்டது என்பது தோண்டித்துருவி ஆராயப்படப்
போகிறது! "கல்லு மச்சியிலிருந்து கூப்பிடும்..

நீங்கள் சம்பாதித்த பணமும் பொருளும் உங்களுக்கு
விரோதமாய் சாட்சியிடும் ! வீட்டில் தூசி படிந்து கிடக்கும்
வேத புத்தகம் சாட்சி சொல்லும்..

சுவிசேஷம் அறிவிக்கப்படாத பக்கத்து வீட்டுக்காரன்
உனக்கு விரோதமாய் எழும்பி நிற்பான்! விநியோகிக்கப்
படாமல் பெட்டி பெட்டியாய் சபையிலும் வீடுகளிலும்
கிடக்கும் புதிய ஏற்பாடுகளும் கைப்பிரதிகளும் எழுந்து
நின்று உனக்கு விரோதமாய் சாட்சி சொல்லும்!

## 7. புத்தியோடு பிழைத்துக் கொள் !

“இதோ இப்பொழுதே அனுக்கிரக காலம்,
இப்பொழுதே இரட்சணிய நாள்.."

பதுக்கி வைத்திருக்கும் நோட்டுக்களை என்ன செய்வது
என்பதே அநேகரின் கவலை.. கர்த்தருக்காக செய்ய
நினைக்கும் எல்லாவற்றையும் இப்போதே செய்துவிடு! அது
ஜெபமாக இருக்கட்டும்..அல்லது இது வரை தூங்கிக்
கிடந்த வேத வாசிப்பாக இருக்கட்டும்..

ஓரங்கட்டப்பட்ட ஊழியமாக இருக்கட்டும்..அல்லது
மன்னிக்கப்படாத கசப்புகளாக இருக்கட்டும்..
செப்பனிடப்படாத உன் ஆவிக்குரிய பலிபீடமோ அல்லது
நொறுங்கிப்போன தேவனோடு உள்ள உறவோ..

எதுவாக இருந்தாலும் இன்றே இப்போதே சரி செய்துவிடு!
நாளை என்பது யாருடைய நாளேட்டிலும் இல்லை..
Tomorrow never comes !

ஆகவே.. "உன் வீட்டுக் காரியத்தை.. சபையின் காரியத்தை..உன் ஆவிக்குரிய காரியத்தை..தேவனோடும் மனிதரோடும் உள்ள காரியத்தை.. ஒழுங்குபடுத்திவிடு! பிழைக்க வாய்ப்பில்லாமல் யாவும் மரித்துப் போகுமுன் எசேக்கியாவைப் போல சுவர்ப்புறமாகவோ சிலுவையைப் பிடித்துக்கொண்டோ கண்ணீரோடு புலம்பு !

**தேவனை நோக்கி வேண்டிக்கொள்.. ஒரு வேளை மன்னிக்கப்படலாம்.. (அப்.8 :22)**

## 4:28 - " இதெல்லாம் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் மேல் வந்தது.."

சபையே, மேற்சொல்லப்பட்ட இவையெல்லாம் உன் மேல் வரப்போகிறதோ ?

## 4:29 - " 12 மாதம் சென்றபின்பு.."

தேவனுடைய தீர்ப்பு நேபுகாத்நேச்சாருக்கு சொல்லப்பட்ட பின்பும் கூட, அதிலிருந்து மனம் திரும்பி தன்னை அவன் பாதுகாத்துக்கொள்ள அவனுக்கு ஆலோசனை சொல்லப்பட்டதும் அல்லாமல், அவனுக்கு அதைச் செய்ய 12 மாதகால அவகாசமும் கொடுக்கப்பட்டது.. நோவாவின் கால ஜனத்துக்கு 120 வருட கால அவகாசம் போக, பேழையின் வேலை முடிந்து, சகல பிராணிகளும் உட்பிரவேசித்த பின், கடைசி நேரத்திலாவது யாவாவது கீழ்ப்படிந்து வந்துவிட மாட்டார்களா என்ற எதிர்பார்ப்போடு நம் ஆண்டவர், இன்னும் 7 நாட்கள் பேழையின் கதவைத் திறந்தே வைத்திருக்கவில்லையோ ?

இயேசு சொன்ன அத்திமரத்துக்கு "இந்த வருஷமும் இருக்கட்டும்" என்று ஒரு வருடம் கூட்டித்தரப்படவில்லையோ ?

"இன்னும் 40 நாட்கள் உண்டு.." என்று நினிவேயின் மனம்திரும்புதலுக்கு தவணை தரப்படவில்லையோ ?

லோத்தின் மருமகன்களுக்கு தப்பிப் பிழைத்துக்கொள்ள ஒரு இரவு கால அவகாசம் கொடுக்கப்படவில்லையோ ?

கடைசி மணி நேரத்தில் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த போது கூட  கள்ளர்கள் இருவருக்குமே கடைசிமணி நேர இறுதி வாய்ப்பு ஒன்று கொடுக்கப்படவில்லையோ ?

நேபுகாத்நேச்சாருக்கு 12 மாதம்...



## நமது சபைகளுக்கு ??

தரிசனம் கிடைக்க ஒரு காலம்..
அது நிறைவேற ஒரு காலம்...
தேவ சித்தம் வெளிப்பட ஒரு காலம்..
அது வந்து நிறைவேற ஒரு காலம்..
நிகழப்போவதை முன்கூட்டியே சொல்ல ஒரு காலம்..
அது வந்து பலிக்க ஒரு காலம்..

நேபுகாத்நேச்சாரின் மேல் அது
12 மாதம் கழித்து வந்து பலித்தது..

நமது சபைகளின் மேல் இந்த நெருக்கமும் நெருக்கடியும் உபத்திரவமும் சிறையிருப்பும் சீக்கிரமே வரப்போகிறதோ ?

**4:30 - " நான் கட்டின பாபிலோன் அல்லவா ?"**
நான் என் சபையைக் கட்டுவேன் என்றார் இயேசு..
ஆனால்  இன்றோ, "என் சபை, நான் கட்டிய சபை,நான் கட்டி எழுப்பிய நிறுவனம், என் பள்ளி..என்..என்..என்.."

**4: 31 - " இந்த வார்த்தை ராஜாவின் வாயிலிருக்கும் போதே வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டானது.."**
சபையின் மேல் வந்த தீர்மானம் வானத்திலிருந்து உண்டானதோ ?

**4: 31 - " ராஜ்யபாரம் உன்னை விட்டு நீங்கிற்று.."**
சபையே, உனக்கு தேவன் தந்திருந்த ஆவிக்குரிய ராஜ்யபாரமும், சகலத்தின் மேலும் தேவன் உனக்குத் தந்திருந்த அதிகாரமும், பிடிப்பும் ஆளுகையும் உன்னைவிட்டு நீக்கப்படப் போகிறதோ ?

**4:33 - "அந்நேரமே இந்த வார்த்தை நேபுகாத்நேச்சார் மேல் நிறைவேறியது..**
அவன் தள்ளப்பட்டான், புல் மேய்ந்தான்..
தலைமயிர் கழுகுகளின் இறக்கைகள் போலவும்,
நகங்கள் பட்சிகளின் நகங்கள் போலவும் ஆயிற்று.."

இந்தத் தீர்க்கமான வார்த்தைகள் சபையின் மேல் நிறைவேறப் போகிறதோ ?
சபை தள்ளப்பட்டுப் போகிறதோ ?..
ஆவிக்குரிய வறட்சி..பஞ்சம்..

நேபுகாத்நேச்சாரின் ரூபமே மாறிப்போனது போல, கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய ரூபமும் சரீர ரூபமும் அவர்களது சிறைவாசம், பட்டினி, அடி, உதை, சித்ரவதையால் மாறிப் போகுமோ ?

அப்படித்தான் கம்யூனிச சிறைவாச நாட்களிலும் கிறிஸ்தவர்களுக்கு நடந்தது.. என் ஜனம் காய்ந்து கட்டையாகி உருக்குலைந்து போகுமோ ?
இது வரை உன்னதப்பாட்டையே உளமாறப் பாடிக் கொண்டிருந்த சபைக்கு, புலம்பலின் புத்தகம் என்ன என்பது இந்தக் காலங்களில் தான் தெளிவாகப் புரியுமோ ?

**4: 34 - " அந்த நாட்கள் சென்ற பின்பு.."**
சபையின் மேல் அந்த ஏழு காலங்கள் கடந்த பின்பு..புலம்பலும் அழுகையுமான அந்த வருடங்கள் முடிந்த பின்பு.. அன்று பாபிலோனில் எழுபது வருட சிறையிருப்பு முடிவுக்கு வந்தது போல, சபையின் சிறையிருப்பின் நாட்களுக்கும் ஒரு முடிவு வரும்..

**4: 34 - " நான் என் கண்களை வானத்துக்கு ஏறெடுத்தேன்.."**
அந்த நாட்களின் முடிவில் சபை தன் கண்களை பரலோகத்துக்கு நேராக ஏறெடுக்குமோ?..

**" என் புத்தி எனக்குத் திரும்ப வந்தது.."**
**சபைக்கு புத்தி திரும்ப வரும்..**

**"நான் உன்னதமானவரை ஸ்தோத்தரித்து.."**
**இப்போது தான் சபை உண்மையாய் உன்னதரை ஸ்தோத்தரிக்கும்..**

**"என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவரை புகழ்ந்து மகிமைப்படுத்தினேன்.."**

இனிமேல் தான் சபை உண்மையாய் என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவரை புகழ்ந்து மகிமைப்படுத்தும்.."

( இதற்கு முன்னால், கூச்சல் போட்டான்..
பேயாய் கித்தாரையும் ட்ரம்மையும் அடித்தான்..
புகை போட்டான்.. என்னென்னமோ செய்தான் !! )

**“ அவருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம்.. அவருடைய ராஜ்யமே தலைமுறை தலைமுறையாக நிற்கும்..”**

இதை சபை இனிமேல் தான் உண்மையாய் அறியும் !

**4:35 - " பூமியின் குடிகள் ஒன்றுமில்லை.."**
ஆம் ! நான் ஒன்றுமில்லை என்றும், அவரே தமது சித்தத்தின்படி சகலத்தையும் நடத்துகிறார் என்று சபை அறிந்து கொள்ளும்..

**4:35 - " அவரது கையைத் தடுத்து, அவரை நோக்கி," என்ன செய்கிறீர்" என்று சொல்லத்தக்கவன் ஒருவனுமில்லை.."**
நோவாவோ, தானியேலோ, யோபுவோ- யார் அவருக்கு முன்பாக நின்றாலும், அவரைத் தடுக்க முடியாது..
"ஏன் இதைச் செய்யப் போகிறீர் ?" என்று ஒருவனும் கேட்கவும் முடியாத ஒரு நிலை வருமோ ?

**4:36 - " என் புத்தி திரும்ப வந்தது..**
**என் மகிமை, என் முகக்களை திரும்ப வந்தது.."**
விசுவாசிக்கும் பாஸ்டருக்கும், ஐயருக்கும் சபையாருக்கும், குருக்களுக்கும் கன்னியாஸ்திரீகளுக்கும் புத்தி திரும்ப வரும்..சபையின் மகிமையும் முகக்களையும் திரும்ப வரும்..

**"என் மந்திரிமாரும் பிரபுக்களும் திரும்பி வந்தனர்.."**
சபையின் பிரதானிகளும் பிஷப்புகளும் திரும்ப வருவர்..

**"நான் ஸ்திரப்பட்டேன்"**
சபை கர்த்தருக்கு முன்பாக முன்போல ஸ்திரப்படும்..

**"அதிக மகத்துவம் கிடைத்தது.."**
முந்தின சீரைப் பார்க்கிலும் நற்சீர் உண்டாகும்..

இந்த நாட்களில் தான் சபை மீண்டும் உண்மையான வரலாறு காணா எழுப்புதலைக் காணுமோ ?
அந்த எழுப்புதலுக்கு முன் ஒரு சிறையிருப்புக்குள்ளும் சித்ரவதைக்குள்ளும் சபை கடந்து போவது கட்டாயத்திலும் கட்டாயமோ ?

**4:37 - " நேபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தின் ராஜாவைப் புகழ்ந்து, உயர்த்தி, மகிமைப் படுத்துகிறேன்.. அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமானவைகள்.. அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று எழுதினான்.."**

சபை புதிய சகாப்தம் எழுதும்.. சபை பரலோக ராஜாதி ராஜாவை, தேவாதி தேவனைப் புகழ்ந்து, அவரையே உயர்த்தி மகிமைப்படுத்தும்.. அவரது கிரியைகள் மட்டுமே சத்தியம் என்றும் அவரது வழியே நியாயம் என்றும் அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று மட்டுமல்ல..

இது வரை இந்தியத் திருச்சபை வரலாறு கண்டிராத வீழ்ச்சியையும் உபத்திரவத்தையும் மட்டுமல்ல, அதைத் தொடர்ந்த வரலாறு காணா எழுச்சி ஒன்றையும், பரிசுத்த ஆவியானவரே வந்து இறங்கப் போகும் எழுப்புதல் ஒன்றையும் அது கண்டது என்று புதிய சகாப்தம் ஒன்றையும் அது தன் வரலாற்றுப் பக்கங்களில் காலத்தால் அழியா எழுத்துக்களால் எழுதி வைக்கும் !!

## ஆமென் !! ஆமென் !!





### பின் குறிப்பு: விருட்சத்தின் 2 அர்த்தங்கள்..

2000 வருட பழைமையான, தமது இரத்தத்தால் சம்பாதிக்கப்பட்ட, அந்த சபையின் பாவத்தினிமித்தமும் அக்கிரமத்தினிமித்தமும் அதைத் தப்ப விடாமல், அப்படிப்பட்ட தமது சபையையே உபத்திரவத்துக்கு ஒப்புக்கொடுத்து அவர் வெட்டிப் போடுவாரானால், இன்றைய நவீன நேபுகாத்நேச்சாராகிய ஆட்சியாளரும், அவரது சகாக்களும், நாடு முழுவதும் பரந்து விரிந்த 92 வருடப் பழைமையான RSS என்ற விருட்சமும் எம்மாத்திரம்?

அதுவும் வெட்டப்பட்டு, ஒன்றுமில்லாமல் போய், தேவன் ஒருவரே மனிதர் மத்தியில் ஆளுகை செய்கிறவர் என்று அறிந்து கொண்டு அவர்களும் அவரை மகிமைப்படுத்துவார்கள் !!

# மெனே மெனே தெக்கேல் உப்பார்சின்

## Chapter - 5

தானியேல் முதல் ஆறு அதிகாரங்களின் சம்பவங்களுக்கும், இன்றைய கடைசி நிமிட நேரத்தின் சபையின் நிலைமைக்கும் உள்ள ஒப்புமைகளையே நாம் இது வரை பார்த்து வருகிறோம்..

பிந்தின ஆலயத்தின் மகிமையைக் காணுமுன்பாக தேவன் அவர்களைக் கடந்து செல்லப் பண்ணின 70 வருட பாபிலோனிய சிறையிருப்புக்கும், நமது நாட்களில் நாம் காண வாஞ்சிக்கும் பிந்தின ஆலயத்தின் மகிமையாகிய வரலாறு காணா எழுப்புதலுக்கு முன்பாக, தேவன், நமது இந்திய சபைகள் கடந்து போக வைத்திருக்கும் பாதையை, வசன வெளிச்சத்தில் காட்டி, சபையை அதற்கு ஆயத்தப்படுத்துவதே இப்புத்தகத்தின் நோக்கம்..

**இப்போது..**
**தானியேல் 5ம் அதிகாரம்..**

### கர்த்தரின் பொக்கிஷமாகிய பாத்திரங்கள்

**“சகல வெள்ளியும், பொன்னும், வெண்கலத்தினாலும், இரும்பினாலும் செய்யப்பட்ட பாத்திரங்களும், கர்த்தருக்குப் பரிசுத்தமானவைகள். அவைகள் கர்த்தரின் பொக்கிஷத்தில் சேரும்..**
**(யோசுவா 6:19, 24)**

எரிகோ விழுமுன், தேவனால் யோசுவாவுக்குச் சொல்லப்பட்ட வார்த்தைகள் இவை..

பாவம் மன்னிக்கப்பட்டுப் பரிசுத்தமான ஒவ்வொருவரும், அவர்கள் எப்படிப்பட்ட தன்மையுள்ள பாத்திரமாய் இருந்தாலும், அது **"கர்த்தருக்குப் பரிசுத்தம்"** என்ற லேபல் ஒட்டப்பட்டு, அவருக்குப் பரிசுத்தமாய், அவரது பொக்கிஷங்களாய், அவரது பொக்கிஷசாலையிலே, அவரது உபயோகத்துக்காக, அவருக்காகவே பொக்கிஷ வைப்பாக வைக்கப்படுகின்றன..

## பெரிய வீடாகிய தேவனின் ஆலயத்தின் பாத்திரங்கள்

தேவனுடைய ஆலயமாகிய அவரது சபையான பெரிய வீட்டிலே, பொன்னும் வெள்ளியுமான பாத்திரங்களாகிய கனத்துக்குரியவர்கள் மட்டுமல்லாது, அங்கே மரமும் மண்ணுமான, மனிதப் பார்வையிலே மதிப்பிலும் கனத்திலும் குறைவான பாத்திரங்களும் உண்டு.

ஆனால் அவைகள், தேவனால் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமன்றி, தேவ பார்வையில் கனத்துக்குரிய பாத்திரங்களாகவே அவரது பொக்கிஷசாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன..

## புறஜாதிகள் கையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட பாத்திரங்கள்

தேவனுக்காக நேர்ந்து கொள்ளப்பட்ட, அவரது பொக்கிஷசாலையாகிய ஆலயத்தில் வைக்கப்பட்ட இந்த கனத்துக்குரிய விலையேறப்பெற்ற பாத்திரங்களில் சிலவற்றைத் தான், அவர்களின் பாவத்தினிமித்தம், தேவன், பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் கையில் ஒப்புக்கொடுக்க..அவனோ, அவைகளைத் தன் தேசத்திலுள்ள தன் தேவர்களின் கோவிலுக்குள் கொண்டு போய், அவைகளைத் தன் தேவர்களின் பண்டசாலைக்குள் வைத்தான்..

இதையே நாம் இப்புத்தகத்தில் முதல் அத்தியாயத்தில் தானியேல் முதலாம் அதிகாரத்திலிருந்து பார்த்தோம்.

## இப்போது காட்சி மாறுகிறது..

நேபுகாத்நேச்சாருக்குப் பின், அவன் வழி வந்த பெல்தெஷாத்சார் தனது தேசத்தின் பெருவிழாவாகிய திருவிழா அன்று, தானும் தன் பிரபுக்களும், தன் மனைவிகளும், மறுமனையாட்டிகளும் குடித்துக் கொண்டாட, எருசலேமில் தேவனுடைய வீடாகிய ஆலயத்திலிருந்து கொண்டுவரப்பட்ட பொன், வெள்ளிப் பாத்திரங்களைக் கொண்டுவரும்படி கட்டளையிடுகிறான்..

வரலாற்றின் அந்த நாட்களிலிருந்து சற்று நமது இன்றைய நாட்களுக்கு நமது பார்வை திரும்பட்டும்..

- பாவத்திலிருந்து கழுவி எடுக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்ட நமது வாலிபர்களும், கன்னிகைகளும், விசுவாச சகோதர சகோதரிகள் ஒவ்வொருவரும், பொன்னும் வெள்ளியும் வெண்கலமுமான பரிசுத்த பாத்திரங்களாய், தேவனுக்கு பொக்கிஷமாய்..

அந்த எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரங்களாய், அவரது ஆலயமாகிய பொக்கிஷசாலையிலே இன்று வைக்கப்பட்டிருக்க வில்லையோ ?

- அவர்கள், தேவனது உபயோகத்துக்காக மட்டுமே, அவருக்காக வேறுபிரித்து வைக்கப்படவில்லையோ ?

▶ ஆனால், தேவனின் பொற்பாத்திரங்களாகிய அவர்கள், இன்று புறஜாதிகளின் கையிலே, அவர்களது தேவர்களின் கோவிலான அவர்களது எல்கைக்கும், அலுவலகத்துக்கும், ஆளுகைக்கும், உபயோகத்துக்கும் உட்பட்ட இடங்களான பண்டசாலைக்குள்ளே வைக்கப்பட்டதென்ன ?

▶ தேவனுடைய பரிசுத்த பாத்திரங்கள், பரிசுத்தமில்லா புறஜாதிகளால் கையாளப்பட வேண்டியதென்ன ?

▶ ஒரு காலத்தில், இஸ்ரவேல் ஜனங்கள் பார்வோனுக்காகப் பண்டசாலைப் பட்டணங்களாகிய பித்தோம், ராமசேசைக் கட்டினது போல, இன்று நமது சபையின் வாலிபர்களும் பிள்ளைகளும், விசுவாசிகளும் இரவு பகலாய் MNC க்களிலும், கார்ப்பரேட் கம்பெனிகளிலும், சாஃப்ட்வேர் கம்பெனிகளிலும், கட்டிட நிறுவனங்களிலும், வளைகுடா நாடுகளிலும், மேற்கத்திய நாடுகளிலும், பார்வோனாகிய சாத்தானுக்கு, கம்ப்யூட்டர் முன்பாக சாஷ்டாங்கமாக விழுந்து கிடந்து இரவு பகல் பாராமல் உழைக்கவில்லையோ ? (யாத் 2:11-14)

**பார்வோன் அவர்களை அன்று செய்தது போலவே, இன்றும் சுமை சுமக்கிற வேலையினால் ஒடுக்கவில்லையோ ?**

**அவன் அவர்களைக் கொடுமையாய் வேலை வாங்கவில்லையோ ?**

▶ இன்றைக்கும் அவர்களைக் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனிகளில், சாந்தும் செங்கலுமாகிய வேலையிலும், வயல் வேலையாகிய field workல் செய்யும் சகலவித வேலையிலும், அவர்களைக் கொண்டு செய்விக்கும் மற்ற எல்லாவித வேலைகளிலும் கொடுமையாய் நடத்தி, அவர்கள் ஜீவனையும் கசப்பாக்கவில்லையோ ?

- இன்றைய நமது இளைய தலைமுறையைக் கொள்ளையாடியதும் கையாடுவதும் புறஜாதி அல்லவோ ?

- தேவன் அவர்களுக்குத் தந்த அவர்களது கல்வியையும், அறிவையும், திறமைகளையும், திறனையும், தாலந்துகளையும், கொள்ளையடித்து, அவர்களது நேரத்தையும், சரீர பெலனையும், இரத்தத்தையும் உறிஞ்சிக் குடிப்பது புறஜாதி அல்லவோ ?

- தேவனை ஆராதிக்க ஆலயம் செல்ல அவர்களுக்கு நேரம் உண்டோ ?

- தேவனோடு தனிமையில் சஞ்சரிக்க அவர்களுக்கு சந்தர்ப்பம் உண்டோ ?

- வேதத்தை வாசிக்கவும், தியானிக்கவும் போதுமான சமயம் அவர்களுக்கு உண்டோ ?

- தேவனுடைய பிள்ளைகளோடு ஐக்கியம் கொள்ளவும், மனம் விட்டுப் பேசவும், தேவனுக்காக ஏதாகிலும் செய்யவும் அவர்களுக்கு அவகாசம் உண்டோ ?

- “நான் அவர்களைப் போகவிடுவதில்லை.. அவர்கள் மேல் முன்னிலும் அதிக வேலையை சுமத்துங்கள்.. அவர்கள் கஷ்டப்படட்டும்.."

என்றல்லவோ அவன் சொல்லிச் சொல்லி, தன் ஆளோட்டிகளான சூப்பர்வைசர்கள் மற்றும் டீம் லீடர்கள் மூலம் மூச்சு முட்ட முட்ட அவர்களை வேலை வாங்கிக் கொண்டிருக்கிறான் ?

- அவர்களது சம்பாத்தியமெல்லாம், வைக்கோலாய், தாளடியாய்ப் போகிறதல்லவோ ?

- தேவனது இந்தப் பொன், வெள்ளிப் பாத்திரங்களைத் தன் கையில் எடுத்து, அவற்றில் ஊற்றி உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருப்பவர்கள் யார் ?

- தேவனுடைய பொக்கிஷமான பொற்பாத்திரங்கள் இன்று புறஜாதிகளான உலகத்தார் வசமாகிப் போனதோ ?

- ஒரு காலத்தில் தேவனுடைய ஆலயத்தில் இருந்தவை இன்று மட்டுமல்ல, வரும் நாட்களிலும் முழுவதுமாக அந்நியர் கைகளில் போகப் போகிறதோ ?

- நமது ஜனம் புறஜாதி மார்க்கத்தைக் கற்றுக்கொண்டு புறஜாதி நடக்கைகளின்படி நடந்து, அந்நியர் வசமாயிற்றோ ?

- பரிசுத்த வித்து இன்று எங்கே போகிறது ?

**தானி 5:5:**
**“அந்நேரத்திலே மனுஷ கைவிரல்கள் தோன்றி..**

பரிசுத்த பாத்திரங்கள், பரிசுத்தமில்லா வகையில் கையாளப்பட்டு வரும் இந்த நேரத்திலே.

## Read the writing on the wall

**சபையே ! உனக்கு விரோதமாய், சபையின் வாசலிலே, உட்சுவரிலே, உன் வீட்டிலே, வெளியிலே, அலுவலக சுவரிலே, பள்ளியிலே, கல்லூரி வளாகத்திலே, ஆகாயத்திலே..நீ திரும்பும் திசை எங்கும், காணும் இடமெங்கும், கை உறுப்பு ஒன்று உனக்கு விரோதமாய் எழுதும் வார்த்தைகளைப் பார் !**

- நமது முகம் வேறுபடட்டும் !
- நமது நினைவுகள் நம்மைக் கலங்கப் பண்ணட்டும் !
- நமது இடுப்பின் கட்டுகள் தளர்ந்து அவிழட்டும் !
- நமது முழங்கால்கள் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளட்டும் !

## " மெனே மெனே தெக்கேல் உப்பார்சின் "

பெல்ஷாத்சாருக்கு முன்பாக எழுதப்பட்ட அதே வாக்கியத்தை இன்று சபைக்கு விரோதமாகக் கர்த்தர் எழுதப்போகிறாரோ ?

## 5:25 - மெனே :

" தேவன் உன் ராஜ்யத்தை மட்டிட்டு, அதற்கு முடிவு உண்டாக்கினார்.."

சபையே ! தேவன் உனது சகல காரியங்களுக்கும் எல்லைக்கோடு கிழித்துவிட்டாரோ ?

"தேவன் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்" என்பது போன்ற பல வார்த்தைகளைத் தங்கள் சுயநலத்துக்காக எடுத்துக்கொண்டு, நான் நினைக்கிறபடியெல்லாம், நினைக்கும் போதெல்லாம், கர்த்தர் எனக்காக என் எல்லாவற்றையும் செய்து முடித்து விடுவார் என்று தன் இஷ்டம் போல தேவனைத் தன் வட்டத்துக்குள் வளைக்க நினைக்கும் இன்றைய சபைக்கும்..

கேட்க ஆளின்றி, கணக்குக் கொடுக்க எந்த நிர்ப்பந்தமும் இன்றி, தன் இஷ்டத்துக்கு விடப்பட்ட பிள்ளையைப் போலவும், தாறுமாறாய் ஓடுகிற வேகமான பெண் ஒட்டகம் போலவும், வனாந்தரத்திலே பழகினதும், தன் இச்சையின் மதவெறியிலே காற்றை உட்கொள்ளுகிறதுமான காட்டுக் கழுதையைப் போலவும்..

வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய கிட்டச் சேராத புத்தியில்லாக் குதிரையைப் போலவும், கோவேறு கழுதையைப் போலவும் எந்தக் கட்டுப்பாடுமின்றி வெறிபிடித்து ஓடிக் கொண்டிருக்கும் இன்றைய சபையின் காரியங்களுக்கு மட்டிட்டு தேவன் அதற்கு முடிவு உண்டாக்கப் போகிறாரோ ? (எரே 2:23,24 / சங் 32:9)

## மெனே :

இரண்டாவது ஒரு மெனே ! வேதத்தில் ஒரு வார்த்தை மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டால், அந்தக் காரியத்தில் சந்தேகமே இல்லை என்றல்லவா பொருள் ?

எத்தனை இடங்களில் "மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.." என்று அழுத்தம் திருத்தமாய் இயேசு சொல்லியிருக்கிறார் ?

ஆகவே, "தேவன் சபையின் காரியங்களுக்கு மட்டிட்டு, அதற்கு முடிவு உண்டாக்கப் போகிறார் என்பது நிச்சயம்" என்பதை நிச்சயமாய்க் குறிக்கும் வண்ணமாக "மெனே" என்ற வார்த்தை இரண்டாம் முறையாக சொல்லப்படுகிறதோ ?

## முடிவுண்டாக்கினார்:

இதோ சபையே ! உன் ஆட்டபாட்ட கொண்டாட்டங்கள், ஆராதனைக் கொண்டாட்டங்கள், உன் களியாட்டங்கள், உன் சபை ஆராதனைகள், உன் சமாதானப் பெருவிழாக்கள், விடுதலைப் பெருவிழாக்கள், நோய் தீர்க்கும், பேய் தீர்க்கும் பெருவிழாக்கள், விசேஷித்த எழுப்புதல் திருவிழாக்கள், திருவிளையாடல்கள், திருவசனப் பெருவிழாக்கள் எல்லாவற்றுக்கும் இதோ முடிவு வருகிறதோ ?

தேவ ராஜ்யம் அன்றி, அவரவரது சபை ராஜ்யங்களை தேவன் மட்டிட்டு, அதின் எல்லாக் கோலாகலங்களுக்கும் என்றென்றைக்குமாய் முடிவுகட்டப் போகிறாரோ ?

## 5:27 - தெக்கேல்

" நீ தராசிலே நிறுக்கப்பட்டு குறையக் காணப்பட்டாய் !" இதோ நமது ரிப்போர்ட் கார்டு !

**"உன் கிரியைகள் நிறைவுள்ளவைகளாய் நான் காணவில்லை.."**

சமீபத்தில் வந்த வாட்ஸப் செய்தி ஒன்று இங்கே கனகச்சிதமாய்ப் பொருந்துவதால், இங்கே அதைப் பொருத்துகிறோம். தனக்கு அபிஷேகமும் வல்லமையும் வேண்டுமென்று நாட்கணக்காக உபவாசத்தோடு தவம் கிடந்து, ஒன்றும் கிடைக்காமல், விரக்தியான ஒருவன், தேவனை நோக்கி, தான் இதைப் பெற்றுக் கொள்ள முடியாததின் காரணத்தைக் கேட்டபோது, கர்த்தர் அவனது கண்களைத் திறக்க, தூதன் ஒருவன் தன்னிடம், தேவன் காண்கிற பிரகாரம் காணப்படும் தனது ரிப்போர்ட் கார்டைப் பார்க்கிறான்..

## அதின் விபரம் இது தான்

| | | |
|---|---|---|
| மென்மை | - | 1% |
| மன்னிப்பின்மை | - | 95% |
| அன்பு | - | 5% |
| மகிழ்ச்சி | - | 10% |
| கோபம் | - | 95% |
| பெருமை | - | 90% |
| சமாதானம் | - | 3% |
| சாந்தகுணம் | - | 20% |
| பரிசுத்தம் | - | 1% |
| இச்சையடக்கம் | - | 3% |
| சிந்தையில் விபச்சாரம் & பாலியல் பாவங்கள் | - | 100% |
| ஜெபம் | - | 5% |
| வேத வாசிப்பு | - | 3% |
| சுவிசேஷ அறிவிப்பு | - | 2% |
| பேராசை | - | 80% |
| சந்தேகம் | - | 80% |
| கீழ்ப்படியாமை | - | 95% |
| பொறுமை | - | 1% |
| மனித புகழ் நாடுதல் | - | 100% |
| எதிர்மறை எண்ணங்கள் | - | 80% |
| பொறாமை | - | 99% |
| பகை | - | 98% |
| கேலி, கிண்டல், புறம்பேசுதல் | - | 90% |
| விசுவாசம் | - | 3% |
| உலக நேசம் என்ற விக்கிரக ஆராதனை | - | 60% |

## ரிப்போர்ட் கார்டுக்குக் கீழே கண்ட குறிப்பு :

**▸ "தரத்துக்கு மிக மிகக் கீழான,
தரம் தாழ்ந்த மிக மோசமான தரம்"**

**▸ இதுவே இன்றைய நமது சபைகளின் உண்மையான நிலை என்று நெஞ்சில் கை வைத்து சொல்ல முடியுமோ ?**

**▸ நீ தராசிலே நிறுக்கப்பட்டுக் குறையக் காணப்பட்டாய் !**

## 5:28 - உப்பார்சின்

" உன் ராஜ்யம் பிரிக்கப்பட்டு.."

- சபையின் காரியங்கள் பங்கு வைக்கப்படுமோ ?
- அந்நிய ஜாதிகள் அதைக் கையாடுவார்களோ ?
- அதின் உடைமைகள் அவர்களுக்குள் பிரித்துக் கொள்ளப்படுமோ ?
- சபையின் காரியங்கள் அக்குவேறாய் ஆணி வேறாய் அலசி ஆராயப்படுமோ ?
- இல்லாதவனிடமிருந்தும் உள்ளதும் கூட பிடுங்கிக் கொள்ளப்படுமோ ?

## மேதியருக்கும் பெரிசியருக்கும் கொடுக்கப்பட்டது

- நம்முடையதை எடுத்து தேவன் அந்நியர் கைகளில் கொடுத்து விடுவாரோ ?

- அவைகள் அந்நியர் வசமாகிப் போகுமோ ?

- பரிசுத்த ஸ்தலத்திலே சத்துரு அனைத்தையும் கெடுத்துப் போடுவானோ ?

- தேவனுடைய சத்துருக்கள் அவருடைய ஆலயங்களுக்குள்ளே கெர்ச்சித்து, தங்கள் கொடிகளை அங்கே அடையாளங்களாய் நாட்டுவார்களோ ?

- அதின் ஆவிக்குரிய அலங்காரங்களையும் சித்திர வேலைகள் முழுவதையும் தங்கள் வாச்சிகளாலும், சம்மட்டிகளாலும், தகர்த்துப் போடுவார்களோ ?

- அவரது பரிசுத்த ஸ்தலங்களை அக்கினிக்கு இரையாக்கி, அவரது நாமத்தின் வாசஸ்தலங்களை தரைமட்டும் இடித்து, அசுத்தப்படுத்திப் போடுவார்களோ ?

- சபைகளை ஏகமாய் நிர்த்தூளியாக்குவோம் என்று தங்கள் இருதயத்தில் சொல்லி, தேசத்திலுள்ள ஆலயங்களை எல்லாம் சுட்டெரித்துப் போடுவார்களோ ?

- நமக்கு இருந்த அடையாளங்கள் எல்லாம் காணாமலே போய்விடுமோ ?

- " தேவனே எது வரைக்கும் சத்துரு நிந்திப்பான் ? பகைஞன் உமது நாமத்தை எப்பொழுதும் தூஷிப்பானோ ?" என்று கதறும் 74 ம் சங்கீதத்தின் கூக்குரல்கள் ஆங்காங்கே கேட்கப்படும் காலம் வெகு தூரத்தில் இல்லையோ ? (சங் 74:1-10)

## இதோ நாட்கள் வருகிறது !

# தானியேலின் காரியம் ஜெயமாயிலிருந்தது

## Chapter - 6

"இனிமேல் சம்பவிக்கப் போகிறது என்ன ?"
என்ற இந்தப் புத்தகத்தின் முதல் அத்தியாயத்திலிருந்தே தானியேலின் முதல் 6 அதிகாரங்களுக்கும் இன்றைய கடைசி நாட்களின் சபையின் நிலைக்கும் உள்ள ஒப்புமைகளைப் பார்த்து வரும்போது,

நேபுகாத்நேச்சார் கண்ட சிலையை 2000 வருட உலகளாவிய சபையின் தாழ்ந்து வந்த தரத்துக்கும், 2000 வருட பழைமையான நமது இந்திய சபையின் குறைந்து வந்த தரத்துக்கும், இன்றைய விசுவாசியின் ஆரம்ப கிறிஸ்தவ நிலையிலிருந்து அதின் அந்திய நிலைக்கும் ஒப்பிட்டு, நேபுகாத்நேச்சார் கண்ட விருட்சத்தையும் நமது இந்திய சபைக்கு ஒப்பிட்டு, தராசிலே நிறுக்கப்பட்டு குறையக் காணப்படும் நமது நிலையின் தரத்தையும் பார்த்தோம்.

ஆனாலும்,
"தாவீதின் விழுந்து போன கூடாரத்தை திரும்ப எடுப்பித்து, அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்ப் போனதை சீர்ப்படுத்தி, பூர்வநாட்களில் இருந்ததைப் போல அதை ஸ்தாபிப்பேன்.." என்ற சொன்ன கர்த்தர், சபையின் இன்றைய நிலையை தானியேலின் காரியத்தைப் போல ஜெயமாய் மாற்ற வல்லவர் என்பதே இந்தத் தொடரின் இந்த அத்தியாயம் தரும் நம்பிக்கை !

**இப்போது 6 ம் அதிகாரம் ..!**
இதில் நாம் சபையை தானியேலுக்கு ஒப்பிடுகிறோம்.

# தானியேல் = சபை

**தானியேல் 6:3 :**

**"தானியேல் பிரதானிகளுக்கும் தேசாதிபதிகளுக்கும் மேற்பட்டவனாயிருந்தான்."**

சபையை தேவன்,தேசத்தின் ராஜாக்களுக்கும் அதிகாரிகளுக்கும் மாநில, மத்திய அரசுகளுக்கும், உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் போன்ற சகலத்துக்கும் மேலாகவே பார்க்கிறார்.. வைத்திருக்கிறார் என்பதே உண்மை !

### 6:3 - தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தது.

உலகப்பிரகாரமான மனிதர்களுக்குள் திறமையும், கல்வியும், செல்வாக்கும், பணபலமும், படைபலமும் ஆகிய சகலமும் இருக்கலாம். ஆனால் தானியேல் என்ற சபைக்குள் மட்டுமே பரிசுத்தமும், பரிசுத்த வேதமும், விசேஷித்த ஆவியான பரிசுத்த ஆவியானவரும் உண்டு.

பார்வோன் யோசேப்பைப் பற்றி சொன்னான்..
“தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப் போல வேறு ஒருவன் உண்டோ ?" (ஆதி 41:38)

### 6:3- அவனை ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த ராஜா நினைத்தான்..

தானியேலுக்கு ராஜ்யத்தின் மேல் முழு அதிகாரம் கொடுக்க நினைத்த ராஜாவைப் போலவே, ராஜாதி ராஜனும் கர்த்தாதி கர்த்தரும், தேசத்தின் மேலும் ராஜ்யம் முழுமைக்கும் மேலுள்ள அதிகாரத்தைத் தமது சபைக்குத் தருகிறார்.

**6:4: - அப்பொழுது பிரதானிகளும் தேசாதிபதிகளும் தானியேலைக் குற்றப்படுத்தும்படி முகாந்திரம் தேடினார்கள்.**

இன்று நமது சபைகளின் மேலும் ஊழியங்கள் மேலும் அரசாங்கமும் இயக்கங்களும் குற்றம் கண்டுபிடிக்கும்படி முழுமூச்சாய் முகாந்திரம் தேடும் காரணம் என்ன ?

**சபை வளர்ச்சி:-**

எகிப்திலே இஸ்ரவேலை ஒடுக்கவும் அழிக்கவும் பார்வோன் உபாயம் பண்ண வேண்டிய காரணம் என்ன ? அவர்கள் பலுகிப் பெருகிக் கொண்டிருந்ததே காரணம்.

அதனால் தான் சொன்னான்.. (யாத் 1:10)
"அவர்கள் பெருகாதபடிக்கும், அவர்கள்.. நமக்கு விரோதமாய் (ஆவிக்குரிய) யுத்தம் பண்ணி, தேசத்தை விட்டு (தாய் மதத்தை விட்டு) போய்விடாதபடிக்கும்.. அவர்களைக் குறித்து உபாயம் பண்ண வேண்டும்.

**இன்றைய ஆட்சியாளர்களின் கண்களுக்கு எரிச்சல் உண்டாக்குவதே நமது விசுவாசிகளின் பெருக்கமும், சபைகளின் பெருக்கமும் தான்.**



சபையானது, எண்ணிக்கையிலும், ஆவிக்குரிய வளர்ச்சியிலும் வளர வளர, உயர உயர, பிசாசு மூர்க்கமாகி, அதைக் குற்றப்படுத்தும்படிக்கும் அழிக்கும்படிக்கும் சகல விதத்திலும் முகாந்திரம் தேடுகிறான்.
புறஜாதி ஜனங்களும் முகாந்திரம் தேடுகின்றனர்..
அரசாங்கமும் சபைகளை இழுத்து மூட முழுமூச்சாய் முகாந்திரம் தேடுகிறது.

**இன்றைய சூழ்நிலையில் ஒரு சபையின் மேல் குற்றஞ்சாட்ட அரசாங்கம் தேடும் காரணங்கள் : சபையும் ஊழியர்களும் தங்கள் கைவசம் வைத்திருக்க வேண்டிய முக்கியமான தஸ்தாவேஜ்கள் :**

(தேவன் தமது ஊழியத்துக்கு அழைத்த ஊழியனில் இப்படிப்பட்ட காரியங்களைத் தேடாவிட்டாலும், அரசாங்கம் ஒரு சபையைக் குற்றப்படுத்தவும், மூடி விடவும் இன்று ஆராய்ந்து தேடும் காரியங்கள் இவை..)

- போதகர் குறைந்தது 12 வது படித்திருக்க வேண்டும். அதற்கான அரசுச் சான்றிதழ் வைத்திருக்க வேண்டும்
- போதகர் இறையியல் படிப்பில் குறைந்தபட்சம் B.Th படித்தவராய் சான்றிதழுடன் இருக்க வேண்டும்.
- போதகரது ஞானஸ்நான சான்றிதழ் அவசியம்.
- போதகர் வேறு மதத்திலிருந்து கிறிஸ்தவத்துக்கு மாறியிருப்பவரானால், பெயர் மாற்றம் மற்றும் மதமாற்ற Gazette Notification Copy வைத்திருப்பது அவசியம்.
- போதகராய் நியமனம் செய்யப்பட்ட Ordination Certificate.
- எந்த சபைப் பிரிவைச் சேர்ந்தவர் என்ற Affiliation Certificate.
- ட்ரஸ்ட் பதிவு தஸ்தாவேஜ்கள் (Trust Deed Regd Documents.)
- 12-A என்று சொல்லப்படும் வருமானவரி சலுகை சான்றிதழ்.
- வருடாந்திர வருமானவரி செலுத்தியதற்கான சாட்சியங்கள்.

- சபை வாடகை கட்டிடத்தில் நடந்து கொண்டிருந்தால்,"சபை நடத்த ஆட்சேபணை இல்லை" என்ற குறிப்புடன் கூடிய வாடகை அல்லது லீஸ் அக்ரீமென்ட்.

- சபை, போதகருக்குச் சொந்தமான இடத்திலோ, உறவினருக்கு சொந்தமான இடத்திலோ நடந்து கொண்டிருந்தால், அந்தக் கட்டிடத்துக்கான லீஸ் அக்ரீமென்ட்.

- ரூ.5000 க்கு மேல் பெறுமான பொருட்கள் சபையில் இருந்தால், அவைகளுக்கு பில் வைத்திருக்க வேண்டும்.

- சபையின் வருமானம் மற்றும் செலவுகளைக் குறித்த பில், வவுச்சர் மற்றும் அக்கௌண்ட் கணக்கு வழக்குகள் சரியாய் வைத்திருக்க வேண்டியது அவசியம்.

- சபையின் உட்குழு உறுப்பினர்களின் கூட்டத்தின் மினிட்ஸ் நோட் இன்றைய தேதி வரை மிகச்சரியாக வைத்திருக்க வேண்டும்..

- சபையின் ஞானஸ்நானம், திருமணம், குழந்தை பிரதிஷ்டை போன்ற காரியங்களின் பதிவேடுகள்..

- சபையின் வங்கிக் கணக்கு விபரங்கள்.

- டிரஸ்ட்டின் PAN Card மற்றும் அதின் நிறுவனர் மற்றும் டிரஸ்ட்டிகளின் PAN Card அவசியம்.

ஆவிக்குரிய வகையில் கர்த்தர் தமது ஊழியனிலும் சபையிலும் இப்படிப்பட்ட தகுதிகளையும் சான்றிதழ்களையும் பதிவேடுகளையும் தேடாவிட்டாலும், "மல்யுத்தம் பண்ணினாலும் சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான்" என்பது உண்மையே..

மாத்திரமல்ல, தேவனுக்குள்ளதை தேவனுக்கும், இராயனுக்குள்ளதை இராயனுக்கும் கொடுக்க வேண்டும் என்ற இயேசுவின் கட்டளையோடு, ரோமர் 13:1-7 ல் இந்தக் காரியங்களைக் குறித்து பவுல் மிகவும் விலாவாரியாகவும் தெளிவாகவும் சொல்லியிருப்பது நாம் அனைவரும் அறிந்ததே !

ஆகவே அன்று, தானியேலைக் குற்றப்படுத்தும்படி முகாந்திரம் தேடிய பிரதானிகளும் அதிகாரிகளும் இன்னும் நம் மேலும், நமது சபைகளின் மேலும் மேற்கண்ட இந்தக் காரியங்களை வைத்து குற்றப்படுத்தும் முகாந்திரம் தேடுவது உண்மையிலும் உண்மையே !

ஆனாலும் தானியேல் மேல் ஒரு முகாந்திரத்தையும் குற்றத்தையும் அவர்கள் கண்டுபிடிக்கக் கூடாதிருந்தது போலவே நம்மிலும் குற்றமோ குறையோ கண்டுபிடிக்க அவர்களுக்குக் காரணமே இல்லாமல் போவதாக ! அப்படி நம் கைகளை சுத்தமாக வைத்துக் கொள்வோம்.

## 6:4- அவன் உண்மையுள்ளவனாய் இருந்தபடியால்..

தேவனும் மனிதனும் பிசாசும் நம்மிலுள்ள உண்மையையும், கைகளின் சுத்தத்தையும், சர்வாங்க பரிசுத்தத்தையும் பார்க்கட்டும் !

## 6:4 - அவன் மேல் குற்றம் காணப்படவில்லை.

நம் மேலும் நம் சபைகளின் மேலும் குற்றம் சுமத்த உலகத்தாருக்கும், அரசாங்கத்துக்கும் எவ்வித குற்றமும் குறையும் காணப்படவே வேண்டாம்.

## 6:5:- "இந்த தானியேலை.."

அவர்களது குறியே சபை தான்..
அன்று போல் இன்றும் சொல்லப்படுவது இது தான்..
"இந்தக் கிறிஸ்தவர்களை.."
"இந்தக் கிறிஸ்தவத்தை.."
"இந்த சபைகளை" என்பதே அவர்களது நோக்கம் தாக்கமெல்லாம்.."

## 6:5- " அவனுடைய தேவனுடைய வேத விஷயத்திலே குற்றப்படுத்தும் முகாந்திரத்தைக் கண்டுபிடித்தாலொழிய.."

அரசாங்கம் நம்மிடம் தேடி வரும் மேற்கூறிய நீண்ட பட்டியலில் சகலமும் ஒழுங்கும் கிரமமுமாய் இருக்கும்போது, சபையின் கணக்கு வழக்குகளிலும், வேறு எந்த விஷயத்திலும் குற்றம் கண்டுபிடிக்க முடியாமல் போகும்போது தான்..

"இவர்களுடைய தேவனுடைய வேத விஷயத்திலே, இவர்களது மதமாற்றக் காரியங்களிலே, இவர்களது மத விசுவாசத்திலே, இவர்களது வைராக்கியத்திலே, இவர்களது ஆராதனை என்ற விகற்பமான காரியங்களிலே குற்றப்படுத்தும் முகாந்திரத்தைக் கண்டுபிடித்தாலொழிய, வேறு எதிலும் நாம் குற்றம் கண்டுபிடிக்க முடியாது" என்று சொல்லப்படும்.

## 6:6:- பிரதானிகளும் தேசாதிபதிகளும் கூட்டங்கூடி..

“ஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதாக் காரியங்களை சிந்தித்து, கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும் பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்றது போலவும், 83ம் சங்கீதத்தில், "இதோ உம்முடைய சத்துருக்கள் கொந்தளித்து, உமது ஜனத்துக்கு விரோதமாக உபாய தந்திரங்களை யோசிக்கிறார்கள்" என்று சொல்லப்பட்டது போலவும் இன்றும் நடக்கவில்லையோ ?

## 6:7:- "ராஜா கட்டளை பிறப்பித்து, உறுதியான தாக்கீது செய்யவேண்டுமென்று ராஜ்யத்தினுடைய எல்லாப் பிரதானிகளும், தேசாதிபதிகளும், பிரபுக்களும் மந்திரிமார்களும் தலைவர்களும் ஆலோசனை பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.."

இன்று சபைக்கு விரோதமாய் அங்கே அரசாங்க அதிகாரிகளுக்குள்ளும், சட்டம் இயற்றும் சட்ட வல்லுனர்களுக்குள்ளும், தலைவர்களுக்குள்ளும், RSS காரர்களுக்குள்ளும்,Dharam Sansad என்ற அழைக்கப்படும் அவர்களது மதங்களின் மகா சபையிலே, தேசத்தின் கடவுள்களைத் தவிர வேறு எந்த தேவனையானாலும் வணங்கவோ, பிரச்சாரம் பண்ணவோ, பிரசங்கிக்கவோ கூடாது என்று பிரதம மந்திரி கட்டளை பிறப்பித்து, உறுதியான தாக்கீது செய்ய வேண்டும்" என்றும் இது போன்ற இன்னும் பல தீவிர ஆலோசனைகளும் திரைமறைவில் நடந்து கொண்டிருக்கிறது என்பதும் உண்மை.

அன்று தானியேல் என்ற தனிமனிதனுக்கு விரோதமான ஆலோசனை, இன்று முழு இந்திய சபைக்கும் விரோதமான ஆலோசனையாய் மாறி நிற்கிறது !

**6:7:- "இப்போதும் ராஜாவே, மேதியருக்கும் பெரிசியருக்கும் இருக்கிற மாறாத பிரமாணத்தின்படியே, அந்தத் தாக்கீது மாற்றப்படாதபடி நீர் அதைக் கட்டளையிட்டு, அதற்குக் கையெழுத்து வைக்க வேண்டும்.**

"இந்திய தேசத்தின் சட்டத்தின்படியே, அந்தச் சட்டம் மாற்றப்படாதபடி, மதப்பிரச்சாரம் செய்யாதபடி, சபைகள் மூடப்படும்படி, நீர் கட்டளையிட்டு, அது மாற்றப்படாதபடிக்கு பாராளுமன்றத்திலே சட்டம் இயற்றப்பட்டு, நீர் அதற்குக் கையெழுத்து வைக்க வேண்டும்" என்று ஆர் எஸ் எஸ் முலமாகவும் அதின் சகாக்கள் மூலமாகவும் அழுத்தத்தின் மேல் அழுத்தமாய் பிரஷர் கொடுக்கப்படும்.

**6:9:- அப்படியே ராஜாவாகிய தரியு அந்தக் கட்டளைப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைத்தான்..**

ஏற்கனவே மதமாற்றத் தடைச்சட்டம் பல மாநிலங்களில் அமலில் இருக்கும் நிலையில்,தேசம் முழுவதற்குமாக இப்படி ஒரு சட்டம் இயற்றப்படும். உச்சநீதிமன்றம் அதைப் பரிந்துரைக்கும். பாராளுமன்றத்தில் மசோதா தாக்கல் செய்யப்பட்டு, அது நிறைவேற்றப்பட்டு அமலுக்கு வரும். அந்தச்சட்டம் மாற்றப்படாதபடி அது கட்டளையிடப்பட்டு கையெழுத்து வைக்கப்படும்.



## 6:10:- அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்த போதிலும்..

- இப்படி ஒரு சட்டம் இயற்றப்பட்டு விட்டது என்று அறிந்த போதிலும்..
- வேறு எந்த தெய்வத்தையும் வணங்கக்கூடாது என்று அறிந்த போதிலும்..
- வேற்று மத சம்பந்தமான அனைத்தும் மூடப்பட்டுவிட்டன என்று அறிந்த போதிலும்..
- மீறினால் நிச்சய மரணம் என்று அறிந்த போதிலும்..
- மதமாற்றத் தடைச்சட்டம் அமலுக்கு வந்துவிட்டது என்றும் "மிஸா"வையெல்லாம் மிஞ்சும் எமர்ஜன்ஸி நாட்கள் தொடங்கிவிட்டன என்று அறிந்த போதிலும்..

# தானியேலைப் போல சபை உறுதியாய் நிற்குமோ ?

**“தானியேலோவென்றால்.."**

- மற்றவர்கள் ஓடி ஒளியலாம்..
- வெளி நாட்டுக்கு தப்பிச் செல்லலாம்..
- சமரசம் செய்யலாம்..
- தாங்கள் விட்டு வந்த மதத்துக்கே திரும்பிப் போய் விடலாம்..
- ஆண்டவரை மறுதலிக்கலாம்..
- அரசாங்கத்தின் காலில் விழலாம்..
- ஒருவர் ஒருவரைக் காட்டிக் கொடுக்கலாம்..

**ஆனால் " நீயோ !”** தானியேலைப் போல சபை தனித்துவத்தோடு நிற்கட்டும்! "மரணமே நேரிடுவதாய் இருந்தாலும், அதற்குத் தப்பும்படி, ஜீவனையும் பாராமல், ஜெயித்து நிற்போம்.

**தன் வீட்டுக்குள்ளே போய்..**
**எருசலேமுக்கு நேரே..**

"தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும் ஆபத்துக்காலத்தில் அனுகூலமான துணையுமானவர்.."

"ஆகையால் பூமி நிலை மாறினாலும்,மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும் அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும் நாம் பயப்படோம்.."
என்பதே நமது அறிக்கையாகட்டும்.

**"விசுவாசிக்கிறவன் பதறான்.. உதறான்.. கதறான்.."**
**என்றார் ஒருவர்.**

## 6:10: -"தான் முன் செய்து வந்தபடியே.."

ஒரு தேவமனிதன் எந்த சூழ்நிலையிலும் மாற மாட்டான்.தான் முன் செய்து வந்ததையே எப்படிப்பட்ட சூழலிலும் செய்வான். அதிலிருந்து சற்றும் பிரழமாட்டான்.

## சூழ்நிலைகள் மாறலாம்

- அவர்கள் ஜெப வாழ்வு மாறாது..
- அவர்களது வேத வாசிப்பு மாறாது..
- தேவனோடு உள்ள அவர்களது அன்பும் உறவும் ஐக்கியமும் மாறாது.
- அவர்களது ஊழியம் மாறாது..
  எந்த சூழ்நிலையிலும் கர்த்தருக்காக ஏதாவது செய்து கொண்டே இருப்பார்கள்..
- நாம் உபத்திரவத்துக்கு முன்னே ஜெபிக்கிறவர்களாய் இருந்தால் சிறையிலும் ஜெபிப்போம்..

- முன்னே பாடித் துதிக்கிறவர்களாய் இருந்தால் ஜெயிலிலும் பாடித் துதிப்போம்..
- முன்னே தனி ஆள் ஊழியம் (personal evangelism) செய்கிறவர்களாய் இருந்தால் சிறையின் செல்களிலும் ஒருவரை விடாமல் ஆத்தும ஆதாயம் செய்வோம்.

**ஆகவே தான் வேதம் சொல்கிறது..**

- **பரிசுத்தமாகிறவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்..**
- **நீதி செய்கிறவன் இன்னும் நீதி செய்யட்டும்..**
- **ஊழியம் செய்கிறவன் இன்னும் ஊழியம் செய்யட்டும்..**
- **போதிக்கிறவன் போதிக்கட்டும்..**
- **புத்தி சொல்லி கவுன்சிலிங் கொடுக்கிறவன் இன்னும் அதில் உறுதியாய்த் தரித்திருக்கட்டும்.**

**சகலமும் சம்பூரணமாய் இருக்கையில் மனமகிழ்ச்சியோடும் களிப்போடும் தேவனாகிய கர்த்தரை இப்போது சேவிப்பவனே, எந்த எமர்ஜன்ஸி காலத்திலும் விடாமல் அதைச் செய்து கொண்டிருப்பான்.**

**இப்போது "காலாட்களோடே ஓடும்போது இளைத்துப் போகிறவன், குதிரைகளோடு சேர்ந்து எப்படி ஓடுவான் ? இங்கே சகலமும் சமாதானமாய் இருக்கிற காலத்திலேயே பயந்து பயந்து பாஸ்டர்களிடம் அடைக்கலம் தேடுகிறவன், உபத்திரவம், சிறைவாசம், சித்ரவதை, மரணம் என்ற யோர்தான் பிரவாகித்து வரும் போது என்ன செய்வான் ? (உபா 28:47/ எரே 12:5)**

## 6:10:- " தினம் மூன்று வேளை.."

தான் ஒரு பிரதான மந்திரியாய் இருந்தும், தேவனோடு இருக்க, தினம் மூன்று வேளை தெரிந்து கொண்டான் தானியேல். அதை அவருக்காகவே பிரித்து வைத்தான். தலையே போனாலும் ஜெப நேரம் மட்டும் போக அனுமதிக்க மாட்டான்.

Gordon M.Guinness என்ற தேவ மனிதன் சொன்னார்..

**" கர்த்தரோடு தனியே இருக்கும் நேரத்தை நான் அபகரிக்கிறேனா ?**
**அதைச் செய்வது எவ்வளவு சுலபம் ! ஆனால் அதைத் திருப்பிச் செலுத்துவது முடியாத ஒரு காரியம்! எவ்வளவு தான் வருந்தினாலும்.. எவ்வளவு தான் அழுதாலும்.. எவ்வளவு தான் அதைத் திருப்பிச் செலுத்த முயற்சித்தாலும்.. அவரோடு தனியே இருக்கும் அந்நேரத்தின் இழப்பை எது ஒன்றும் ஒருக்காலும் ஈடுசெய்யவே முடியாது !**

## 6:12- " நீர் கையெழுத்து வைத்தீர் அல்லவா ?"

" நீர் கையெழுத்து வைத்தீர் அல்லவா ?" என்று ஆர் எஸ் எஸ் மற்றும் இயக்கங்கள் சகாக்கள் மூலம் பிரதமருக்குத் திரும்பத் திரும்ப அழுத்தமும், ஒருவித மறைமுக மிரட்டல் தொனியுடன் கூடிய பிரஷரும் கொடுத்துக் கொண்டே இருக்கப்படும்..

**"அது உறுதியாக்கப்பட்டதே ?"**
“அது ஏற்கனவே பார்லிமென்ட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமாயிற்றே”

**Yes.. It has already been finalised..**
என்று சொல்லப்படும் !

**6:13- "தானியேல் என்பவன் உம்மையும், நீர் கையெழுத்து வைத்துக் கொடுத்த கட்டளையையும் மதியாமல்.."**

இந்தக் கூட்டம் சொல்லும்.."பாரும் ! இந்த தேசத்தில் ஒருவித ஜனங்கள் பரம்பியிருக்கிறார்கள். அவர்கள் ராஜாவின் கட்ளையைக் கைக்கொள்ளுகிறதில்லை.. அவர்களை இப்படியே விட்டிருக்கிறது நியாயமல்ல.. அவர்கள் பிரதமரையும் தேசத்தின் சட்டதிட்டங்களையும் மதிக்கிறதில்லை.." (எஸ்தர் 3:8)
என்று தூண்டிவிடுவார்கள்.

**6:14- "ராஜா சஞ்சலப்பட்டான். தானியேலைக் காப்பாற்றும்படி மனதை வைத்து அவனைத் தப்புவிக்கிறதற்காகப் பிரயாசப்பட்டுக் கொண்டிருந்தான்.."**

தேசத்தின் பிரதமர் என்ற வகையில் தேசத்தின் அமைதியைக் காக்கும்படி, அவரே விரும்பி, கலவரங்கள் ஏற்படாத வண்ணம் தன் இயக்கத்தினரை பிரதமரே சாந்தப்படுத்த விரும்பினாலும், அவரே செய்ய முடியாதபடி அவரது கைகளும் கட்டப்பட்டுப் போகும் நிலைமை வருமோ ?

**6:15- "தானியேல் சிங்கக் கெபியிலே போடப்பட்டான்.."**

சபை சிங்கக்கெபி என்ற மரணக் கிடங்கிலே பாதாளச் சிறைகளிலே போடப்படுமோ ?

**6:17- அந்தத் தீர்மானம் மாற்றப்படாதபடி அதின் மேல் முத்திரை போடப்பட்டது.."**

கிறிஸ்தவர்களுக்கு விரோதமான சட்டங்கள் மாற்றப்படாதபடி அவைகள் முத்திரையிடப்படுமோ ?

**6:18- ராஜாவுக்கு அன்று இரவு முழுவதும் நித்திரை வராமல் போயிற்று.."**

சபைக்கு அழிவு கொண்டுவர நினைப்பவர்களுக்கு நித்திரை இல்லாமல் போய்விடும். தேவன் அதைச் செய்வார் !

**6:22- "தேவன் தமது தூதனை அனுப்பி சிங்கங்களின் வாயைக் கட்டிப் போட்டார்.."**

தேவன் நமக்காக ஒரு காரியம் செய்வார்..

" அன்று இராத்திரியிலே" ஒரு தூதன் புறப்பட்டு சனகெரிப்பின் அசீரியப் பாளயத்திலே 1,85,000 பேரைக் கொன்று போட்டான்..

"அன்று இராத்திரியிலே" ஒரு தூதன் பேதுருவை சிறையிலிருந்து வெளியே கொண்டு வந்தான்..

தேவன் அற்புதம் செய்தாலும் செய்யாவிட்டாலும் நாம் இணங்குவதுமில்லை, தலை வணங்குவதுமில்லை!

“அவனில் ஒரு சேதமும் காணப்படவில்லை” சபையின் விசுவாசத்துக்கு ஒரு சேதமும் வராது..

**6:24- "குற்றம் சாட்டினவர்கள் கொல்லப்பட்டனர்"**

தேவன் நீதி செய்வார் !

தென்னகத்திலே ஒரு பஸ் ஸ்டாண்டில் வெளிப் பிரசங்கம் செய்து கொண்டிருந்த ஒரு ஊழியரை மூன்று பேர் சேர்ந்து அடிக்கிறார்கள்..

அன்று இரவெல்லாம் அந்த ஊழியர் ஆகாரம் தண்ணீர் இன்றி கர்த்தருக்கு முன்பாக ஜெபத்தில் போராடுகிறார்." ஏன் ஆண்டவரே ? ஏன் எனக்கு இப்படி ?

அதே இரவில் மூவரில் ஒருவன் பஸ் விபத்தில் கொல்லப்படுகிறான்.. அதே இரவில் இன்னொருவன் மனநிலை பாதிக்கப்பட்டு பைத்தியமாகிறான்..

மறுநாள் காலை மூன்றாவது ஆள் மனம் திரும்பி ஊழியரின் காலில் ஓடி வந்து விழுகிறான்.. பின் நாட்களில் அவன் ஒரு ஊழியனாகிறான்..

சபையின் மேல் கை வைப்பவர்களின் நிலையும் இது தான். ஒன்று, பவுலைப் போல மனந்திரும்புவான்.. அல்லது அப்போஸ்தலனாகிய யாக்கோபைப் பட்டயத்தால் கொன்ற ஏரோதைப் போல கர்த்தருடைய தூதனால் அடிக்கப்பட்டு புழுபுழுத்து சாவான்..

**6:26- " என் ராஜ்யம் எங்கும் உள்ளவர்கள் தானியேலின் தேவனுக்குப் பயப்பட வேண்டும் ..**

அவர் ஜீவனுள்ள தேவன். அவர் ராஜ்யம் அழியாது." என்று சட்டம் மாற்றி எழுதப்பட்டது. தேவன் ராஜ்யங்களை மாற்றுகிறவர் மட்டுமல்ல.. சட்டங்களையும் மாற்றி எழுதச் செய்கிறவர். அவரே இதைச் செய்வார்..

**6:27- " அவரே " "அவரே" தப்புவிக்கிறவரும் இரட்சிக்கிறவரும் வானத்திலும் பூமியிலும் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கிறவராயிருக்கிறார்.."**

**"அவரே" சகலத்தையும் செய்ய வல்லவர்.**

**6:28- "தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது.." சபையின் காரியம் மாறுதலாய், ஜெயமாய் முடியும் !**

**ஆமென்.**

# தேவனின் கரங்களில் இந்துத்துவா என்னும் கருவி

## Chapter - 7

**இனி வரப்போகும் தேவ ராஜ்யத்துக்கு முந்தின காலத்திய, இன்றைய கிறிஸ்தவ நாட்களிலான இந்தியா**

**தேவ ராஜ்யத்தை ஸ்தாபிக்க தேவன் தமது கரங்களில் ஒரு கருவியாக எடுத்துள்ள இந்துத்துவா**

உலகின் பல பகுதிகளில் சீர்திருத்தவாதி என்று கருதப்படுபவரும், ஒரு இந்தியரைத் திருமணம் செய்துள்ள மேலை நாட்டவருமான Wolfgang Simon என்பவரின் சமீபத்திய கட்டுரை, நமது "இனிமேல் சம்பவிக்கப் போகிறது என்ன ?" தொடரோடு மிகவும் நெருங்கிய சம்பந்தப்பட்ட ஒன்றாக இருப்பதால், அதையே நமது ஒன்பதாவது அத்தியாயமாக மொழிபெயர்த்து பதிவிடுகிறோம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிரசங்கித்தது ராஜ்யத்தின் சுவிசேஷம் - ஆனால் பிறந்ததோ, கிறிஸ்தவம் என்ற மதம்.

இந்த விசித்திரமான பிழையைக் கர்த்தர் மாற்றுகிறார். இயேசு கிறிஸ்து அறைகூவி அழைத்த தேவ ராஜ்யம் என்ற மிகப்பெரிய சத்தியத்தின் புரட்சிமிகு ஆரம்ப அறைகூவலிலிருந்து பல தேசங்கள் திசை மாறிப் போனது போல, இந்தியக் கிறிஸ்தவமும், எந்தத் தாக்கத்தையும் உண்டுபண்ணாத, ஆபத்தில்லாத இந்தியக் கலாச்சாரத்தோடு, தானும் இன்னுமொரு கலாச்சாரமாய்க் கலந்து கரைந்து மறைந்து போனது.

இந்தியக் கிறிஸ்தவத்தின் மிகப்பெரும் பகுதி மேற்கத்திய இறையியலால், உபதேசத்தால், பணத்தால், பாலூட்டி சீராட்டி வளர்க்கப்பட்டு, இந்திய மண்ணிலே ஒரு வெளிநாட்டு இறக்குமதிச் சரக்காக, தன்னிலே தானே எதுவும் செய்யத் திராணியற்ற, எண்ணற்ற பிரிவுகளாய் சிந்திச் சிதறிக் கிடக்கிறது..

ஆனாலும் இனி எழும்பும் ஒரு புதிய தலைமுறை, கிறிஸ்தவ மதம் என்று அழைக்கப்படும் மதத்தின் போலித் தன்மைக்கும், தேவ ராஜ்யம் என்ற மேன்மையான சத்தியத்துக்கும் உள்ள மாபெரும் வித்தியாசத்தைக் கண்டுகொண்டால் அது, “ உங்கள் கிறிஸ்துவை நான் நேசிக்கிறேன்..

உங்கள் கிறிஸ்தவர்களை அல்ல.." என்ற காந்தியடிகளின் முகத்தில் அறையும் கூற்றை என்றென்றைக்குமாய்ப் புரட்டிப் போடும்.

**இந்த 2019 மே மாதத் தேர்தல் முடிவுகள், தங்களுக்குச் சாதகமாகவும், தேசத்தில் எழுப்புதலைக்கொண்டு வரும்படியாகவும் அமையும்படி, எண்ணற்ற ஆராதனைகளிலும் ஜெபக்கூட்டங்களிலும், லட்சக்கணக்கான கிறிஸ்தவர்கள் தேவனை ஒருவகையில் வற்புறுத்தி போராடி ஜெபித்தனர்..**

**தேவனும் பதில்**
**கொடுத்திருக்கிறார்**
**ஆனால் அநேகர் எதிர்பார்த்த**
**விதத்தில் அல்லாமல்,**
**சபையின் இப்படிப்பட்ட**
**காலத்துக்கு கசப்பு மருந்தாகவே**
**கொடுத்திருக்கிறார்...**



ஒரு இந்து தேசக் கட்சியான BJP க்கு, சரித்திரம் காணா இமாலய வெற்றியோடு, சொல்லிக் கொள்ளும்படியான எதிர்க்கட்சி இல்லாத தனிக்காட்டு ராஜாவாய் இந்தியாவை ஆளும் ஆளுகையை தேவனே அவர்களது கையில் கொடுப்பது அவருக்கு நலமாய்க் கண்டது.

அந்தக் கட்சியின் எடுபிடிகள் 2021 க்குள் இந்தியாவிலிருந்து கிறிஸ்தவத்தை வேரறுத்து, இந்தியாவை ஒரு இந்து தேசமாக, இந்து ராஜ்யமாக மாற்றிவிடுவோம் என்று காவிக்கொடி பிடித்துத் திரிகின்றனர்.

சபைகளுக்குள்ளும் கிறிஸ்தவத் தன்னார்வ நிறுவனங்களுக்குள்ளும் பாய்ச்சப்படும் பணப்புழக்கத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்கும் வேலைகள் ஏற்கனவே முழுமூச்சில் துவங்கி விட்டன.

இது, வெளிநாட்டு வளங்கள் இன்றி சுயமாய் இயங்க இயலாத சுதேசி சபைகள் மற்றும் ஊழியங்களின் குரல்வளையையே நெறிக்கும் செயல்.

இதை நாம், தேவனது அனந்த ஞானத்தின் செயல்களில் ஒன்றாக முழுமனதாய் ஏற்றுக்கொண்டு அவரது சித்தத்துக்கு எதிர்நில்லாதிருப்போமானால், இப்புதிய அரசியல் அமைப்பும் இந்துத்துவாவின் கூக்குரலுமே தேவ ராஜ்யத்தின் முன்னேற்றத்துக்கும் பரம திட்டத்துக்கும் வழிவகுக்கும் மிகப்பெரிய அடிகோலாய் அமையும்.

**முதலாவது : கடவுள் பயமற்ற, மக்களை ஒடுக்குகிற அரசாங்கங்கள் சூரியனுக்குக் கீழே ஒன்றும் புதிதல்லவே ! ஏற்கனவே இது போன்று வந்து போன அநேக சாம்ராஜ்யங்கள் உலகத்தில் உண்டே !**

**அப்படிப்பட்டவைகள் இனிமேலும் எழும்பத்தான் செய்யும். இதிலே ஆச்சரியப்பட ஒன்றுமில்லையே ! சங்கீதம் 2 சொல்வது போல, கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும் எழும்பும் இந்த பூமியின் ராஜாக்களின் ராஜ்யங்களின் காலமோ, தேவனால் அனுமதிக்கப்பட்ட, ஒரு குறிப்பிட்ட, நிரந்தரமற்ற தற்காலிகக் காலமே !**

**பரலோகத்தில் வீற்றிருப்பவர் இவர்களைப் பார்த்து நகைப்பது போலவே நாமும் இப்படிப்பட்ட கூட்டங்களைப் பார்த்து நகைக்கத்தான் வேண்டும் !**

**இரண்டாவது : தாங்கள் மதசுதந்திரம் பெற்றிருக்கிறோம் என்று தங்களுக்குத் தாங்களே கொண்டுள்ள ஒரு வித பெருமிதமாகிய கவலையீனம், ஒரு தனிமனிதனையோ, சபையையோ, குறைவற்ற சுயதிருப்தியிலும், ஆவிக்குரிய கோமாவிலுமே கொண்டு போய்க் கிடத்திவிடும்போது, அதை எழுப்பவும், அதற்குள் செத்துக் கிடக்கும் மடைதிறந்தோடும் மகா வலிமையைத் திறந்து விடவும் கர்த்தர் பல நேரங்களில் அதிர்ச்சி வைத்தியத்தையே வைத்தியமாகக் கையில் எடுத்து அதை உயிரோடு எழுப்பியிருக்கிறார்..**

எகிப்திலே பார்வோன் இஸ்ரவேலரை ஒடுக்கும் போது, அவர்கள் எவ்வளவாய் ஒடுக்கப்பட்டார்களோ, அவ்வளவாய்ப் பெருகினார்களே !

பாபிலோனிலே சகல ஆடம்பரத்தோடு வாழ்ந்த நேபுகாத்நேச்சார், தன் விக்கிரக ஆராதனைச் சட்டத்தின் வட்டத்துக்குள் சகலத்தையும் மிகச்சுலபமாக வளைக்க நினைத்தாலும், முடிவில் ஜெயமோ தானியேலின் தேவனுக்கல்லவோ !

சபை வரலாறு முழுவதிலுமே உபத்திரவம் மற்றும் நெருக்கத்தின் காலங்கள் எல்லாமே சுத்திகரிப்பு மற்றும் பெருக்கத்தின் காலங்களாகவே இருந்து வந்திருக்கின்றன..

1900க்குப் பின் சீனா, கிறிஸ்தவத்தைத் தன் தேசத்திலிருந்து வழித்துத் துடைத்துவிட ஆரம்பித்த போது, அங்கிருந்த மேற்கத்திய இறக்குமதி கிறிஸ்தவம், உடும்புப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டிருந்த மூன்று காரியங்களை கம்யூனிச அரசாங்கம் உடைத்தெறிந்தது.

**ஒன்று, சபைக் கட்டிடங்கள்..**

**இரண்டாவது, வேதப் பயிற்சிப் பள்ளிகள், பைபிள் காலேஜ்கள்..**

**மூன்றாவது, கீழிருந்து மேலான பிரமிடு போன்ற அமைப்பில் செயல்பட்டு வந்த கீழ்மட்ட விசுவாசிகள் - நடுவிலிருந்த மூப்பர்கள் மற்றும் - உச்சியில் உட்கார்ந்திருந்த மூத்த போதகர்கள் என்ற சபையின் அமைப்பு.**

ஆனால் நடந்தது என்னவோ அதற்கு நேருக்கு மாறானது ! தாங்கள் நினைத்ததை சாதித்து விட்டோம் என்று கொக்கரித்துக் கொண்டிருந்த சீன கம்யூனிஸ்ட்டுகள் எதிர்பார்த்ததற்கு எதிராக, கிறிஸ்துவின் சரீரமான சபை, மேற்கத்திய மதச் சங்கிலிகளிலிருந்தும் கட்டுகளிலுமிருந்தும் தன்னை விடுவித்துக் கொண்டு, சீனாவின் நாலு திசைகளிலும் எண்ணடங்காத இரகசிய சபைகளாய் வெடித்துச் சிதறியது.

1970, 80 களில் எத்தியோப்பியாவின் கம்யூனிஸ்ட்டுகள் செய்ததும் இதுவே! சபைக் கட்டிடங்களிலிருந்தும் தங்கள் வீடுகளிலிருந்தும் துரத்திவிடப்பட்ட கிறிஸ்தவர்கள், காடுகளிலும் மலைகளிலும் கணக்கில்லாமல் பெருக ஆரம்பித்தனர்.

க்யூபாவின் வீடுகளில் 15 பேருக்கு மேல் கூடினால் மரணதண்டனை என்று அறிவித்து அதை செயலாக்கியும் காட்டினார் பிடல் காஸ்ட்ரோ - ஆனால் கிறிஸ்தவர்களை ஒடுக்க ஒடுக்க, அங்கே தீயாய்ப் பரவியது கிறிஸ்தவம்.

**சுவிசேஷம் - அது லூத்தரின் சுவிசேஷமோ, சீகன் பால்கின் சுவிசேஷமோ அல்லது பில்லி கிரஹாமின் சுவிசேஷமோ அல்ல - அது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் !**

**இரக்கமே இன்றி ஆங்காங்கே வெட்டப்பட்டு, கண்மண் தெரியாமல் துண்டாடப்பட்டு, மிச்ச மீதியான ஒரு சுவிசேஷத்தைக் கொடுத்து எப்படியாவது மக்களை இரட்சிக்கப்பட வைத்து, சபைக்குள் கொண்டுவந்து உட்கார வைத்து, வேக வேகமாய் பரலோகத்துக்கு ஆயத்தம் பண்ணும் ஒரு அரைவேக்காட்டு சுவிஷேமல்ல இயேசு கிறிஸ்து பிரசங்கித்த சுவிசேஷம் !**
**மாறாக, சகலத்தையும் உள்ளடக்கிய, வெடித்துச் சிதற வைக்கும் தேவ ராஜ்யத்தின் சுவிசேஷம் அது !**

" எக்ளீசியா " என்று சொல்லப்படும் " சபை" யைப் பற்றி இயேசு சொன்னது, இரண்டே இரண்டு முறை தான்.. மாறாக " ராஜ்யம் " என்ற வார்த்தையோடு 100 முறை பேசியிருக்கிறார் அவர்.

இன்றைய சபை இடைவிடாது பேசுவது, தன்னைப்பற்றி மட்டுமே ! ராஜ்யத்தைப்பற்றி அல்ல..

"அசைவில்லா ராஜ்யம்" என்ற தமது புத்தகத்தில் புகழ்பெற்ற மிஷினரி E. Stanley Jones இந்த இமாலயத் தவறை மிக அழகாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

1706 ல் தென்னிந்தியாவின் தரங்கம்பாடியில் ஜெர்மன் மிஷினரிகள் ப்ளச்சாவும் சீகன்பால்கும் வந்து இறங்கிய போது அவர்கள் கொண்டு வந்தது, தேவ ராஜ்யத்தின் சுவிசேஷம் அல்ல..மாறாக அது, பக்திப் பரவசத்துடன் கூடிய சீர்திருத்தவாத லூத்தரின் சுவிசேஷம் அடங்கிய கிறிஸ்துவைப் பற்றின சமய உபதேசமே அன்றி, கிறிஸ்துவுக்குள் வாழும் கிறிஸ்துவின் சுவிசேஷம் அல்ல..

அது முதல், இந்தியாவின் புரட்டஸ்ட்ண்ட் சபைகள் **"கிறிஸ்து நமக்குள்ளே"** என்ற செய்தியால் ஊட்டி வளர்க்கப்பட்டு அதிலேயே ஊறிப் போயிருக்கிறார்களே அன்றி, பவுல் அப்போஸ்தலனின் முக்கிய அப்போஸ்தல குறிக்கோளும், யோவான் சுவிசேஷத்தின் மையக் கருப்பொருளுமான "நாம் கிறிஸ்துவுக்குள்ளே" என்ற ஆழமான சத்தியத்தில் வளர்க்கப்படவில்லை.

அதன்பின் வந்த காலங்களில் எழும்பிய மிகப்பெரிய மிஷினரிப் படையோ "இயேசு இரட்சிக்கிறார்", "இயேசு சுகமளிக்கிறார்", "இயேசு விடுவிக்கிறார்" என்பது உண்மையானாலும், அதையே கூவிக்கூவி மக்களுக்கு அறிவித்து, சகலத்தையும் இலவசமாய் இலகுவாக்கி அவர்களைக் கர்த்தருடைய வீடாய், **"கிறிஸ்து அவர்களுக்குள் என்பது மட்டுமல்ல, அவர்களும் கிறிஸ்துவுக்குள்"** என்ற செய்தியுடன் தேவ ராஜ்யமாய்க் கட்டுவதை விட்டு விட்டு தங்கள் ராஜ்யங்களையே கட்டிக் கொண்டிருந்தனர்.

இது அவர்களை, தேவனுடைய மாளிகைக்கு வெளியே தனித்தனியாய் சிந்திச் சிதறிக் கிடக்கும் ஜீவகற்களாய், கிறிஸ்துவைப் பின்செல்லும் தனிமனிதக் கூட்டமாய் மாற்றி விட்டது.

தேவனுடைய வீடாய்க் கட்டப்படாத எந்தக் கல்லும், மனிதன் கண்டுபிடித்த, மத ஒழுங்குகளுக்குள் பொருத்தப்பட்டு, இந்த உலகத்தில் அது ஆற்ற வேண்டிய தனிப்பட்ட பங்கைக் கண்டுபிடிக்க இயலாமல், மங்கி மழுங்கிப் போய் நோக்கமின்றி மறைந்து போகிறது.

**கிறிஸ்தவத்துக்கு எதிராக, இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் காலம் - ஒரு இக்கட்டின் காலம், நெருக்கத்தின் காலம் - அது நம்மை நாமே சரிசெய்து கொள்ள, நம் மேல் கடந்து போகப்பட, தேவனால் அனுமதிக்கப்பட்ட ஒரு உபத்திரவத்தின் காலம்..**

இஸ்ரவேல் ஜனம் கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் அவரது கற்பனைகள், நியமங்களை உடைத்தெறிந்து, எல்லை மீறிப்போன போது பல முறை அவர்களை சீர்ப்படுத்த தேவன் மூன்று வழிகளைக் கடைப்பிடித்தார்.

**முதலாவது** : கர்த்தர் அவர்களை "கொள்ளையிடுகிற கொள்ளைக்காரர்கள்" கைகளில் ஒப்புக்கொடுத்தார். (நியா 2:4,5)

**இரண்டாவது** : இந்த சிட்சை பயனின்றி போன போது கர்த்தர் இஸ்ரவேலின் மேல் கோபமூண்டவராகி, அவர் அவர்களை அவர்களது சத்துருக்கள் ஆளும்படி அவர்கள் கையிலே விற்றுப்போட்டார். (நியா 3: 8-14 / 4:2)

**மூன்றாவது** : அப்போதும் அடங்காத அவர்களைத் தங்கள் தேசத்திலிருந்து துரத்திவிட்டு இன்றுவரை இருக்கிறபடி, பூமியெங்கும் சிதறிப்போகப் பண்ணி அந்நியர்களை சேவிக்கும்படி செய்தார்.

# இப்போது
## நாம் செய்ய வேண்டியது என்ன ?

நமக்கு முன்னே இப்போது இரண்டு வழிகள்..

| ஒன்று.. | இன்னொன்று.. |
| --- | --- |
| தேவன் நடத்தும் தேவராஜ்ய வழி.. | மனுஷீக அறிவின்படி நடக்கும் மனித வழி.. |

ஒன்று, நாம் ஓரணியில் ஒன்று சேர்ந்து, பேரணிகளும் ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் ஊர்வலங்களும் நடத்தி கோர்ட்டுக்கு ஏறி இறங்கி, பன்னாட்டு உதவியுடன் ஐக்கிய நாடுகள் வரை சென்று அரசாங்கத்தை ஆட்டங்காணப் பண்ணிவிடுவோம் என்று கூச்சலிட்டு, இன்றிருக்கும் சூழ்நிலைக்கு பதிலடி கொடுக்க மனுஷீகமாய் முயற்சிக்கலாம்..

அல்லது, தேவனது வழியைத் தெரிந்து கொண்டு ராஜ்யத்தின் பிரஜைகளாய் பிரதிபலிக்கலாம்.



## இன்றைய இந்திய சபைகள் நடைமுறையில் கடைப்பிடிக்க வேண்டிய காரியங்கள் :

1. மிகப்பெரிய இந்தியக் கிறிஸ்தவ சமுதாயம் தங்கள் சொந்த கர்த்தரும் ராஜாதி ராஜனுமானவரின் ராஜ்யத்தின் சுவிசேஷத்தை, பிரதிபலிக்காமல், நவீன ஆவிக்குரிய யுக்திகளையும் டாலர்களையுமே நம்பிக் கொண்டிருக்குமானால், அவைகளை விட்டு விட்டு, தனது வெளிநாட்டு மோகங்களையும் தொடர்புகளையும் உறவுகளையும் துண்டித்துத் துடைத்தெறிந்து, இந்திய சமுதாயத்தின் நிகழ்காலத்துக்கும், அஸ்திபார அடிப்படைக்கும், தன் ஜனத்தின் அன்றாட நிலைக்கும் அது திரும்ப வேண்டும்.

2. "நீ உன் எதிராளியோடு வழக்காடுமன்றத்துக்குப் போகும் வழியிலிருக்கும் போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து.." என்று எச்சரித்தார் இயேசு. கிறிஸ்தவத்தின் மேல் கொதித்துக் கொண்டிருக்கும் இந்துத்துவ சக்திகள் அதை நீதிமன்றத்துக்கு இழுக்கும் போது, அவர்கள் கிறிஸ்தவர்கள் மேல் வைக்கும் குற்றச்சாட்டுகள் எல்லாமே அர்த்தமற்றதும் பொய்யானதும் அல்லவே ! வேதத்தின் அடிப்படையில் நன்மையானாலும் தீமையானாலும் தேவன் அதை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லையே ! ஆகவே அவர்கள் கிறிஸ்தவர்கள் மேல் சாட்டும் உண்மையான குற்றச்சாட்டுகளை ஒத்துக்கொண்டு சரி செய்வோமானால், அவர்களது எல்லா தவறான குற்றச்சாட்டுகளிலிருந்தும் தேவன் நம்மை விடுவிப்பார்.

3. தன்னைத் தானே உலகக் கிறிஸ்தவத்துக்கெல்லாம் தலை என்றும், உலகத்துக்கே தான் தான் கிறிஸ்தவத்தின் மையப்புள்ளி என்றும் தவறான நினைப்பில் பெருமிதம் கொண்டிருக்கும் மேற்கத்திய கிறிஸ்தவமும் இந்நேரத்தில் மனம்திரும்ப வேண்டும்.

4. அவரவர் தங்கள் தங்கள் மச்சுப்பாவப்பட்ட வீடுகளைக் கட்டுவதை விட்டுவிட்டு (ஆகாய் 1:3, தங்கள் ஊழியம், சபை, பிரிவு), ஒருவரோடொருவர் இணைந்து கட்டும்படி அழைக்கப்பட்ட தேவனுடைய வீடாகிய தேவ ராஜ்யத்தைப் பிதாவோடும் அவரது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் சேர்ந்து கட்டுவோம்.

5. தேவ ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள், தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்வதையும், மற்ற மதங்களிலிருந்து மக்களைக் கிறிஸ்தவ மதத்துக்கு அழைப்பதையும் விட்டுவிடுவது ஆரோக்கியமானது. தேவ ராஜ்ய பிரஜைகளின் குடியிருப்போ பரலோகத்தில் அல்லவோ இருக்கிறது !

6. தேவ ராஜ்ய பிரஜைகளுக்கு கிறிஸ்தவ ஆலயங்களுக்கும் ஆடிட்டோரியங்களுக்கும் அவசியமில்லை. அவர்கள் தாங்கள் வசிக்கும் இடங்களிலும், வேலை ஸ்தலங்களிலும், விளையாட்டு மைதானங்களிலும் ஆங்காங்கே கூடி ஆராதித்துப் பெருகி, மிகச்சிறப்பாக தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டுகிறார்கள்..உபத்திரவக் காலங்களிலும், அரசாங்கத்தின் கெடுபிடியிலும், கேமரா கண்களுக்குக் கீழேயும் கூட எப்போதும் போலத் திறைமறைவில் தாங்கள் ஏற்கனவே செய்து வருவது போல, அதைத் தொடருவதில் அவர்களுக்கு எந்தச் சிக்கலும் இருப்பதில்லை. ஏற்கனவே இந்தியாவில் நடந்து வரும் வெற்றியுள்ள வீட்டு ஜெபக் குழுக்கள், இதைத் திறம்படச் செய்து வருகின்றன.

# நாங்கள் என்ன செய்ய வேண்டும்

## Chapter - 8

இந்தப் புத்தகத்தின் கடைசிக் கட்டத்துக்கு வந்துவிட்டோம். தேர்தல் முடிவுகளில் தொடங்கி, தேசத்தில் நடக்கப் போகும் காரியங்கள், அவைகளுக்கு முன்னோட்டமாக ஆங்காங்கே இப்போதே ஆரம்பித்துவிட்ட அட்டகாசங்கள், எல்லாவற்றையும் விபரமாகப் பார்த்து விட்டோம்.

பெந்தேகோஸ்தே நாளன்று இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி எருசலேம்வாசிகள் , "சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும் ?" என்று கேட்டது போலவே, இன்றைய சபையும், இந்த எழுத்துக்களால் எச்சரிப்புப் பெற்றவர்களும் கேட்பார்களானால், அதற்கு பதில் தான் இந்தக் கடைசி அத்தியாயம்.

**இதற்கு முன் சபையை தானியேலுக்கு ஒப்பிட்டிருந்தோம். தானியேல் 9ம் அதிகாரத்தின், தானியேலின் ஜெபத்தையே இன்று சபை தனது ஜெபமாக்கி தேவனுக்கு முன் விழுந்து கதறட்டும்.**

ஒரு வேளை நமது வேண்டுதல் கேட்கப்பட்டு, நினிவேயைக் குறித்த தமது முடிவை மாற்றியவர், இப்போதும் ஒருவேளை மாற்றக் கூடும் ஆனால் சபை இரட்டுடுத்தி சாம்பலில் உட்கார்ந்து மனம் திரும்பும் மனநிலையில் இல்லவே இல்லை என்பது தான் அப்பட்டமான உண்மை !

ஆனால் என் சகோதர ஜனமே, இதைப் படிக்கும் நீயும், நானுமாவது தானியலுடன் ஜெபத்தில் இணைவோம்.

**இப்போது தானியல் 9ம் அதிகாரம்..**

**9:2 - தானியேலாகிய நான் எருசலேமின் பாழ்க்கடிப்புக்கள் நிறைவேறித்தீர எழுபது வருஷ காலம் செல்லுமென்று கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியோடே சொல்லிய வருஷங்களின் தொகையை புஸ்தகங்கள் மூலம் அறிந்து கொண்டேன்..**

சபையாகிய நாம் இந்தியாவின் சபைகள் மேல் வந்து நிறைவேறப் போகிற பாழ்க்கடிப்புகள் நிறைவேறித்தீர சில வருஷகாலம் (7 வருடமோ ??) செல்லுமென்று கர்த்தர் தானியேல் தீர்க்கதரிசியின் முதல் 6 அதிகாரங்கள் மூலம் மட்டுமல்ல..இந்தத் தொடரின் மூலமாகவும் அறிந்து கொண்டோமோ ?

**9:3- "நான் உபவாசம் பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கி...**

நாம் இப்போது செய்ய வேண்டியதெல்லாம் இது மாத்திரம் தான் அல்லவோ ? ஓ ! நாம் உபவாசம் பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் கதறுதலினாலும் தேட நமது முகத்தை அவருக்கு நேராக்குவோமோ ?



**9:4- "என் தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணி, பாவ அறிக்கை செய்து...**

**என் சக உதிரமே ! கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணி பாவ அறிக்கை செய்வோம் வா !**

**9:4-** ஆ ! ஆண்டவரே, உம்மில் அன்புகூர்ந்து உம்முடைய கற்பனைகளைக் கைக் கொண்டிருக்கிறவர்களுக்கு உடன்படிக்கையையும் கிருபையும் காக்கிற பயங்கரமான தேவனே !

**9:5-** நாங்களும்  எங்கள் தகப்பன் வீட்டாரும், எங்கள் குடும்பமும், எங்கள் சபையும், ஊழியர்களாகிய நாங்களும் பாவம் செய்து அக்கிரமக்காரர்களாயிருந்து, துன்மார்க்கமாய், முரட்டாட்டமாய் நடந்து, உமது பார்வைக்குப் பிரியமில்லாததும், அருவருப்பானவைகளையுமே செய்து, உமக்கு விரோதமாய்க் கலகம் பண்ணி, உம்முடைய கற்பனைகளையும் உம்முடைய நியாயங்களையும் விட்டு எப்போதோ அகன்று போய், உம்மை விட்டு தூரம் போய்விட்டோம்.

**9:6 -** உமது நாமத்தைக் கொண்டு  எங்களோடும், எங்கள் போதகர்களோடும், எங்கள் மனைவி மக்களோடும், எங்கள் மூப்பர்களோடும், வாலிபரோடும், சபையின் ஜனங்களோடும், விரல்விட்டு எண்ணக்கூடிய சில உண்மையான தீர்க்கதரிசிகளைக் கொண்டும், உம்முடைய வார்த்தைகளைக் கொண்டும், உண்மையான வாட்ஸப் செய்திகளைக் கொண்டும், கண்முன்னே தேசத்தில் நடந்து வருகிற சம்பவங்களைக் கொண்டும் பேசின உமக்கும், உமது ஊழியக்காரருக்கும் செவிகொடாமல் போனோம்.

**9:7-** ஆண்டவரே, நீதி உமக்கே உரியது ! நாங்கள் உமக்கு விரோதமாகச் செய்த துரோகத்தினிமித்தம், உம்மாலே சமீபமும் தூரமுமான எல்லா தேசங்களிலும் ஒரு வகையில் துரத்தப்பட்டிருக்கிற (வேலைக்கென்று போனாலும்) விசுவாசிகளும் ஊழியருமாகிய இந்தியக் குடிகளாகிய நாங்கள், இந்நாளில் இருக்கிறபடியே வெட்கம் எங்களுக்கே உரியது !

**9:8-** ஆண்டவரே ! உமக்கு விரோதமாய் பாவம் செய்தபடியால், நாங்களும் எங்கள் குடும்பங்களும் எங்கள் பிள்ளைகளும்,எங்கள் போதகரும், மூப்பரும், எங்கள் சபையார் யாவரும் வெட்கத்துக்குரியவர்களானோம்.

**9:9-** உமக்கு விராதமாக நாங்கள் கலகம் பண்ணி, உம்முடைய உண்மைத் தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரரைக் கொண்டும், எந்தெந்த வகைகளில் எல்லாம் எங்களைச் சொல்லி எச்சரிக்க வேண்டுமோ எல்லா வகைகளிலும் (புத்தகங்கள், செய்திகள், வீடியோக்கள், சமூகவலை தளங்கள் என்ற சகல சாதனங்களைக் கொண்டும்) எங்களுக்கு முன்பாக நீர் வைத்த நியாயப்பிரமாணங்களின்படி நடக்க வேண்டிய உமது அடிக்கடியான எச்சரிப்புக்களின் சத்தத்துக்கு செவிகொடாமல் போனோம்..

**9:10-** ஆனாலும் எங்கள் தகப்பனே ! நீர் எங்கள் ஆண்டவர் அல்லவோ ? எங்கள் ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புக்களும் உண்டே ?

**9:11 -** இன்றைய ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நாங்கள் எல்லாரும் உமது நியாயப்பிரமாணத்தையும் எச்சரிப்புகளையும் கட்டளைகளையும் மீறி, உமது சத்தத்துக்கு செவிகொடாமல் விலகிப்போய் உமக்கு

விரோதமாய் பாவம் செய்தோமே ! உமது புத்தகமாகிய பரிசுத்த வேதாகமத்தில் எழுதியிருக்கிற சாபமும் ஆணை ஆக்கினையும், எங்கள் தேசத்தில் சம்பவிக்கப் போகிற சகலமும் எங்கள் மேல் சொரியப்படுமோ ?

**9:12 -** உலகத்தின் பல பகுதிகளிலும் கம்யூனிச, நாஜி அராஜகங்களின் போது சம்பவித்தது போல, வானத்தின் கீழெங்கும்  சம்பவித்திருக்கிற பெரிய தீங்கை எங்கள் மேல் வரப்பண்ணப் போகிறீரோ ? அதினாலே எங்களுக்கும் எங்கள் சபைகளுக்கும், எங்கள் போதகர்களுக்கும் ஊழியர்களுக்கும் மூப்பர்களுக்கும் நிறுவனங்களுக்கும் விரோதமாய் சொல்லியிருந்த உம்முடைய வார்த்தைகளை நிறைவேற்றப் போகிறீரோ ?

**9:13 -** தானியேலின் புத்தகத்தில் எழுதியிருக்கிறபடியே அதின் முதல் 6 அதிகாரங்களின் சம்பவங்களின் தீங்கெல்லாம் எங்கள் மேல் வரப்போகிறதோ ? இதையெல்லாம் அறிந்தும், இத்தொடரைப் போல பல கட்டுரைகளையும் செய்திகளையும் எச்சரிப்புக்களையும் படித்தும் கூட நாங்கள் எங்கள் அக்கிரமங்களையும், அநியாயங்களையும், நிர்விசாரங்களையும், சோம்பலையும், இச்சைகளையும்,  பெருமைகளையும் விட்டுத் திரும்புகிறதற்கும், உம்முடைய சத்தியத்தைக் கவனிக்கிறதற்கும் எங்கள் தேவனாகிய கர்த்தரின் முகத்தை நோக்கிக் கெஞ்ச வேண்டுமே என்ற எண்ணம் கூட இல்லாதிருக்கிறோமே !

**9:14 -** ஆதலால் கர்த்தராகிய நீர் மிகக் கவனமாயிருந்து இந்தத் தீங்குகளையெல்லாம் எங்கள் மேல் வரப்பண்ணப் போகிறீரோ ? எங்கள் தேவனாகிய கர்த்தர் தாம் செய்து வருகிற தம்முடைய கிரியைகளில் எல்லாம் நீதியுள்ளவர் அல்லவோ ? நாங்களோ உமது சத்தத்துக்கு செவிகொடாமல் போனோமே !

**9:15 -** இப்போதும், உமது ஜனமாகிய எங்களை பலத்த கையினால் பாவப்பிடியாகிய எகிப்திலிருந்தும், வியாதியிலிருந்தும், மரணப்படுக்கையிலிருந்தும், பிசாசின் பிடியிலிருந்தும், அசுத்த ஆவிகளின் கட்டுகளிலிருந்தும், பாரம்பரியங்களிலிருந்தும், இருளிலிருந்தும் விடுதலையாக்கி, அந்தகாரத்திலிருந்து எங்களைப் புறப்படப்பண்ணி, இந்நாள் வரைக்கும் உமக்குக் கீர்த்தியை உண்டாக்கின எங்கள் நேச கர்த்தரும் தேவனுமாகிய ஆண்டவரே, நாங்கள் பாவம் செய்து அளவில்லாத துன்மார்க்கத்தில் நடந்தோமே !

**9:16 -** ஆண்டவரே உம்முடைய சர்வ நீதியின்படியே உமது கோபமும் உமது உக்கிரமும் நீர் தெரிந்து கொண்டு வாசம் பண்ணும் எங்கள் நகரங்களாகிய தென்னிந்தியா விலிருந்தும், வட இந்தியாவிலிருந்தும், நீர் எழுந்தருளிய பரிசுத்த ஸ்தலங்களாகிய எங்கள் சபைகளிலிருந்தும் திரும்பும்படி செய்யும். எங்கள் பாவங்களினாலும், எங்கள் பரிசுத்தக் குலைச்சலாலும், எங்கள் சாட்சியற்ற ஜீவியத்தினாலும் எங்கள் போதகப் பிதாக்கள், ஊழியர்களின் அக்கிரமங்களினாலும் கிறிஸ்தவமும், கிறிஸ்தவர்களாகிய நாங்களும் எங்கள் சபையார் யாவரும் புறஜாதியாரான எங்கள் சுற்றுப்புறத்தார் யாவருக்கும் நிந்தையாகிப் போனோமே !

**9:17 -** இப்போதும் எங்கள் தேவனே, நீர் நீர் உமது அடியானாகிய எனது விண்ணப்பத்தையும், உமது ஜனமாகிய எங்கள் கெஞ்சுதலையும் கேட்டு, ஆவிக்குரிய நிலையில் பாழாய்க் கிடக்கிற உமது பரிசுத்த ஸ்தலமாகிய எங்கள் சபைகள் மற்றும் எங்கள் ஊழியர்களது ஜீவியங்களின் மேல் ஆண்டவராகிய உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும்.

**9:18 -** எங்கள் தேவனே, உம்முடைய செவியை சாய்த்துக் கேட்டருளும். உம்முடைய கண்களைத் திறந்து இதோ எங்கள் சபைகளாகிய பாழிடங்களையும் உமது நாமம் தரிக்கப்பட்டிருக்கிற எங்கள் தென்னிந்திய நகரங்களையும், ஊர்களையும், பள்ளிகளையும், மருத்துவமனைகளையும், ஆலயங்களையும், இல்லங்களையும் பார்த்தருளும் ! நாங்கள் எங்கள் நீதிகளையோ நற்செயல்களையோ, கடந்தகால தியாகங்களையோ உமக்காக ஏதேதோ செய்து குவித்து விட்டோம் என்ற சாதனைகளையோ அல்ல, உம்முடைய மிகுந்த இரக்கங்களையும் தயவையும் அன்பையும் கிருபையையும் மன்னிப்புகளையும் மாத்திரமே நம்பி எங்கள் விண்ணப்பங்களை உமக்கு முன்பாக செலுத்துகிறோம்..

**9:19 -** ஆண்டவரே கேளும் ! ஆண்டவரே மன்னியும் ! ஆண்டவரே கவனியும் ! எங்கள் தேவனே உமது நிமித்தமாகவும், உமது இரக்கங்களின் நிமித்தமாகவும், உமது விலையேறப்பெற்ற நாமத்தினிமித்தமாகவும், நீர் கல்வாரியில் சிந்தின இரத்தத்தினிமித்தமாகவும், நீர் பட்ட பாடுகளினிமித்தமாகவும் அதைத் தாமதியாமல் செய்யுமே ! 2000 வருட காலமாக எங்கள் வீடுகளுக்கும் எங்கள் சபைகளுக்கும், எங்கள் நிறுவனங்கள் மற்றும் ஊர்களுக்கும், உமது ஜனமாகிய எங்களுக்கும் உம்முடைய நாமம் தரிக்கப்பட்டிருக்கிறதே !

**9:20 -** இப்படி நாம் சொல்லி, ஜெபம் பண்ணி, நமது பாவத்தையும் நமது ஜனமாகிய சபையாரின் பாவத்தையும் அறிக்கையிட்டு, நமது தேவனுடைய பரிசுத்த பர்வதமாகிய சபைகளுக்காக நமது விண்ணப்பத்தை நமது தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக செலுத்திக் கொண்டிருப்பதைத் தவிர, என் ஜனமே ! வேறு ஒரு வழியும் உபாயமும் இல்லை என்பதை அறிவாயோ ?

# INDIA: POST-CHRISTIAN AND PRE-KINGDOM
## How Hindutva is a Tool in God's Hands for the Kingdom of God

## Chapter - 9

JESUS preached the Kingdom – what came was Christianity. Today, God is changing this fantastic error. A far cry from the original, revolutionary Kingdom initiative of Jesus Christ, as in many countries as well, India's Christianity has degenerated into a harmless, unimpressive sub-culture. Much of it is drip-fed by western theology and money, making it a foreign object on Indian soil, deeply colonial, dysfunctional and hopelessly divided. However, if a new generation discovers the Kingdom truth apart from the religious fake, it will finally overturn Gandhi's stinging verdict: “I like your Christ, not your Christians.”

Millions of Indian Christians have, in countless worship services and prayer meetings, urgently prayed to God to sway the outcome of the May 2019 Lok Sabha election in their favor and to send revival.

And God has answered. Yet not in the way most have expected it. God has seen fit, as a medicine for such a time as this, to allow the BJP, a Hindu-Nationalistic Party, to win a historic, landslide victory and to rule India with a one party system without any significant opposition. Elements in this Party are announcing their wishes to eradicate Christianity from India by 2021 and turn India into a Hindu Rasthra, a Hindu Kingdom. Recently, measures have already been set in motion to severely control the financial influx of western money into the Church.

This is touching the root canal of those churches and ministries unable to sustain their work from within India and depend on foreign contributions.

If we accept, and not fight, Gods wisdom here, the new political setup and its cry for Hindutva (Hindu-nationalist ideology) will facilitate the greatest possible move towards Kingdom advancement. God is not interested in reviving man-made religion. His goal is to see as many souls as possible become naturalized citizens of the Kingdom and become part of the prophetic model nation of God, making even Israel jealous.

**First:** God-allergic, repressive governments are nothing new under the sun. It has all happened before, and it will happen again. It is just yet another temporary and fleeting regime trying, for a limited, God-ordained time, what Psalm 2 describes as **conspiring vain plots against the Lord and his rule, chains and fetters.** The Psalm also says that God laughs about such things. And if he laughs, so should we!

**Second:** God has used shock-therapy before to revive and release the dormant potential of his people, while so-called religious freedom typically breeds complacency and spiritual coma. When the people of Israel were oppressed by a godless Pharaoh in Egypt, the Bible reports:

**The more they were oppressed, the more they multiplied and spread** (Ex 1:12). In Babylon, a megalomaniac emperor wished to force everyone into his own religious mould (Dan 3:14-18; 6:4-6), yet all of this was, at the end, one great victory for the God of Daniel.

An important fact not very much known in India is that many Western countries are currently experiencing a historic implosion of both their nominal and evangelical church systems. Some liken this to an exodus, where already more than 50% of all believers “have left the building”, led by the youth, the intelligentsia and the business community.

Throughout the history of the Church, times of suppression and persecution have almost always been times of purification and multiplication. When China wanted to eradicated Christianity from 1900 onwards, they took the three things away that Western-imported Christianity was most adamant about: church buildings, theological training, and the so-called “leadership pyramid” with a “senior pastor” on top, elders in mid-management, and the laity at the sorry bottom.

The results have been the exact opposite of what Chinas Communists had hoped for: The Body of Christ, delivered from the man-made shackles of westernized religion, literally exploded in unprecedented numbers.

The Communists in Ethiopia did the very same in the 1970s and 80s. By forcing Christians out of their church buildings and into their homes, the Body of Christ was literally kick-started and saw unprecedented growth. Cuba's Fidel Castro forbid any gathering above 15 people in Cuban homes – and therefore, unwittingly, released one of the largest moves of Christ.

**The Gospel according to Jesus, not to Luther, Ziegenbalg or Billy Graham**

Jesus did not preach a truncated and wildly mutilated Gospel that only focused on getting people individually saved, parked in churches and prepared to go to heaven. His message was the far more holistic and dynamic

**Gospel of the Kingdom.** Jesus spoke only twice about the ekklesia (what we call "church"), and 100 times about the Kingdom. Today's church speaks incessantly about itself, not the Kingdom. The famous missionary statesman E. Stanley Jones addressed this gigantic error in his book "The Unshakable Kingdom."

When the two German missionaries, Plütschau and Ziegenbalg, arrived in Tranquebar in South India in 1706, they did not bring the Gospel of the Kingdom.

They brought a religious package of Protestant Lutheranism of Pietistic orientation, which in itself was deeply steeped in teaching about Christ, rather than living in Christ.

Since then, Protestant India is obsessed with "Christ in us", but deeply uninformed about "us in Christ", which is the **main apostolic goal of Paul** (see Col 1:28+29) and the **central message of the Gospel of John**.

Later, in the wake of the colonial era, an army of missionaries added every conceivable brand to the cacophony of voices seeking to recruit followers. While it is true that Jesus heals, saves and delivers people, he wishes **to build them into the House of God, his Kingdom**, so that he is not only **in them**, but they are also **in him**.

Otherwise, individual followers of Christ become a living stone, but a stone outside the building of God! A stone not built into the House of God, but fitted into man-made religious structures, will hardly ever find and embrace true his role and mission on earth, and ultimately brittles away, aimless, tired and disappointed.

**The current pressure on Christianity is a time of correction.** Israel as a nation had to undergo multiple periods of correction from God, which usually happened in three phases: If they were disobeying Gods orders, laws, decrees and ordinances beyond a certain limit, the people of Israel first were **given over to robbers and raiders**

(example: Judges 1:14-15). If this disciplinary action was of no avail, God **took away their right to govern themselves. He sold them under enemy rule**, as in Judges 3:8-14 and 4:2. And if even that was ignored, **God had Israel evicted from their land**, culminating in the global dispersion that lasts even until today.

**Where do we go from here?**
There are two ways open to us, the Kingdom way, and the human way. We could respond to the new situation in the flesh, organizing ourselves, appealing to human governments and courts in India and abroad, protest, rally, argue and pull strings. Or we can embrace Gods way and respond like the Kingdom Citizens we should be:

If it is true that a very large part of Indian Christianity does not reflect the original Kingdom teaching of its very own Lord and King, but that of modern day spiritual and financial overlords abroad, then it needs to be decolonized, shaking off foreign elements and be firmly re-set on Kingdom foundations.

Jesus challenged us to quickly **agree with the accuser while on the way to the courthouse (Mt 5:25).** An irate Hindu ideology is taking Christianity to court - and not all of their points are baseless.

From a biblical perspective, all accusations, the true and the false ones, are being brought before the High Court of Heaven. Let us agree with all true allegations, and God will capably defend his people in all areas of false accusations.

The situation requires repentance also on behalf of Western Christianity that falsely assumes it is the spiritual epicenter of the world. As a Westerner married to an Indian, I am ready to bridge this dilemma and to say what needed to be said long ago: On behalf of the unrelenting missionary machine seeing India as a field for ever more religious proselytism, I hereby repent and ask forgiveness for this deeply colonial, imperial and even naïve mindset.

I am asking all Indian followers of Christ to stop following a Christianity that has lost its way, and start following their King and his divine directives. I am asking all emissaries of Western Christianity to examine their hearts, to stop serving their own religious expansionism and begin seeking to building the Kingdom of God, not their individual empires.

Instead of everyone building his own **paneled house** (Hag 1; ministry, church, denomination**), it is high time to build the House of God together**, the only building project both the Father and Jesus are working on together (John 14:1-2; Eph 2:19-22; 1 Pet 2:5) and are inviting us to join them.

It will be a strategic and healthy move if all citizens of the Kingdom of God will stop calling themselves Christians, and end the baseless and childish competition with other religions to impress and convert each other. This will avoid much unnecessary bloodshed.

No-where in the Bible are people asked to join the religion of Christianity or change from one religion to the other. It was outsiders in Antioch that labeled the early saints as “Christians”, but the true identity of Citizens of the Kingdom **is in heaven** (Phil 3:20), not in a man-made religion or a box other people prepare for them.

Citizens of the Kingdom do not need “Christian temples” and auditoriums. They function and multiply best when they are forming Kingdom fellowships in their homes and in business, where they live, work and play. In times of religious persecution, they can simply continue to remain underground and function under the radar of a Big Brother regime. Already now, the house church movement in India is demonstrating that.

**Wolfgang Simson**, of German/Israeli/Hungarian descent, is a globally known reformer and champion of game changing innovators. He is proposing a **Kingdom Reformation**, a move from established religious Christianity to the Kingdom, God's Nation, based on the kingship, legality and economy of Christ the King.

**PASTOR. S.ROMILTON**
**NEW DELHI. Cont: +91 98106 46981**

அடைபட்ட அக்கினி

NEW DELHI - 9810646981